

# இளைஞர் வாழ்வில் திருக்குறள்

தமிழண்ணல்



# இளைஞர் வாழ்வில் திருக்குறள்

தமிழண்ணல்

*விற்பனை உரிமை:*
மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா காம்ப்ளக்ஸ்,
48, தானப்ப முதலி தெரு,
மதுரை – 625 001.

முதற்பதிப்பு: நவம்பர், 1997
உரிமை(c): தமிழண்ணல்
இது ஒரு 'சிந்தாமணிப் பதிப்பக' வெளியீடு

விலை: ரூ. 25/-

## நூலைப் பற்றி

| | | |
|---|---|---|
| நூல் | : | இளைஞர் வாழ்வில் திருக்குறள் |
| பொருள் | : | இலக்கியம் |
| ஆசிரியர் | : | தமிழண்ணல் - |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 1997 |
| பக்கங்கள் | : | 128 |
| தாள் | : | சேசாயி கிரீம் ஓவ் 10.5 K.G. |
| அட்டைக்கட்டு | | |
| ஒளி அச்சுக்கோப்பு | : | அகரம், கும்பகோணம் |
| அச்சாக்கம் | : | மருதுபாண்டியர் அச்சகம், பைக்கரா, மதுரை - 4. |

**SALES RIGHT:**
**MEENAKSHI PUTHAKA NILAYAM**
**MAYURA COMPLEX**
**48 DHANAPPA MUDALI STREET,**
**MADURAI - 625 001.**

## நன்றி மலர்

இந்நூல் நமது இளையோர் இருபாலருக்கும் குறள் வழி வாழ விழையும் ஆர்வலர் அனைவருக்கும் பயன்படுமாறு எழுதப் பெற்றுள்ளது.

மேனிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்கட்கு இந்நூற் கருத்துக்கள் போய்ச் சேர்ந்தால் அவர்கள் வாழ்வு ஒளிபெறும். கல்லூரிகளில் இந் நூலைப் பாடநூல் ஆக்க வேண்டு மென்பது என் விழைவு!

என் நூல்களை வெளியிட்டு, எனக்கு உற்றுழி உதவிய நண்பராக, உடன் பிறவாத் தமையனாராக, விளங்கியவர், மீனாட்சி புத்தக நிலைய உரிமையாளர் செ. செல்லப்பன் அவர்கள். அவர் எனக்குக் கிடைத்த காந்தியடிகள்: வாய்மையின் திருவுருவம்: பண்பின் சிகரம்: வள்ளுவர் படைத்த மனித நாகரிகத்திற்கு ஒரு நல்ல சான்றாகத் திகழ்ந்த சான்றாண்மையாளர். அவர் மறைந்து ஓராண்டாகிறது. அவர் மறைவிற்குப் பின், மீனாட்சி புத்தக நிலைய வழி வெளிவரும் என் முதல் நூல் இது.

இதனை அப் பெருந்தகையின் நினைவாக வெளியிடுவதில், என் மனம் ஆறுதலடைகிறது.

தமிழண்ணல்

## இளைஞர் வாழ்வில் திருக்குறள்

### உள்ளுறை


1. உலகை வெல்லும் திருவள்ளுவர் 7
2. உலகப் பொதுமை அறம் 19
3. 'தன்'னை மையமிட்டது இவ்வுலகம் 28
4. தன்னம்பிக்கையும் தன்முயற்சியும் 40
5. ஆளுமை மேம்பாடு 59
6. சொல்வன்மை 67
7. பகைமையை வெல்லுதல் 82
8. ஆள்வினைத் திறன் 90
9. பழகும் மனிதப் பண்பாடு 110



சமர்ப்பணம்

# திரு. செ. செல்லப்பன்

உரிமையாளர், மீனாட்சி புத்தக நிலையம்

# இளைஞர் வாழ்வில் திருக்குறள்

## 1

## உலகை வெல்லும் திருவள்ளுவர்

புதுதில்லியில் ஒருநாள், சாகித்திய அக்காதெமியின் சிறப்புக் கூட்டம் நடந்துகொண்டிருந்தது. குளிர் அரங்கில் சுமார் நூற்றைம்பதின்மர் கூடியிருந்தனர். குசராத்தைச் சேர்ந்த இந்தியப் பேரறிஞர், ஆண்டுச் சிறப்புப் பேருரையை ஆங்கிலத்தில் நிகழ்த்திக் கொண்டிருந்தார். ‘இந்திய இலக்கியக் கருத்துரு’ - பேச்சுத் தலைப்பு (Idea of Indian Literature). அதனால் தமிழிலக்கியப் பெருமைகளையும் விளக்கும் கட்டம் வந்தது. தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியம் எல்லாவற்றையும் தொட்டுப் பேசியது வியப்பைத் தந்தது. அதிலும் திருக்குறளின் சிறப்பைக் கூறியபொழுது, மூன்று குறள்களை ஆங்கில ஆக்கத்தில் தெளிவாக நிறுத்திப் படித்தார். மூன்று குறள்களையும் கேட்ட இந்திய அறிஞர் பேரவை, ஒவ்வொரு குறளுக்கும் கைதட்டி ஆரவாரம் செய்தது, வியப்பினும் வியப்பாயிற்று. அவையில் இருந்த தமிழர்களாகிய தீபம் நா. பார்த்தசாரதியும் நானும் மெய்சிலிர்த்துப் போனோம். கூட்ட முடிவில் அப் பெருந்தகையை அணுகி வணங்கிக் கைகுலுக்கி நன்றி தெரிவித்துக் கொண்டோம்! அப்பேருரை பிறகு சாகித்திய அக்காதெமியால், சிறுநூலாகவும் வெளியிடப்பெற்றது.

### உமா சங்கர் ஜோஷியின் உள்ளங்கவர்ந்த திருக்குறள்

குசராத்தைச் சேர்ந்த அப் பேரறிஞர் உமா சங்கர் ஜோஷி, காந்தியடிகளுடன் பழகியவர்; நாட்டுத் தந்தையின் அடியொற்றி வாழ்ந்த சான்றோர். நெடிய தோற்றமும்

தாள்தொடு தடக்கையும் உடைய, ஆளுமை மிக்க பேரறிவுப் பெருந்தகை. அவர் வாயிலிருந்து, குறளாக்கத் தொடர்கள் வெளிப்பட்டதும், அதைக் கேட்ட தமிழரல்லாதார் கூடிய பேரவை மகிழ்ச்சி ஆரவாரம் வெய்ததும் என்னால் மறக்கவியலாத நிகழ்ச்சியாயின. திருவள்ளுவரின் கருத்துவீச்சு, இன்றும் உலகை ஆள்கிறது! அங்ஙனம் 'கேளாரும் வேட்ப மொழிந்தாரோ' அவர்! தாம் இல்லாத இடத்தும், தம்மை அறியாரிடத்தும், கணப்பொழுதில் தம் செல்வாக்கைச் செலுத்துமளவு அவர் எழுத்தில் ஆளுமை இருக்கிறதே! அவரெழுதிய மூலநூலையே படிக்கும் வாய்ப்புப்பெற்ற நாம் கூடத் தேர்வுசெய்ய முடியாத மூன்று தனிச்சிறப்புக் குறள்களை, இந்தக் குசராத்தியர் எங்ஙனம் தேர்வு செய்தார்? திருக்குறளைப் படித்து அவையை வென்றுவிட்டாரே! ஆம்! பேரறிஞர் ஜோஷி அவர்களின் வடிவில், வள்ளுவர்தான் அன்று 'வெல்லும் சொல்'லாலே இந்த உலகை வென்று காட்டினார்.

செருமானியப் பெருந்தகை ஆல்பர்ட்டு சுவைட்சர் திருக்குறளை மொழிபெயர்ப்பில் படித்து விளங்கிக் கொண்ட அளவு, தமிழராகப் பிறந்த நாம் மூலத்தைப் படித்து விளங்கிக் கொண்டோமில்லை. 'இன்னா செய்யாமை' அதிகாரத்தைப் படித்த உருசிய நாட்டு நல்லறிஞர் டால்ஸ்டாய், 'இந்து குறள்' என்ற தம் கட்டுரையில் அதன் கருத்துக்களை வியந்தெழுதிய அளவு, குறள் நூலில் எப்பகுதியும் நம் உள்ளத்தைத் தொட்டதாக இதுவரை சிந்தித்தோமில்லை. டால்ஸ்டாயின் நூல்களை விரும்பிப் படித்த காந்தியடிகளின் 'அகிம்சை'க் கோட்பாடு, உலகப் புகழ்பெற்றது. அதற்கு அடித்தளம் 'இன்னா செய்யாமை'யில் தொடங்குகிறது என்பதை நம்மில் எத்தனை பேர் அறிவோம்?

## உச்சத்தைத் தொடும் கருத்து வலிமை

திருக்குறளில் அறக்கோட்பாடுகள், உச்சத்தைத் தொடும் கருத்து வலிமையோடு கூறப்பட்டுள்ளன. அதனால்தான்

அவை உமா சங்கர் ஜோஷி போன்ற சிந்தனையாளர் களையும் ஈர்க்கவல்லனவாயின. அவர் தேர்ந்தெடுத்துச் சொன்ன மூன்று குறள்களையும் காண்போம்!

உலகில் வறுமை என்பது எது? உறைவதற்குச் சொந்த வீடில்லா விட்டால் வாடகை வீட்டில் இருக்கலாம்: வானமே கூரையாக மர நிழலில் வாழ்வோர் பலர். உடையில்லாவிடிலும் கந்தலைக் கூடக் கட்டிக்கொண்டு காலந் தள்ளலாம். ஆனால் வயிற்றுக்கு உணவின்றி, ஒருநாள் ஒருபொழுது கழித்தல் இயலாது. பசியின் கொடுமையே, உலகிலுள்ள கொடுமைகளிலெல்லாம் மிகவும் கொடிய தாகும். அடிப்படைத் தேவைகளான இம் மூன்றும்-உறையுள், உடை, உணவு-இல்லாமையே ஏழ்மை எனப்படும். எனினும் பசியின் கொடுமை சொல்லுந்தரத்ததன்று: அதுவே வறுமை எனப்படும்.

சொல்ல முடியாத ஒன்றைச் சொல்வது எப்படி? வள்ளுவர் சொன்னார்,

**இன்மையின் இன்னாத(து) யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது. (நல்குரவு 1041)**

என்று. இன்மை-ஒன்றுமில்லாத நிலைமை, வறுமை. "வறுமையை விடத் துன்பம் தருவது எது என்று கேட்கிறீர்களா? வறுமையை விடத் துன்பம் தருவது அவ்வறுமையேயாகும். அதற்கு இணையாக வேறொன்றைச் சொல்வதற்கில்லை". நடையழகாலும், தமிழர்களாகிய நம்மைக் கவர்ந்து, சிந்தனையைத் தூண்டி வழிகாட்டக் கூடிய இதை நாம் கண்டுகொள்ளுமுன், இதன் கருத்துவலிமை ஒன்றே வேற்று மொழியாளரைக் கவர்ந்ததெனில் குறளின் சிறப்பைக் கூறவும் வேண்டுமோ?

கயவர்கள் யாருக்கும் அடங்கமாட்டார்கள்? தங்கள் அறிவுக்கும் சிந்தனைக்கும் இடம் கொடுக்காமல், அவ்வப்போது தாம் நினைத்தபடி திரிவார்கள். மேலுலகில் எல்லோருக்கும் எல்லாம் கிடைப்பதால், தேவர்களும்

கவலை இன்றி வாழ்வார்கள் என்றும் தாம்தாம் நினைத்தபடி நடப்பார்கள் என்றும் கதைகளில், புராணங்களில் படிக்கின்றோம்.

திருவள்ளுவர் இக் கயவர்களைத் தேவர்களுக்கு ஒப்பிடும் போது, அங்கதக் குறிப்புடன் நகைச்சுவை இழையோடுகிறது.

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான். (கயமை 1073)

தாம் மேவன-தாம் விரும்புவனவற்றையே செய்து, நடப்பதால் கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பாவார்களாம்! என்ன கேலி, கிண்டல்! எதற்கும் கட்டுப்படாமல், நினைத்தபடி அலையும் கீழ்மக்கள் என்பதை நகை யாடுகிறது இக்குறள்.

நட்பு பிரியும்போது துன்பம் தரும். ஆனால் அறிவில்லாதவருடன் நட்பு ஏற்பட்டுவிட்டால், எப்பொழுது விலகலாம் என்றுதானே தோற்றும்! "அறிவில்லாதவர் களுடன் கொண்ட நட்பு மிக இனிது. ஏன் தெரியுமா? பிரியும்போது அது எவ்விதத் துன்பமும் தருவதில்லை, அதனால்!"

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில். (பேதைமை 839)

பீழை-துன்பம், கேடு. உலகில் பலருடனும் பழகும்போது, எத்துணை விழிப்பாயிருந்தாலும், இவ்வாறு நேர்வது இயல்பே. அதிலிருந்து விடுபட நேர்ந்தால், எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகிறது! தெரியாமல் பழகத் தொடங்கினோம்; நல்ல வேளை; தப்பினோம் என்று மகிழ்கின்றோமல்லவா?

திருக்குறள் என்ற ஒரு பானைச் சோற்றுக்கு, இந்த மூன்று பருக்கைகளை மட்டும் பதம் பார்த்தால் போதுமா? ஒரு

வேற்றுமொழிச் சான்றோர் உள்ளத்தையும் கவர்ந்தவை என்பதற்காக எண்ணிப் பார்த்தோம். திருக்குறள் வாழ்க்கை நூல்; அன்றாடம் பயன்படும் நூல். இன்றைய இளைஞர்கள்-ஆண்பெண் பாலர் அனைவருக்கும் வழிகாட்டக்கூடிய குறள்களைத் தேடித் தேர்ந்தெடுத்து, நாமும் உமா சங்கர் ஜோஷி அவர்களைப் போல நினைத்துப் பார்ப்போம். அது நம் வாழ்வுக்கு வளம் சேர்க்கும்.

## ஆல்பர்ட்டு சுவைட்சர்

செருமானிய மெய்யியல் மேதை, மண்ணுயிர்க்கு அன்பர் சுவைட்சர் இலத்தீன் அல்லது செருமன் மொழிபெயர்ப்பில் திருக்குறளைப் படித்திருக்கிறார். அதனால் தாம் எழுதிய 'இந்தியச் சிந்தனை வளர்ச்சி' என்ற நூலில், ஐந்து பக்கங்கள் நம் திருக்குறள் பற்றியும் விளக்கியுள்ளார். இந்தியாவில் பிற நூலார் சிந்தனைகள் பல, 'வாழ்க்கை மறுப்புச் சிந்தனைகள்' (Negative); திருவள்ளுவர் சிந்தனைகள் முழுவதும் 'வாழ்க்கை உடன்பாட்டுச் சிந்தனைகள்' (Affirmative). திருக்குறளில் மேலுலகம், மறுபிறப்பு என இவ்வுலகிற்கு அப்பாற்பட்ட கருத்துக்களும் ஆங்காங்கு, தூரத்து மேகங்கள் போல இடம் பெறுகின்றன. என்றாலும் திருவள்ளுவர் சிந்தனையெல்லாம் இவ்வுலக வாழ்வு பற்றியனவே. அம் மேலுலகச் சிந்தனைகளும் இவ்வுலக நல்வாழ்வை வலியுறுத்தற் பொருட்டே எடுத்தாளப்படுகின்றன. உலகில் அறம் சொன்னார் அனைவரும் அதனால் ஒரு பயனுண்டு, புண்ணியமுண்டு என ஒரு பயன் கருதியே கூறியுள்ளனர். திருவள்ளுவர் ஒருவர்தான்,

> நல்லாறு எனினும் கொளல்தீது; மேலுலகம்
> இல்லெனினும் ஈதலே நன்று. (ஈகை 222)

என, அறத்திற்காக அறத்தைச் செய்க என வற்புறுத்தி யுள்ளார் அப்பெருந்தகை, திருவள்ளுவரின் உள்ளக்

கிடக்கைகளை விளக்கிச்செல்லும் பொழுது, தமிழராகப் பிறந்த நம்மனம் கூச்சப்பட்டு நாணுகிறது! சுவைட்சரின் மனங்கவர்ந்த குறள் இது. நம் மனங்கவர்ந்த குறள் எது என்று கூற, நம்மால் இயலுமா? எல்லாக் குறளும் மனங் கவர்வனவே என்றால் போதுமா?

திருவள்ளுவர் பேசிய மொழியை நாமும் பேசுகிறோம். அவர் எழுதிய மொழியில் நாமும் படிக்கக் கொடுத்து வைத்திருக்கிறோம். இத்தகைய பேறு பெற்றும், அத் தமிழ்மறையின் திட்பநுட்பங்களை நாம் அறிய வேண்டாவா? நம் வாழ்நாளில் சில காலமாவது நமது மறையைப் பயிலக் கூடாதா?

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்ற பாரதி வாக்கு, அப்பெருநூல் தமிழில் தோன்றியது என்பதற்காகச் சொல்லப்பட்ட 'உபசார வார்த்தை'. நாம் திருக்குறளை உலகமொழிகளில் மொழிபெயர்த்துத் தரவோ, அதற்குத் துணை செய்யவோ, அதன் திட்ப நுட்பங்களையறிந்து உலகமொழிகளில் விளக்கவோ இதுகாறும் போதிய அளவு முயன்றோமில்லை.

இளைஞர்களின் உள்ளத்தைத் தொடும் திருக்குறள்களை இங்குத் தொடர்ந்து காண்போம். மிகச் சிந்தித்துத் தேர்ந்தெடுத்த இக்குறள்கள் நம் இளைஞர்கள்-மாணவர்கள்-இளமை மாறா மனமுடையோர் அனைவர்தம் உள்ளங்களையும் ஈர்க்கும். தொடர்ந்து குறளைப் பயிலவும் அதன் சீரிய கூரிய செவ்விய திறன்களையறியவும் அவற்றைத் தம் வாழ்க்கையிற் கடைப்பிடிக்கவும் பயன்படும். உலக மொழிகளில், வாய்ப்பு நேருங்கால் எடுத்துரைக்கவும் இவை தூண்டுகோலாகும்: துணையுமாகும்!

## மேலை நாட்டார் உள்ளங்கவர்ந்த காதற் குறள்களில் ஒன்று

அருள்தந்தை ஜே. லாசரஸ் என்பார் திருக்குறளை ஆங்கிலத்தில் தந்தவர்களில் ஒருவர் (1885). அவர் செருமன்

நாட்டு அறிஞரும் திருக்குறளைச் செருமன் மொழியில் மொழிபெயர்த்தவருமாகிய டாக்டர் கிரால் என்பவரைக் குறிப்பிட்டு, அவர் மனங்கவர்ந்தது ஒரு காமத்துப்பால் குறளே என்றும் அதனாலேற்பட்ட ஈடுபாட்டாலேயே அவர் தமிழ்க் கவிதைகளையும் திருக்குறளையும் படித்தார் என்றும் எழுதியுள்ளார். டாக்டர் கிரால் 1854-இல் திருக்குறளைச் செருமனியில் மொழியாக்கம் செய்தவர். அவர் உள்ளத்தைக் கவர்ந்த குறள் எது தெரியுமா?

காதலரிடையே பேச்சுக்கு அதிக இடமில்லை; கண்களே பேசிக் கொள்கின்றன. அதுவும் முதன்முதல் சந்தித்து, உறவாடும் காலங்களில் கண் பார்வைக்கு அதிக இடமுண்டு. ஒரு மறைமுகமான குறிப்போடு பார்க்கும் பார்வை 'நோக்கு' எனப்படும். காதலி முதலில் பொதுவாகப் பார்த்தாள்; அந்த அழகிய பார்வையில் அவன் மயங்கினான். அது அவனுக்குத் துன்பம் தந்தது. அவளுடைய அன்பைப் பெற அவனுள்ளம் துடித்தது அவள் மீண்டும் பரிவோடு பார்த்தாள். அதனால் அவள் சம்மதத்தை அறிந்த அவன் உள்ளம் மகிழ்ந்தது. துன்பம் நீங்கியது. அப்போது அவன் நினைத்தான். இவளது ஒரு நோக்கு-பார்வை காதல் நோயை உண்டாக்கியது; அதனால் வாடிய என்னை மீண்டும் அவள் பரிவோடு பார்த்ததும் அந்நோயை அது நீக்கியது. மற்ற இடங்களில் நோய்க்கு மருந்து வேறு எங்கோ தேட வேண்டும். இவள் தான் செய்த நோய்க்குத் தானே மருந்தாகிறாள். இரண்டும் இவள் பார்வையிலேயே உள்ளன. இவ்வாறு தொடக்க காலக் காதல் திளைப்பில் தலைமகன் எண்ணி, வியந்து பேசுகிறாள!

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்குஒன் றந்நோய் மருந்து. (குறிப்பறிதல் 1091)[1]

---

1. It wis one of the Couplets in the third part (Kamattuppal) of the poen referring to the two looks of a maid-the one which kills and th: other which cures the looked that led Dr. Graul to admire Tanil Poetry and study the Kural. - Rev. J. Lazarus.

இவளது மையுண்ட (மை தீட்டிய) கண்களில் இருவகை நோக்கு உளது. ஒரு நோக்கு நோயை உண்டாக்குவது; மற்றொன்று அதற்கு மருந்தாவது. இதைப் படிக்க நேர்ந்த டாக்டர் கிரால், இதன் புதுமையான கற்பனையில் ஈடுபட்டு, நூலையே படிக்கவும் மொழிபெயர்க்கவும் நேர்ந்தன என்றால் இதன் தனித்தன்மையை விளக்க வேண்டுமா?

## உளவியல் நுட்பம் அமைந்த குறள்

டாக்டர் ரோடரிக் ஹின்ட்ரி எனும் மேலைநாட்டு அறிஞர், 'ஒருவன் தனக்கு இன்னாதது-துன்பம் தருவது எனத் தான் உணர்பவற்றை, (பிறர்க்கும் அவை அவ்வாறுதானே துன்பம் தரும் என எண்ணி), அத்தகையவற்றைப் பிறர்க்குச் செய்தலைத் தவிர்த்தல் வேண்டும்' என்ற கருத்தமைந்த 'இன்னா செய்யாமை' அதிகாரக் குறளைப் படித்து, அதில் தாம் ஈடுபட்டதை விளக்குகிறார்.

**இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை**
**வேண்டும் பிறன்கட் செயல். (இன்னாசெய்யாமை 316)[2]**

பலர் தமக்குப் பிறர் 'துன்பம்' தருவதாகச் சொல்கின்றனர். ஆனால் எது துன்பம் என்பதில் பாருக்கும் தெளிவில்லை. திருவள்ளுவர் இதை விளக்குவதற்காக மிக நீட்டி முழக்க விரும்பவில்லை.

"பிறரால் உனக்குச் செய்யப்படுவன துன்பம் தருவதாக, எதையெதை உணர்கிறாயோ, எது உனக்கு மனவருத்தத்தை உண்டாக்குகிறதோ, எதனால் நீ கண்ணீர்விட நேர்கிறதோ அத்தகையவற்றை நீ பிறர்க்குச் செய்யாதே! நீ துன்பப்படுவது, வருந்துவது, கண்ணீர் விடுவது போலத்தானே அவர்களும் அவதிப்படுவர் அதை நினைத்துப்பார்." "நீ துன்பம் தருவனவாக எவ்வெவற்றை

2. When a man hath felt a pain for himself, let hin take care that he inflicteth it not on others. Dr. Roderic Hindrey.

உணர்கின்றாயோ அவற்றைப் பிறர்பால் நீ செய்தலைத் தவிர்த்தல் வேண்டும்", என்ற இக் குறட்கருத்து, ஓர் அயல்நாட்டு அறிஞரைக் கவர்ந்தது எனில், நாமும் குறள் நூலை ஆழ்ந்து கற்றால், எத்தனையோ முத்துக்கள் இங்ஙனம் தட்டுப்படுமல்லவா?

நீங்கள் ஒரு காலத்தில் உளவியல் படிக்க நேர்ந்தால், இக்குறளின் நுட்பம் மேன்மேலும் உங்களை ஈர்க்கக்கூடும். இவ்வுலகம் இன்பதுன்பங்களின் கலப்பிடம். அவை சர்க்கரையும் மணலும் போல், பாலும் நீரும் போல் கலந்து கிடக்கின்றன. கூடியவரை பிறரைப் பழித்துப்பேசிவிட்டு, பிறர்க்கு மனம் வருந்தும் செயலைச் செய்துவிட்டு, தாம் எதுவும் தீங்கு செய்யாததாகவே உலகில் பலர் நினைக்கின்றனர்; வாதம் பேசுகின்றனர். இந்நிலையில் 'பிறன் செருப்புக்காலால் உன் பாதத்தை மிதித்துவிட்டால், உனக்கு வலிக்கிறதல்லவா? அவ்வாறெனில் நீ பிறன் காலை மிதிக்காதே! நீ பிறனால் வஞ்சிக்கப்பட்டால், நெஞ்சம் நொந்து அழுது புலம்ப நேருகிறதா? அவ்வாறெனில், நீ தீமையென உணரும் அதனை-உன்னை அழுது அரற்றவைக்கும் அதனைப் பிறனுக்கு நீ செய்யாதே! செய்தால் அவனும் இப்படி நோவான்-வருந்து வான்-அழுவான் என்பதை எண்ணிப்பார்!'-இவ்வாறு இக்குறள், மனிதர்கள் உலகில் பழகும் பண்பாட்டையே நமக்குக் 'குறுகத் தறித்த குறளாகத்' தருகின்றது. அதனாலன்றோ வெளிநாட்டவர், மொழிபெயர்ப்பைப் படித்த அளவிலும் இக் குறள்களில் ஈடுபட்டுள்ளனர். நாம் இவற்றை நம் மொழியிலேயே படிக்கக் கிடைத்தும், இவ்வாறெல்லாம் சிந்திக்காதிருப்பதும் வாழ்க்கையில் பயன்படுத்தாதிருப்பதும் 'குறை' என்று மட்டும் கூறமுடியாது; 'குற்றம்' என்றே கூறலாம்.

## ஓர் 'அதிகாரம்' உலகை ஆள்கிறது!

ஐரோப்பியப் பாதிரிமார்கள் தமிழகம் வந்து திரும்பியபோது, திருக்குறளைத் தங்கள் உள்ளங்களில் சுமந்து

சென்றார்கள்; தங்கள் மொழிகளில் இறக்கிவைத்தார்கள்! இதனால் திருக்குறள் உலகச் செல்வாக்குப் பெற்றது. உருசிய நாட்டுப் பேரறிஞர் டால்ஸ்டாய் உலகப் பேரறிஞர்; ஒப்பிலாச் சான்றோர். "வன்முறையில் புரட்சியை உண்டாக்கி சமுதாய அரசியல் நிலைகளை மாற்ற முயல்வது அறிவுடைமை ஆகாது; அகிம்சை வழியே-அன்பு நெறியே-அறப்போர் மூலமே மாபெரும் வெற்றி பெற இயலும்" என்ற கொள்கையை முதன்முதல் விளக்கிப் பரப்பியவர் டால்ஸ்டாய்! தம்முடைய இக்கொள்கையை விளக்க, டால்ஸ்டாய் 'கடவுளின் திருநாடு உன் உள்ளத்திலேயே இருக்கிறது' (The Kingdom of God is within you) எனும் நூலை 1893-இல் வெளியிட்டார். உருசியா இந்நூலைத் தடைசெய்தது; அமெரிக்கா ஆர்வத்துடன் வரவேற்றது. காந்தியடிகள் இந்நூலை விரும்பிப் படித்தார். இதனை அவர் ஒரு பேரற நூல் எனப் போற்றினார். டால்ஸ்டாயைத் தம் குருநாதர் என்றே கூறினார். அவர் விளக்கிய 'அகிம்சைக்' கோட்பாட்டைக் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் நடைமுறைப் படுத்திக்காட்டி, வெற்றிகண்டு, உலகமே வியக்கும்படி செய்தார்.

கி.பி. 1906-இல், டால்ஸ்டாய் 'இந்து ஒருவருக்கு எழுதப்படும் கடிதம்' என்பதை எழுதியுள்ளார். அதில் ஒரு பகுதி 'இந்துக்களின் குறள்' என்பதாகும். (The Hindu Kural). அதில் தம் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த ஆறு குறட்பாக்களை எழுதி விளக்கியுள்ளார். அவை அனைத்தும் 'இன்னா செய்யாமை' எனும் அதிகாரத்தில் உள்ளவை ஆகும். அவற்றுள் இயேசுநாதரின் அறிவுரையைவிட உயர்ந்ததாகவும், உளவியல் நுட்பம் வாய்ந்ததாகவும் காணப்படுகிறது என ஒரு குறளைச் சுட்டியுள்ளார். "தனக்குத் தீங்கு செய்தவர்களைத் தண்டிப்பதற்கரிய சிறந்தவழி, தீங்கு செய்தவர்களே வெட்கப்படுமாறு அவர்களுக்கு நன்மை தரும் செயல்களைச் செய்து, அத்தீங்கினை அறவே மறந்துவிடுவதாகும்".

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (இன்னாசெய்யாமை 314)

தாம் படித்த ஆறு குறட்பாக்களின் அடிப்படையிலேயே, டால்ஸ்டாய் தமது அகிம்சைக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளார். அறப்போராட்டம் பற்றிய சிந்தனைக்கு இதுவே உரமூட்டியுள்ளது. காந்தியடிகள் இவற்றைக் கற்றதனால், இக்கோட்பாடு 'செய்முறை'களுக்கு உட்படுத்தப்பட்டு, வெற்றி காணப்பட்டது. இன்று உலகம் 'அகிம்சை'க் கோட்பாட்டை வியந்து போற்றுகிறது.

காந்தியடிகளும், பிறகு ஏரியலின் பிரஞ்சு மொழியாக்கம் மூலம் திருக்குறளைக் கற்றார். "திருவள்ளுவர் ஒரு தமிழ் முனிவர். கிறித்தவ நூற்றாண்டு வரிசையில் முதல் நூற்றாண்டில் அவர் வாழ்ந்ததாகக் கூறுவர். புனிதமான பொய்யா மொழிகளைக் கொண்ட திருக்குறளை அவர் நமக்கு வழங்கியுள்ளார். தங்களுடைய வேதமாகத் தமிழர்கள் இதைப் போற்றுகின்றனர்'' என்று காந்தியடிகள், திருக்குறளைப் படித்துப் போற்றுவதற்குத் தூண்டுகோலாக அமைந்தது, டால்ஸ்டாயின் 'இந்து ஒருவருக்கு' என எழுதிய கடித வடிவான கட்டுரையேயாகும்.

இவற்றைத் தேடிக் கண்டு எழுதிய, திருக்குறள் ஆய்வுச் செம்மல் க.த. திருநாவுக்கரசு, தமது 'சான்றோர் கண்ட திருவள்ளுவர்' என்ற நூலில், "நாம் எல்லாம் திருக்குறளின் சிறப்பினை உணர்வதற்கு முன்பே, நாம் எல்லாம் திருவள்ளுவரின் அறநெறியைப் புரிந்துகொண்டு வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயலுவதற்கு முன்பே ருசிய நாட்டு ஞானியும், உலகப் பேரறிஞருமான தால்ஸ்தாய், 'தமிழருடைய வேதமாகிய திருக்குறளை', உலகப் பொதுமறையாகிய திருக்குறளைச் சிறப்புமிகு அற நூலாகப் போற்றிப் பின்பற்றியுள்ளமை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது", என்று குறிப்பிட்டுள்ளார்.'

இன்று உலகம் போற்றும் 'அறப் போராட்ட' நெறிக்குத் திருக்குறள் அடியெடுத்துக் கொடுத்தது என்ற உண்மை நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

இளமை வாழத் துடிக்கும் பருவம். எதிர்காலக் கற்பனைகளில் மிதக்கும் வயது இது. முன்னேற்றம் தேடும் முனைப்புள்ள காலம் இது. இத்தகைய சிறந்த குறள் முத்துக்கள் சிலவற்றைத் தேடிக்கண்டு விளங்கிக் கொண்டால் நம்மிலும் ஒரு டால்ஸ்டாய், காந்தியடிகள், ஆல்பர்ட்டு சுவைட்சர், உமா சங்கர் ஜோஷி தோன்றக்கூடுமல்லவா?

---

1. கு.த. திருநாவுக்கரசு, சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், கோட்டூர்த் தோட்டம், சென்னை – 85. 1979. ப.67.

# 2

# உலகப் பொதுமை அறம்

சமதருமம், பொதுவுடைமை என்பன அண்மைக் காலமாக உலகெங்கும் பேசப்படும் பொதுமை அறங்களாகும். காரல் மார்க்சு இதனை ஒரு கோட்பாடாக்கி உலகிற்கு வழங்கினார். திருவள்ளுவர்க்கு அன்றே இதனை ஒட்டிய சிந்தனைகள் இருந்தமை நாம் உணர வேண்டியன; பிறர்க்கு உணர்த்த வேண்டியனவுமாகும்.

**பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**

**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை. (கொல்லாமை 322)**

இக் குறள் 'கொல்லாமை' என்ற அதிகாரத்தில் வருவது கருதத்தக்கது. நம் உடைமையைப் பசியால் வாடும் உயிர்கள் முதல் பலருக்கும் பகுத்துக் கொடுத்துவிட்டுப் பிறகு நாம் உண்ண வேண்டும். மற்றவர்க்குப் பகுத்துப் பின் தான் உண்ணுதலே, 'பகுத்துண்ணுதல்' ஆகும். அங்ஙனம் இன்றேல் அது பிற உயிர்களைப் பாதுகாவாது கொல்வதற்குச் சமமாகும் என்ற கருத்திலேதான், இது 'கொல்லாமை' அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது பகுத்துண்ணாமை, கொலைக்குச் சமம்; பகுத்துண்பதே கொல்லாமை ஆகும். இக்கருத்து மேன்மேலும் சிந்திக்கத் தூண்டுவதாகும். 'பல உயிர்களைப் பாதுகாத்தல்' என்பதால், அவற்றை உயிர் போகாது காக்க, செல்வப் பரவல் தேவை என வலியுறுத்தப்படுதல் காண்க. நூல்கள் பல உலக நடப்பு, நிலைபேறு பற்றியன. அவற்றில் தொகுப்பட்டுள்ள உலக அறங்களும் பல. அவை அனைத்திலும் இச்'சமதருமமே'

(Socialism), பொதுவுடைமையே தலையாயது என்கிறார் வள்ளுவப் பெருமகன்.

## செல்வத்தைச் சேமிக்கும் இடம்

செல்வம் சேரச் சேர அதை எங்கே சேமிக்கலாம் என எண்ணுவோர் பலர்; எவ்வெவ்வாறு பதுக்கலாம் எனத் திட்டமிடுவோர் பலர். இங்ஙனம் பணம் ஓரிடத்துக் குவியக் குவிய, மற்ற இடங்கள் 'வறுமை' எய்துகின்றன. குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு பணமே பணத்தைச் சேர்த்துக் கொள்கிறது; வறுமையே மேலும் வறுமையடைகிறது.

பணம் ஓரிடத்துக் குவிவதை எவ்வாறேனும் தடுக்கவேண்டும். செல்வம் எங்கும் பரவ வேண்டும். ஆற்றுநீர் பல கால்களாக ஓடி நாடு முழுவதும் பரவுவது போல, செல்வமும் மன்பதை முழுவதற்கும் சென்று சேர வேண்டும்.

அதனால் திருவள்ளுவர் செல்வர்களைக் கூவி அழைத்து, "இங்கே வாருங்கள்! நான் உங்கள் செல்வத்தைச் சேமித்து வைக்கும் இடமொன்று கூறுகின்றேன். அது வங்கியன்று; எந்த நிதி நிறுவனமும் அன்று. நான் சேமித்து வைக்கச் சொல்கிற இடம் மோசம் போகாது; முதலுக்கே மோசமென ஆகாது". இவ்வாறு அவர் கூறுவதைக் குறித்து வைத்துக்கொண்டு, அதன்படி நடப்பது, செல்வர்களுக்குப் பாதுகாப்புமாகும்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (ஈகை 226)

செல்வம் பெற்றான் ஒருவன் அப்பொருள் 'வைப்புழி'- சேமித்து வைக்குமிடம் யாதெனத் தேடுவானேல், அது எதுவும் அற்ற வறுமையாளரானவர்தம் அழிபசியைத் தீர்த்து வைப்பதேயாகும். அவ் வயிற்றுப் பசியைத் தீர்ப்பதே-அவன் வயிற்றுக்குச் சோறிடுவதே சேமிக்கும் இடமாகும். இன்றேல் அழிபசி, உலகையே அழித்துவிடும். அந்த அழிவு

செல்வனையும் பாதிக்கும். 'வைப்புழி' என்பதால், பசி தீர்க்குமாறு செல்வம் பரவலாக்கப்பட வேண்மென அறிகிறோம்.

இங்ஙனம் பொருளைச் சேமிக்குமிடமென்று, அழிபசியால் வருந்துவோர்தம் வயிற்றைக் காட்டிய பொருளாதார நுட்பம் எண்ணி எண்ணி வியக்கற்பாலதாகும். 'அழிபசி'யைத் தீர்த்தல் என்றால் அப்பசியை உண்டாக்கும் வேலையின்மை, வறுமை முதலிய பல சமுதாயக் கேடுகளைக் களைதல் வேண்டும் என்பதும் பெறப்படும்.

## பிறப்பால் ஏற்றத்தாழ்வின்மை

மனித இனத்துள் பிறப்பினால் ஏற்றத்தாழ்வு கூடாது. மனித உயிர்களேயன்றி, பிற உயிரினங்களும் மதிக்கப்பட வேண்டும். மனிதநேயம் போல, ஆன்மநேய ஒருமைப்பாடு என்பதும் உலக உயிர்களைச் சமமாக-தனக்கு இணையாக மதிப்பதாகும். மனிதர்களிடையே 'வருணாசிரமம்' பேசி, உயர்வு தாழ்வு, தீண்டாமை கருதுவது மிகப்பெரிய குற்றமாகும். மக்கள் யாவரும் சமமே. அவரவர் செய்யும் செயல்கள்-தொழில்கள் வேறுபடலாம். ஒவ்வொரு செயலும்-தொழிலும் தனித்தன்மையுடையது. தச்சர் தொழில் இயல்பு வேறு; கொத்தரது தொழில் வேறு. கணக்கர் நிலைமையும் இயல்பும் போக்கும்; எழுத்தாளர் நிலைமையும் இயல்பும் போக்கும்; ஓர் ஆலையை நிருவகித்து ஆள்பவர் நிலைமையும் இயல்பும் போக்கும் தனித்தனிச் சிறப்பியல்புகள் உடையனவாகும். அவை ஒன்றுடன் ஒன்று ஒவ்வா-ஒப்புமைப்படா.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (பெருமை 972)

அவரவர் செயல் வேறுபாடுகளால் மட்டுமே தனித்தன்மைகள் அமையும். பிறப்பால் வேறுபாடு பேசியவர்க்குக் கூறிய அறிவுரை இது.

## ஒப்புரவு

ஒப்புரவு என்பது உலக நடப்பை அறிந்து, தனிமனிதன் அதனுடன் ஒட்டி இணைந்து வாழ்தல். நல்குரவு, துப்புரவு, தாக்குரவு என்பவற்றிற் போல 'உரவு' இறுதி ஒட்டாகும். 'ஒப்பு'-உலகுடன், அனைவரும் 'சமம்' என்ற உணர்வுடன் ஒட்டி வாழ்வதாகும். இன்றைய 'சோஷலிசம்' என்ற சொல்லுக்கு நிகராகப் பழந்தமிழர் வழங்கியதும் ஒருபுடை ஒப்புமையுடையதுமான சொல் இது.

தனிமனிதன் எத்துணைப் பெரிய செல்வனாயினும், பதவியில் உள்ளவனாயினும் அவன் உலகிடை ஓர் உறுப்பே ஆவான். அவனது தனிச் சிறப்புப் பலவாயினும், அவனும் கந்தலாடை உடுத்திய வறுமையாளனும் மனிதன் என்பதில் வேறுபாடில்லை. ஊரில் குடிநீர்ப் பஞ்சம் என்றால், செல்வனுக்கும் அதன் பாதிப்பு இருக்கும். அடுத்த தெருவில் நெருப்புப் பற்றி எரிகிறது என்றால், 'நமக்கென்ன' என்றிருக்க முடியுமா? எனவே தனி மரம் தோப்பாகாது என்பதை அறிந்து, உலகுடன் இணைந்தே வாழவேண்டும்; இணைந்து தான் வாழமுடியும்.

தான் சேர்த்த செல்வத்தை, இவ் ஒப்புமையை உணர்ந்து, மற்றவர்க்கும் பயன்படுமாறு செய்து வாழவேண்டும். கல்விச் சாலை இல்லாத ஊரில் கல்வி வளர்ச்சிக்கு உதவுதல்; மருத்துவ வசதியில்லாத சிற்றூரில் மருத்துவமனை கட்டுதல்; பயணிகள் தங்க நிழற்குடை அமைத்தல்; வெயில் காலத்தில் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல் எல்லாம் 'ஒப்புரவு' ஆகும். அதாவது உலக நடப்பை அறிந்து, தக்கார்க்கு-தேவை உள்ளவர்க்கு - கட்டாயத் தேவைகளுக்கு உதவி உலகுடன் ஒத்து வாழ்வதே ஒப்புரவாகும். நாம் சேர்க்கும் செல்வமெல்லாம் இவ்வாறுதான் பயன்படவேண்டு மென்பார் திருவள்ளுவர்(212).

'நான் பாடுபட்டேன்; உழைத்தேன்; என்னை யாரும் எதுவும் கேட்க இயலாது; நான் தனித்து நானாகவே வாழ்வேன்', என யாரும் ஒதுங்கி வாழ முடியாது.

ஒப்புரவைக் 'கைம்மாறு வேண்டா கடப்பாடு'(211) என்றார் திருவள்ளுவர். கடப்பாடு-கடமை; செய்தே தீரவேண்டியது. இதற்குக் கைம்மாறாக மக்களிடம்- உதவிபெற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்கக் கூடாது. ஒப்புரவு செய்து வாழ்வதே வாழ்வாகும். ஊர், நாடு, நகரம் துன்புறுவதைக் கண்டும், ஆடாது அசையாது ஒருவன் இருந்தால், அவன் செத்தாருள் ஒருவனாகக் கருதப்படுவான் (214). உயிரிருந்தால் மன அசைவு இருக்குமல்லவா? கொஞ்சமாவது இரக்க உணர்வு கசியுமல்லவா?

பண்பாளரிடம் சேர்ந்த செல்வம் எவ்வெவ்வாறு பயன்படும்; பயன்படவேண்டும்? உலக நடையை அறிந்து பிறர்க்கு உதவி வாழ்வது எவ்வெவ்வாறு அமையும்? சில எடுத்துக்காட்டுக்கள் தருகிறார் திருவள்ளுவர்.

பச்சையப்பர் போல், கலைத் தந்தை கருமுத்து தியாகராசர் போல் பல கல்விக் கோயில்களை ஒருவர் கட்டிவைக்கின்றார். அண்ணாமலை அரசர் போல் தனி ஒருவர் பல்கலைக் கழகம் நிறுவுகிறார். இதனால் ஆயிரக்கணக்கானோர் தத்தமக்கு உகந்த-தாம் விரும்பும் படிப்பைப் படித்து முன்னேறுகின்றனர்.

இத்தகையார் செல்வங்கள் ஊருணி நீர்நிறைந்தாற் போல்வன. மக்கள் தத்தமக்கு வேண்டிய அளவு நீரை முகந்து, அவரவர் விருப்பப்படி பயன்படுத்துவது போன்றது இது.

நடுவூருள் நல்ல பழமரம் நன்கு பழுத்து நின்றால், பலரும் அதைப் பறித்து உண்டு மகிழ்வர். எளிதாகக் கிடைக்கும் இனிய சுவையை உண்டு மகிழ்ந்து நலம் பெறுவர். வள்ளல் அழகப்பர் தாம் பிறந்த ஊர்ப் பகுதியில், ஒரு பல்கலைக் கழகம் அமையக் காரணமாயிருந்தார். மூதறிஞர் வ.சு.மா. பாடுவது போல் 'கோடி கொடுத்த கொடைஞன், குடியிருந்த வீடுங் கொடுத்த விழுத்தெய்வம்' வள்ளல் அழகப்பர். தம்

வீடு முதற்கொண்டு கொடுத்ததைப் பழுமரம் உள்ளூரில் பழுத்து நின்று உதவியதற்கு ஒப்பிடலாம். அவர் தம்மைப் பற்றிக் கவலைப்படாது, ஒரு வருமானம் கைவசம் வரும் முன்னரே, அதை ஓர் அறக்கட்டளைக்குத் தருவதாக அறிவித்து விடுவார்.

மருந்தாகப் பயன்படும் ஒரு மரத்தின் வேர், இலை, நரம்பு, பட்டை, காய், கனி அனைத்தும்-அம்மரத்தை அழித்தும் பயன்கொள்ளப்படுவதைப் போல, தென்னாப் பிரிக்காவில் ஆல்பர்ட்டு சுவைட்சர், பழங்குடி மக்களுக்கு மருத்துவம் பார்த்து, அவர்களுக்குக் கல்விக்கண் தந்து, முன்னேற்றம் அடையச் செய்து அரும்பாடு பட்டார். அவர்தம் பணியின் அருமை அறியாது, அம்மக்கள் அவரை எதிர்த்தனர்; பல துன்பங்களை விளைவித்தனர். அவற்றையும் பொறுத்துக்கொண்டு, அவர் அரும்பணி ஆற்றியதை 'மருந்தாகித் தப்பா மரம்போல' உதவியதாக ஒப்பிட்டுச் சொல்லலாம். ஒப்புரவின் மூன்று படி நிலைகளை இவ்வாறு திருவள்ளுவர் உவமை நயம் காட்டி எடுத்துரைத்துள்ளார்.

**ஊருணி நீர்நிறைந் தற்றே உலகம்**
**பேரறி வாளன் திரு.**

**பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்**
**நயனுடை யான்கண் படின்.**

**மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்**
**பெருந்தகை யான்கண் படின். (215–217)**

ஒப்புரவு மூலமே எல்லோரும் சமமாக வாழமுடியும். 'சமம்' என்பது அடிப்படைத் தேவைகளில் எதுவும் குறையின்றி வாழ்வதாகும். வசதி குறைந்தவன் வைத்த

தண்ணீர்ப் பந்தல், அவ்வழியே போகும் கோடீசுவரனின் தாகத்தைத் தணிக்கக் கூடும். இப் பெருஞ்செல்வன் கட்டிய கல்லூரியில், தாகந்தணிந்தவன் மகன் படித்து முன்னேற வாய்ப்புண்டு. இவர்கள் இருவரும் மற்றொருவர் நிறுவிய மருத்துவ மனையால் நோய் நீங்கி நலம் பெறலாம். இதுவே ஒப்புரவு.

இது ஈகையன்று; இதில் ஏற்றத்தாழ்வு இல்லை. ஈகை வறியவர்க்கு அவர் வேண்டிய ஒன்றைக் கொடுப்பது. அதில் 'பிச்சை தா' எனத் தாழும் கையும் 'பிடி இதோ' என நீட்டும் கையும் இருக்கும். ஈகை வள்ளன்மையால் செய்யப்படுவது. அது பொதுவன்று; தனிப்பண்பு. ஒப்புரவு பொதுப்பண்பு; மனிதராய் மன்பதையில் கூடி வாழ்வார்க்குரிய கட்டாயக் கடமை. ஒப்புரவினால் மன மகிழ்ச்சி, நாட்டு நலன், உலக முன்னேற்றம் யாவும் வாய்க்கின்றன. ஒப்புரவு போன்ற ஒன்றை இந்த உலகில் மட்டுமன்றி, மேலுலகிலும் பெற முடியாது என்பார் திருவள்ளுவர் *(213)*.

அமெரிக்க நாட்டை 'ஒப்புரவிற்கு' ஓர் எடுத்துக் காட்டாகக் கூறலாம். அங்கு செல்வத்தைத் தமக்குப் பிறகு, தம் குடும்பத்திற்கு-பிள்ளைகளுக்கு என்று சேமிக்கும் பழக்கம் கிடையாது. பணத்தை முடக்குவது, சேமிப்பு என்று பதுக்குவது இயல்பாகவே பழக்கத்தில் இல்லை. ஒரு தொழிலைத் தொடங்குபவர், மேன்மேலும் அத் தொழிலிலேயே பணத்தைப் போடுகிறார். ஒருவர் இறக்கும்போது தம் சொத்து, செல்வத்தைப் பொது நன்மைக்கு என எழுதிவைத்துவிட்டுப் போகும் பழக்கம் அங்கு மிகுதி. பிள்ளைகளைப் பள்ளிப் படிப்பு முடியுமட்டுமே பெற்றோர் கவனிக்கின்றனர். அதன்பின் தாமே சம்பாதித்து, தாமே தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும்படி பிள்ளைகளை விட்டுவிடுகிறார்கள்!

பொதுவாகப் பணம் சுழன்றுகொண்டே இருக்கிறது; நாளும் ஏதேனும் ஒரு வகையில் இயங்கிக்கொண்டே

இருக்கிறது. அதைப் போலச் செல்வம் பரவலாக எங்கும் போய்ச் சேரவேண்டும்; செல்வம் தொழிலில், உற்பத்தியில், உழவில், வணிகத்தில் இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும்.

செல்வத்தை நகை நட்டு என்றும், வெள்ளி, தங்கம், வைரத்தில் அலங்காரப் பொருள்கள் என்றும் நாம் சேர்ப்பது கூட, ஒருவகைச் செல்வ முடக்கம் தான்! வீட்டில் பண்ட பாத்திரங்கள், உடைகள், பிற பொருள்கள் கூட அமெரிக்காவில் மாறிக்கொண்டே இருக்கின்றன. நாம் வெண்கலம் முதல் வெள்ளி, தங்கம் வரை சேமிப்பன, குவிப்பன, கால காலத்திற்கு எனக் கட்டிக் காப்பன மிக மிகக் கூடுதலாகும். நாம் செல்வத்தை 'இயங்க' விடுவதில்லை; கட்டிப்போடவே பெரிதும் முனை கின்றோம்.

'பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்கும், கேடு கெட்ட மானிடராய்' நாம் உள்ளோம். அமெரிக்கர்கள் 'செல்வம்' என்ற தமிழ்ப் பெயருக்கு ஏற்ப, அதைச் செலுத்திக் கொண்டே இருக்கிறார்கள். சுருங்கச் சொன்னால் செல்வத்தைச் சுழல வைத்து, அதிலிருந்து நாட்டு நலம் என்ற மின் ஆற்றலை விளைவித்தபடி இருக்கிறார்கள். அதாவது 'ஒப்புரவு' அங்கு நடைமுறையில் அழுத்தமாகவுளது. உலமெங்கும் அமெரிக்க நாணயம் 'டாலர்', செலாவணி மாற்றத்திற்கு அளவுகோலாக நின்று நிலவுவதற்கு அமெரிக்கர்களின் 'ஒப்புரவு' மனப் பான்மையே காரணமாகத் தோன்றுகிறது. முதலாளித்துவ நாடாக இருந்தாலும், ஒப்புரவினால் அந்நாடு செல்வ வளத்தில் உலகை வெல்கிறது போலும்!

உலகப் பொதுமை அறம் கூறிய திருவள்ளுவர், ஒப்புரவைத் தம் கோட்பாடாக வகுத்துக் கூறியுள்ளார். அதை மற்ற நாட்டவர்கள் இயல்பாகப் பின்பற்றக் கண்டும் நாம் அதன் அடிப்படையைக் கூட உணராமலிருப்பது தவறு.

வள்ளுவரின் சமுதாயக் கோட்பாடாகிய இதை நாம் நன்கு விளங்கிக் கொண்டு வடிவமைக்க வேண்டும்; பல்வேறு விதிகளாக வகுக்க வேண்டும்; வாழ்வில் கடைப்பிடிக்கவும் வேண்டும்.

காரல்மார்க்சு, ஏஞ்செல்சு எனக் கூறும் உலகச் சிந்தனையாளர்கள் போல நம்மிடமும் ஒருவர் விளங்கியது, அப்போதுதான் உலகிற்குத் தெரியவரும்.

# 3

# ‘தன்’னை மையமிட்டது இவ்வுலகம்

தானும் உலகமும் இணைந்து நடப்பதே ஒருவரது வாழ்வாகும். தான் இன்றி உலகமும் தனக்கு இல்லை; உலகம் இன்றித் ‘தான்’ என்பதற்கு இடமும் இல்லை.

தன்னை வைத்துத்தான் ஒருவர் உலகை அறிகிறார். ‘தான்’ என்ற ஒன்றே உலகை அறிகிறது; ‘தான்’ இன்றேல் அதற்கு உலகம் ஏது?

ஞானியும் தம் கண்களால்தான் உலகைப் பார்க்கின்றார்; தம் செவிகளால்தான் உலக ஒலிகளைக் கேட்கிறார்.

தன் பார்வைக்கேற்பவே உலகம் தெரிகிறது; தன் மனப்போக்கு, நோக்கிற்கு ஏற்பவே உலகம் புரிகிறது. ஒருவர் பெரிதும் தன்னை வைத்தே உலகை அளக்கிறார். வேறு ஒரு வகையாகச் சொன்னால், அவரவர் பார்வைக்கேற்பவே அவரவர் உலகமாக இந்த உலகம் மாறி மாறி அமைகிறது.

‘தன்’னை மையமிட்டே இந்த உலகம் ஒருவருக்குச் சுழல்கிறது. அவர் ‘தான்’ என்ற மையப்புள்ளியிலிருந்தே, உலகம் என்ற வட்டத்தைச் சுற்றி வருகிறார். இன்னும் சொன்னால் ‘தான்’ என்ற புள்ளியிலிருந்து இழுக்கப் படுவதுதான் ஊர், உலகம் என்ற கோடு!

இதுவே எல்லை கடக்கும்போது ‘தான்’ எனும் முனைப்பாகும்; ‘தான் மட்டும்’ என்ற ஆணவமாகும்; ‘தனக்கு மட்டும்’ என்ற பேராசையாகித் தன்னலமாகும். இதுவே இறைவனிடம் மண்டியிடும்போது ‘தன்’னையே கரைத்துக் கொள்ளும்.

ஆயினும் 'தான்' என்ற ஒன்றில்லையேல், இவற்றில் எதுவுமே இல்லை.

எனவேதான் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு நீ உலகைக் காக்கப் புறப்படு என்று வள்ளுவ வேதம் பகர்கிறது. 'நீ ஒழுக்கமாயிருந்து கொண்டு, பிறகு ஒழுக்க நெறிக்கு உலகைத் திருத்த முற்படு! நீ உன் மீது முதலில் காதல் கொள்; பிறகு மற்றவரைக் காதலிக்கலாம்! முதலில் உன்னை நீ காத்துக்கொள்; உன்னைத் தகுதிப் படுத்திக்கொள்! நீ பிறர்க்குக் கட்டுப்பட்டு நடப்பதை விட, நீ தனக்குத்தானே கட்டுப்பட்டு நடக்கக் கற்றுக் கொள்!'

இவ்வாறெல்லாம் ஒருவரது முன்னேற்றத்தைத் 'தன்'னிலிருந்து தொடங்கும் வள்ளுவச் சிந்தனைகள் இளைஞர்கள் கட்டாயம் எண்ணிப்பார்க்க வேண்டியவை.

சிலர் தன்னைப் பற்றியே சிந்திக்கக் கூடாது என்பார்கள். தன்னை அழித்துக்கொள்ள மட்டும் வழி சொல்வார்கள். திருவள்ளுவர்க்கு அதில் உடன்பாடில்லை.

சிலர் தம் உடல் பொருள் ஆவி எல்லாம் மற்றவர்களுக்கே என்று மேடையில் கூறிவிட்டு, மற்றவர்களின் உடல் பொருள் ஆவியை எடுத்துக் கொள்வார்கள்.

வள்ளுவர் இத்தகைய போலி அறங்களைப் போதிக்கவில்லை. கவர்ச்சி அறங்களைக் கூறி மயக்க விரும்பவில்லை. அவர் சமயத் தலைவர்கள் போல் கூட்டம் சேர்க்கவோ, நிறுவனம் அமைக்கவோ விரும்பினார் அல்லர்.

'செல்வம் நிலையில்லாதது; அதனால் உங்களிடமுள்ள செல்வத்தை என் மட்டத்திலுள்ள உண்டியலில் போட்டுவிட்டுப் போங்கள்' என்று சொல்ல வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படவில்லை.

இவ்வுலகம் நிலையில்லாதது; செல்வம் நிலையில்லாதது என்றெல்லாம் கூறி, உலகை வெறுக்க வைக்காமல்,

இவ்வுலகில் செல்வ வளத்துடன் வாழ வழிகாட்டியவர் அவர்.

நம் இந்தியச் சமயங்கள் பல வேளைகளில் 'வாழ்க்கை மறுப்பு, வெறுப்புச்' சிந்தனைகளையே பரப்பின; திருவள்ளுவர் வாழ்க்கை ஏற்புச் சிந்தனையை நிலைநிறுத்தி, முற்கூறிய மறுப்பு மற்றும் வெறுப்புச் சிந்தனையைப் புறந்தள்ளியவர்.

எனவே'தான் அவர் 'தன்'னிலிருந்து தொடங்குவது அறம்; 'தன்'னை மையமிட்டதே தன்முன்னேற்றமும் உலக முன்னேற்றமும் என்பனவற்றை மிக வரன்முறையாகக் கூறியுள்ளார்.

## தொல்காப்பியர்

தமிழ் முதனூலாய் இன்று கிடைக்கும் தொல்காப்பியப் பெருநூல் இலக்கணம் மட்டும் கூறவில்லை; இலக்கியத்திற்குக் கருவாகும் வாழ்க்கை பற்றியும் கூறுகிறது. தமிழர் பண்பாடு, வாழ்க்கை ஏற்புக் கொள்கையாகும். இந்த வாழ்வை விட்டும் உலகை விட்டும் ஓடும் நெறிகள் நம் பண்பாட்டிற்குப் புறம்பானவை. வாழ்வை அகம் புறம் எனப் பகுத்துக் காதல் வாழ்வை 'அகம்' என்றும் ஏனைய உலக வாழ்வைப் 'புறம்' என்றும் போற்றி வளர்த்தனர் தமிழர். இதன் எதிரொலிகளையே தொல்காப்பியத்திலும் திருக்குறளிலும் கேட்கின்றோம்.

சிற்றுயிராகிய எறும்பும் 'தான்' வாழவே முந்துகிறது. மழைவருமென முன்கூட்டி அறிந்து, முட்டையைக் கவ்விக்கொண்டு மேட்டு நிலம் நோக்கிச் சாரை சாரையாய்ச் செல்கிறது.

எந்த ஓர் உயிரும் தான் வாழ, தான் இன்புற, தான் நலமாயிருக்க நாடுவதைக் காண்கின்றோம். தனக்கு ஒரு துன்பம் என்றால், கேடு என்றால் தப்பிக்கத் துடிப்பதையும் பார்க்கிறோம்.

சின்னஞ்சிறு உயிர்க்கும் இவ்வியல்பு இருக்குமானால், ஆறறிவு படைத்த மனிதனிடம் இத் 'தான்' உணர்வு உள்ளுள் இருக்கும் - இருப்பதே இயல்பு - இல்லாவிட்டால் அது ஒரு குறையாகவே இருக்கக்கூடும்.

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வருஉம் மேவற்றாகும் (தொல்காப்பியம் 1169)

'இன்ப உணர்வு' என்பது எல்லா உயிர்களிடத்திலும் உளது. அது 'தான்' எனும் தனது நெஞ்சினுள் கிடந்து வருகின்ற தன்னைப் பற்றிய விருப்பமுடைமையாகும். உலகம் இன்புறக் காணவேண்டுமென்றாலும், தான் இன்பம் என்ற ஒன்றை உணர்ந்திருந்தால் தானே அதை மற்றவர்க்குத் தர விழைதல் கூடும்.

எனவே வளர்ச்சி, முன்னேற்றம் என்பன ஒருவருக்குத் 'தன்'னில்தான் தொடங்க வேண்டும். அதுவே இயல்பும் நடைமுறையும் ஆகும். மேலைநாட்டார் தான் எனும் நினைப்பை, முனைப்பு (Ego) என உளவியலாய்வு வழி கண்டது முழு உண்மையன்று. மனிதனிடம் மட்டும் ஆராய்ந்து, அவனிடம் எழுந்து வெளிப்பட்ட உணர்வுகளை வைத்து இம் முடிவு செய்யப்பட்டுள்ளது. தொல்காப்பியர் 'தான்' என்பதில் அடங்கி ஆழ்ந்துள்ள உள்ளுணர்வை 'இன்ப உணர்வு' என்பது மேலும் ஆராய்ந்து, நிறுவப்பட வேண்டிய ஒன்றாகத் தோன்றுகிறது. இது எல்லா உயிரினங்களையும் கொண்டு கூறிய முடிபாகும். முனைப்பு என்பதும் தான் மேலெழவேண்டும் என்ற எண்ணத் துடிப்பேயாகும். அதனுள்ளும் அடங்கியிருப்பது, இன்புற எண்ணும் உணர்வே என்ற தமிழ் நூற்கருத்து, உலகளாவிய மறுஆய்வுக்கு உட்படவேண்டும்.

## தன்னைப் போற்றுக!

பழங்கால மரபு ஒருவர் தம் வருமானத்தை ஆறாகப் பகுத்து, ஆறில் ஒன்றை அரசனுக்கு இறையாகத் (வரி) தரவேண்டும் என்பதாகும். எஞ்சிய ஐந்தையும் திருவள்ளுவர்

'இல்வாழ்க்கை' அதிகாரத்தில் பகுத்துக் காட்டி, இல்லறத்தான் இவ்வாறு வாழ வேண்டுமென வழிகாட்டுகிறார். இறந்துபோன நம் மூதாதையர், தென்திசையில் உறைவதாகத் தமிழர்களுக்கு ஒரு நம்பிக்கையுண்டு. அதனால் காலமாகிவிட்ட முன்னோர் களைத் 'தென்புலத்தார்' (தென்திசையிலுள்ளவர்) என்பது ஒரு மரபு. இம் மூதாதையரை வழிபட ஒரு பகுதி. தெய்வங்களுக்குப் படையல், கொடை, விழா எடுப்பதும் தமிழர்தம் மரபு. அதற்கு ஒரு பகுதி. விருந்தினர்க்கும் சுற்றத்தவர்க்கும் என ஒவ்வொரு பகுதி. இவற்றுடன் தனக்கு எனவும் ஒரு பகுதி. இவ்வாறு பகுத்து, உண்டு வாழ வேண்டுமாம்.

தென்புலத்தார் தெய்வம் விருந்(து)ஒக்கல் தான்என்றாங்(கு)
ஐம்புலத்தா(று) ஓம்பல் தலை. (இல்வாழ்க்கை 43)

இந்த ஐந்து இடங்களையும் போற்றிப் பேணுதல், இல்வாழ்வானுக்குத் தலையாய அறமாகும். இதில் 'தான்' எனக் குறித்து, தன்னைப் பேணுதலும் ஓர் அறமென வகுத்தமை அறியத் தக்கது. எந்த அறமும் தான் பொருள் சேர்த்து, நலமாகவும் வளமாகவும் இருந்தல்லவா செய்ய வேண்டும்? பரிமேலழகர், "எல்லா அறங்களும் தான் உளனாய் நின்று செய்ய வேண்டுதலின் தன்னை ஓம்பலும் (போற்றிக் காத்தலும்) அறனாயிற்று" என இதை விளக்குவார்.

## தன்னைத் தான் காதலித்தல்

போகிற போக்கில் ஓர் அரிய கருத்தை வெளியிடுகிறார் திருவள்ளுவர். உலகில் ஒருவர் மற்றவரைக் காதலிக்கிறார்; ஆனால் அவர் தம்மைத் தாமே காதலிக்கிறாரா? இது கேள்விக்குறி தான்!

காதலிப்பது என்றால் என்ன? கண்ணுள் மணிபோல், மணிஆடு பாவை போல் கருதுதல், போற்றுதல், காத்தல் அல்லவா?

காதலி மழையில் நனைந்தால் காதலனுக்குச் சளி பிடிக்கிறது. காதலன் தலைநோகிறது என்பதன்முன் காதலி மனம் நோகிறது.

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். (தீவினையச்சம் 209)

தீவினை எறிந்த பந்துபோல் செய்தவனிடமே திரும்பிவரும். எந்தத் தீவினையும் செய்தவனையே முதலிலும் முடிவிலும் பாதிக்கும். எதிராளி மீது தீமையை விளைவித்துவிட்டதாக மனம் மயங்கும். தீமை போய்த் திரும்பி வந்து தாக்கச் சிறிது காலமாகலாம். அனைவரும் மற்றவர்களுக்குத் தீமைசெய்து, வெற்றி பெற்றுவிட்டதாகவே களிப்பில் மிதக்கிறார்கள். ஒரு பார்வைக்கு அதுவே நடப்பதாகவும் தோற்றுகிறது. ஆனால் தீ பரவுவதுபோல் தீமையும் சுற்றுச்சூழலையும் பாதித்து, தன் குடும்பம் உறவு தன்னிடமும் வந்து பரவி எரித்துச் சாம்பலாக்கும் என்பதைப் பலர் உணர்வதே இல்லை

'நீ உன்னையே காதலிப்பது உண்மையானால், சிறியதொரு தீங்கையும் மற்றவர்க்குச் செய்யாதே-உன்னிடம் தீய எண்ணம் நெருங்கவிடாதே!' என்பது வள்ளுவம்.

இதில் 'தன்னைத் தான் காதலித்தல்' பற்றிய தொடர் நம் நெஞ்சை அள்ளுகிறது. ஆசைப்பட்டுக் கண்டதைச் சாப்பிடுகிறோம்; காம வயப்பட்டுப் பாலுணர்வுக்கு அடிமைப்பட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்கிறோம்; பணத்திற்கு ஆசைப்பட்டுத் தவறான வழிகளில் நடந்து மனம் நொந்து உடல்நலனைக் கெடுத்துக் கொள்கிறோம். இவை தன்னைத் தான் காதலிப்பதாகுமா?

காதலிப்பது உண்மையுானால் கண்ணும் கருத்துமாக உள்ளத்தைப் போற்றவேண்டும்; உடலைப் பேண வேண்டும்.

தம்மை ஒருவர் உள்ளமும் உடலும் தூய்மையாக வைத்துக்கொண்டு, எழுச்சிமிக்க பார்வை-மலர்ச்சியுள்ள

முகம்-இனிய பேச்சு இவற்றுடன் உலவுவாரானால் உலகில் அவரது தோற்றமும் பழகும் பண்பாடும் அவரை வாழ்விக்குமல்லவா? இவ்வாறு நீள நினைந்து பார்த்தால், இனி நீங்கள் உங்களையே காதலிக்கத் தொடங்கி விடுவீர்கள்! பிறகு உலகமே உங்களைக் காதலிக்குமாறு வாழ்க்கை அமையும்.

## தன்னைத் தான் காத்துக் கொள்ளுதல்

சினம், சீற்றம், கோபம், வெகுளல், கனலுதல், கடுகடுத்தல்-இவ்வாறு கோபத்தில் எத்தனையோ நிலைகள் உள. இந்தச் சினம், சினங்கொள்பவர்க்குக் குருதிக் கொதிப்பை ஏற்படுத்தும்; நரம்புத் தளர்ச்சியை உண்டாக்கும்; கண்ணையும் மனத்தையும் இருளடையச் செய்யும்! பிறகுதான் யார் மீது சினங்கொள்ளப்பட்டதோ அவரைத் தாக்கும். இங்ஙனம் சினம், தன்னைக் கொண்டவரை உடனே தாக்குவதால் இதற்குச் 'சேர்ந்தாரைக் கொல்லி' எனப் புதுப்பெயர் கொடுத்தார் திருவள்ளுவர். 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' *(306)* என்பது அவர் வாக்கு.

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**

**தன்னையே கொல்லும் சினம். (வெகுளாமை 305)**

'நீ உன்னைக் காத்துக்கொள்ள நினைத்தால் சினம் வராமல் காத்துக்கொள்வாயாக! காத்து அடக்காமல் சினங்கொண்டால், அச்சினம் உன்னையே கொன்றுவிடும்!'

பேச்சுவாக்கில் நிலைத்த ஓர் உண்மையையும் சொல்வதுபோல், 'தன்னைத் தான் காத்தல்' பற்றி இதில் குறிப்பிடுகிறார்.

உலகில் அறநெறி, தருமம், நீதி யாவும் மற்றவர் களுக்காக-உலகப் பொதுவிற்காகச் செய்யப்படுவன எனப் பலரும் நினைப்பது தவறு. அவை நம்மை நாம் காத்துக்கொள்ள உதவுவன; தன்னைத் தான் காத்துக் கொள்ள நினைப்பவன் கடைப்பிடிக்க வேண்டியன!

இடப்புறம் போ; வரிசை மாறாதே; குறுக்குவழி நாடாதே; கண்ட இடத்தில் துப்பாதே; வாழைப்பழத் தோலைப் போடாதே - என்று சொல்லும் சின்னச் சின்ன விதிமுறைகளைக் கூட, இவை 'தற்காப்புக்கு' உதவுவன; தன்னைத்தான் காக்கப் பயன்படுவன என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

இந்த உண்மைகளை எடுத்துச் சொன்னால், இந்த முறையில் விளக்கினால் இளைஞர்களிடம் 'தற்காப்பு' உணர்ச்சி ஏற்பட்டு, நன்னெறி நடக்க வழிபிறக்கும்.

## ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளுதல்

பகைவரை வெல்வது எவ்வாறு?

வெறுமனே உணர்ச்சிவயப்படுவதால் வென்றுவிட முடியாது. சீறிப் பாய்ந்து, கடுஞ்சொற் பேசியும் வெல்ல முடியாது. சில சமயம் நம் ஆட்ட பாட்டங்கள், பகைவனுக்குச் சாதகமாகிவிடும். வெறும் கூச்சல், ஆரவாரம் அவன் தன்னை மேன்மேலும் வலிமைப் படுத்திக்கொள்ள உதவிவிடக் கூடும்.

பிறகு பகையை வெல்லும் திறந்தான் யாது? வள்ளுவர் ஒரு வலிமை மிக்க வழியைக் கூறுகிறார்.

வகைஅறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கண் பட்ட செருக்கு. (பகைத்திறம் தெரிதல் 878)

பகைவரிடம் 'நம்மை எளிதல் வென்றுவிடலாம்' என்று இருக்கின்ற செருக்கை முதலில் அடியோடு அழிக்க வேண்டும்.

அதற்கு அவர்களுடன் நேரடியாக உடனே மோத வேண்டும் என்பதில்லை. அவர்கள் எதனால், எவ்வாறு நம்மை வெல்ல நினைக்கிறார்கள்; அதனை எதனால் எவ்வாறு நாம் வெல்லலாம் என நன்கு ஆராய்ந்து பகுத்து வழிவகைகளைக் கண்டறிய வேண்டும். பிறகு நாள்தோறும்,

அதற்கேற்ப நம்மை வலிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். தற்செய்தல்- தன்னைச் செய்து கொள்ளுதல். தன்னைப் பகையை வெல்லும் வகையறிந்து, அதற்கேற்ப ஆயத்தப்படுத்திக் கொள்ளுதல். அதாவது வலிமையைப் பெருக்கிக் கொள்ளுதல். அதற்கு அடுத்தபடியாகத் 'தற்காப்பைப்' பெருக்கிக்கொள்ள வேண்டும். இவை இரண்டும் கூடக்கூடப் பகைவர்களிடம் நம்மை வெல்லலாம் என எழுந்த எண்ணம்-செருக்கு-ஆணவம் தானே அழிந்துபோகும். அவர்கள் நம்மீது பகை தொடுக்கவே நினைக்கமாட்டார்கள். 'அந்த நினைப்பையே அழித்துவிடு; அதற்கு வழி அவர்கள் கிடுகிடுத்து நடுங்கும் வண்ணம் நீ உன் வலிமையைப் பெருக்கிக் கொள்வதுதான்' என்பது வள்ளுவம். 'நீ உன்னை வலிமைப்படுத்திக் கொள்ள வலிமைப் படுத்திக்கொள்ள, பகைவர்கள் பகைக்கும் எண்ணத்தையே இழப்பர்.' இதுதான் பகையை அடியோடழித்து வெல்லும் வழியாகும்.

இன்று இந்தியா 'அகிம்சை' பேசிப் பேசி, அறம் பேசிப்பேசிப் பிறநாட்டவர் கேலி கிண்டலுக்கு ஆளாகிறது. தனி மனித அறம் வேறு. நாட்டைக் காக்க, அகிம்சை பேசிப் பயனில்லை. இலங்கைக்குக் கச்சத்தீவைத் தானம் செய்தது எத்தனை முட்டாள்தனம்? இலங்கை நன்றி பாராட்டவா செய்கிறது? நாளும் நம் மீனவர்கள் இலங்கைப் படையினரால் சுட்டுத்தள்ளப்படுகின்றனர். இதற்கு இலங்கை வருத்தம் தெரிவிப்பதுகூட இல்லை.

இந்தியாவைச் சுற்றியுள்ள சீனா, பாகிஸ்தான், இலங்கை, வங்காள தேசம், பருமா என்ற எந்த நாடும் இந்தியாவைச் சீண்ட அஞ்சுவதில்லை.

"அவைகள் இந்தியாவா? இது கோயில் யானை, நல்ல யானை, யாரையும் எதுவும் செய்யாது என்று ஏறி மேய்கிறார்கள்", என்பர் மூதறிஞர் வ.சுப. மாணிக்கம்.

நம் நாட்டுப் படை வலிமையைப் பெருக்கித் தற்காப்பை வலுப்படுத்தி நெடிதோச்சி நின்றால் உலகம் அஞ்சும்; சீனா இமயச்சாரலில் நம் பரந்த நிலத்தைப் பறித்திராது.

இன்றும் "நாங்கள் நல்லவர்கள்; அடித்தால் கூடத் திருப்பி அடிக்க மாட்டோம்", என்பது போல் பேசி, இந்தியா தருமநெறி தவறாத நாடு என்பதையல்லவா நிலைநிறுத்தப் பார்க்கிறோம். அதனைக் கடைப்பிடிக்கலாம். ஆனால் நாங்கள் வலிமை மிக்கவர்கள் என்பதை உணர்த்திக் கொண்டே இருந்தால்தான், அண்டை நாடுகள் வாலாட்ட அஞ்சும். 'மீறிப் போய்த் தாக்க வேண்டாம்; நீ உன் வலிமையைப் பெருக்கி, பிறர் அஞ்சுமாறு பீடு நடை போட்டால் அதைக் கண்டே, கேள்விப்பட்டே, பகைவரிடம் தோன்றிய செருக்கு-ஆணவம்-கேலி-கிண்டல் மாய்ந் தொழியும்' என்பதுதான் வள்ளுவர் காட்டும் வழி.

'தற்செய்து தற்காத்தல்' என்ற தொடர், இதில் நினைவில் வைக்கற்பாலது. "தன்னை வலிமையுடையவனாக மேன்மேலும் ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதன் மூலம் தன்னைக் காத்துக்கொள்வது" என்ற இது, வாழ்க்கையின் பல நிலைகளில் பொருந்தி வரும். நாம் நம் தகுதியை-வலிமையை-ஆற்றலைப் பெருக்கிக்கொண்டே இருந்தால், அதுவே நமக்குப் பாதுகாப்பாகும். நம்மை வெல்ல நினைக்கும் நினைப்பே பகைவர்பால் இதனால் அற்றுப் போகும்.

## தற்கட்டுப்பாடு

தன்கட்டுப்பாடு என்பது தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளுதல். ஒரு வேடிக்கை என்னவென்றால், நாம் மற்றவர்களுக்கு அடிமையாகிறோம்; மற்றவர் ஏவியதைச் செய்கிறோம்; நம்மை ஏவுகின்றவர் கட்குக் கட்டுப்பட்டு நடக்கச் சம்மதிக்கின்றோம்.

ஏன்? நமக்கு நாமே மேலாண்மையராக இருந்து, நம்மை நாமே கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடாதா? நாம் பிறருக்குத்

தான் அடிமையாக இருக்க வேண்டுமா? நமக்கு நாமே அடிமையாய் இருப்பது-நாமே நமக்கு 'எசமானராய்' இருந்து நம்மை நாமே வழி நடத்திக் கொள்வது கூடாதா?

உண்மையில் தன்னைத் தானே கட்டுப்படுத்தி, ஆண்டுகொள்ள வழி தெரியாதவர்கள் தான் பிறர் ஏவியதைச் செய்யும் அடிமைகளாகிறார்கள்!

திருவள்ளுவர் இத் 'தற்கட்டுப்பாடு' தான் மனிதனுக்குப் பெருமை தரும்; மற்றவருக்குக் கட்டுப்படுதல் இழிவுதரும் என்பதை அழுத்தமாய்க் கூறுகிறார்.

ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு. (பெருமை 974)

ஒருமை மகளிர் - ஒரே எண்ணமுடைய, சலனம் - அசைவு - ஊசலாட்டம் இல்லாத மகளிர். ஆடவர் மனம் ஊசலாடும். மகளிர் மனமோ எளிதில் அலைபாயாது. மகளிருக்கு இயல்பாயுள்ள பண்பு இது; மகளிர் பெருமை இது. சிலர் 'இருமணப் பெண்டிராய்', பரத்தையராய் வாழ்வர். அது புறனடையே. மகளிரின் இயல்பு 'ஒருமை மனம்'. இதைக் 'கற்பு' என்பர். கற்பு-திண்மை, அசையாத்தன்மை. மனம் அசையாதிருப்பதே அது. 'ஒருவனைப் பற்றி, ஓரகத்து இரு' என்பது கொன்றை வேந்தன். பெண்ணியத்தை உணர்ந்து சொன்ன சொல் அது. இம் மகளிர் 'தன்னைத்தான் கொண்டு ஒழுகும்'- தற்கட்டுப்பாடு மிக்கவர்கள். பிறர் யாரும் கட்டுப் படுத்தாமலே-சிறைவைக்காமலே-தமக்குத் தாமே மனக் கட்டுப் பாட்டுடன் வாழ்வது மகளிர் வழக்கம். 'சிறை காக்கும் காப்பு - வீட்டினுள் அடைத்து வைத்துக் காப்பது பயன்படாது; மகளிர்தம் மன நிறை காக்கும் காப்பே தலையாயது' என்பது வள்ளுவம்*(57)*.

இத்தகைய மகளிர்போல, மாந்தர்களும் பொதுவாகத் 'தன்னைத்தான் கொண்டொழுகும்' நெறியை மேற் கொண்டால், பெருமை உண்டாகும்.

பிறர் கட்டுப்படுத்துவன நிலைபெறா; முற்றாகப் பயன்படா. இடையே அவை தடைப்படும். ஆனால் 'தற்கட்டுப்பாடு' நிலையாக அமையும்.

காலவர் பார்க்கிறார் என்பதற்காக அல்லாமல், தானாகவே திருடாமல் இருப்பது; மேலாளர் இல்லாதபொழுதும் அலுவலில் கண்ணாக இருப்பது; ஆசிரியர் சிறிது வெளியே சென்ற சமயத்தும் படிப்பில் கவனமாக இருப்பது; யாரும் பாராத இடத்தும் துப்புரவாய்-ஒழுங்காய் இருப்பது என வரும் இத் தற்கட்டுப்பாட்டுப் பழக்கம் உலகை இன்பமயமாக்கும்; மகிழ்ச்சிக் கடலில் திளைக்க வைக்கும்.

இளையோர் நினைத்தால் இத் 'தற்கட்டுப்பாடு'- 'தன்னைத் தான் கொண்டொழுகுதல்' பற்றி ஒரு நாவல் எழுதலாம்; நாடகம் படைக்கலாம்; வாழ்ந்து காட்டலாம்!

தன்னையே தனக்கு எசமானனாகக் கொண்டு, தான் தன் நற்கருத்துக்களுக்கு உடன்பட்டு, தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்ளும் இதுதான் 'சுதந்திர மனிதன்' என்பதற்கான முத்திரையாகும்.

# 4

# தன்னம்பிக்கையும் தன்முயற்சியும்

தன்னை நம்பாமல் வேறு யாரை நம்புவது? எல்லோரும் மற்றவரை நம்பினாலும் நம்பாவிட்டாலும் தம்மை நம்பவே செய்கின்றனர்! ஆனால் ஒரு காரியம், முயற்சி என்று வரும்பொழுது தன்னால் முடியுமோ, முடியாதோ - தான் நினைத்தது நடக்குமோ நடக்காதோ என்ற ஊசலாட்டம் ஏற்படுகிறது. அரைக் கிணறு தாண்டினால் உள்ளேயல்லவா விழுந்துவிடுவோம்? முழுமையாக நடக்கும்-நடக்க வைப்போம்-நினைத்தது முடியும்-முடிக்க முடியாதது எதுவுமில்லை என எழுகின்ற தன்உந்துதல்தான் தன்னம்பிக்கை எனப்படுகிறது. முழு நம்பிக்கை வைத்து, கடும் முயற்சி செய்தவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

முதலில் நம்மை நாம் அறியவேண்டும். நமக்கு என்ன திறமை இருக்கிறது? நம் இயல்பான ஈடுபாடு எதில் உளது? இதை நம்மை நாமே ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டும். நமக்கு ஒத்துவருகின்ற - நம் இயல்புக்கும் திறமைக்கும் ஈடுபாட்டிற்கும் ஏற்ற துறையில் முயலாமல், வேறு துறைகளில் முயன்றால் முயற்சி விழலுக்கு இறைத்த நீராகிவிடும். எனவே 'தன்னை' அறிந்து, தனக்குகந்த துறையைத் தேர்ந்தெடுப்பதே தன்னம்பிக்கையின் அடிப்படையாகும்.

ஆசிரியனாகும் தகுதியுடைய ஒருவன் அரசனாகும் தகுதியுடைய ஒருவனைப் பார்த்துப் பொறாமைப்பட

வேண்டியதில்லை. இவன் ஆசிரியவுலகில் ஓர் அரசனாகுமளவு சீரும் செல்வாக்கும் பெற, அத்துறையில் மேன்மேலும் முயல்வதே சிறப்பு. அரசனாகும் வாய்ப்பை எதிர்பாராது பெற்ற பலர், ஆண்டிபோல் வாழ்ந்து மறைதலும் கூடும். தன் திறமையறிந்து துறை ஒன்றைத் தேர்ந்தவன் அத்துறையை நன்கு மதிப்பதும் தன்னம் பிக்கையே ஆகும்.

அத்துறையில் அவன் உயரிய குறிக்கோள்களை வகுத்துக்கொள்ள வேண்டும். அதை நோக்கி இடையறாது முயலவேண்டும். தில்லிக்குப் போக விரும்பியவன் தில்லிக்குப் பயணச்சீட்டு எடுக்க வேண்டும்; பெட்டி படுக்கை எடுத்துப் புறப்பட வேண்டும்; இரவும் பகலும் பயணம் செய்யவேண்டும். முதற்கண் தில்லி போவதாக முடிவெடுப்பதும் அதைச் செயற்படுத்த ஆவனசெய்வதும் இன்றியமையாதன.

தன்னம்பிக்கையும் இதுபோன்றதுதான்! நம்பிக்கை இருந்தால் போதாது. அதை நிறைவேற்றத் திட்டமும் வழிவகையும் கருவிகளும் துணையும் இவற்றைச் செயற்படுத்த நெறியும் திறமும் பிறவும் வேண்டும். மனம் போல்தான் வாழ்வு. மன எண்ண ஓட்டங்கள் செயலாகும் போதுதான் இவை உருவாகி அமையும்!

**எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**

**திண்ணிய ராகப் பெறின். (வினைத்திட்பம் 666)**

ஒருவர் எண்ணிய எல்லாவற்றையும் எண்ணியபடியே அடைய முடியும். எப்போது? தனக்குப் பொருத்தமான ஒரு தொழிலைத் தொடங்கியவர் முதலிலிருந்து முடிவுவரை ஏற்படும் குறுக்கீடுகள், இடையீடுகள், தடுமாற்றங்கள் கண்டு கலங்காது-அசையாத மன உறுதியுடைவராய்ச் செயற் பட்டால் 'எண்ணியவாறே எண்ணியதை எய்துதல்' இயலும். திண்ணியராதல் - மனத்திட்பம் உடையவராதல். அவர் மனம் கலங்காத உறுதியுடையது மட்டுமன்று; அதனோடு

திட்பமும் உடையது. அதாவது வரும் துன்பத்தைக் கூட இன்பமாக மாற்றக் கூடியது; இடையீட்டைத் தூண்டுகோலாக்கிக் கொள்ளக்கூடியது.

சென்னைக்குப் பெருநடையாய்ப் புறப்பட்டவர் அங்கங்கே களைத்து நின்றால் என்செய்வது? கடைசிவரை ஒரே நினைவாய், எல்லையை அடையும்வரை நடப்பதற்கான உடல்நலம், உணவு, தங்குமிடம் யாவும் திட்டமிட்டுக்கொண்டு சென்று சேர்வது போன்றதுதான் இது!

வேறொன்றும் வேண்டும். அது யாது? பலர் இடையிடையே குறித்ததை மறந்துவிடுவர். கொஞ்சம் இலாபம் வந்ததும், மகிழ்ச்சியில் ஓய்வுகொள்ளத் தொடங்கிவிடுவர். அல்லது ஆடிப்பாடி, ஆரவாரம் செய்து திசைதிரும்பி விடுவர். அலட்சியப்போக்கு, செயல்மறதி ஏற்படும்.

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின். (பொச்சாவாமை 540)

பொச்சாத்தல்-கடமை மறதி. ஒரு குழுமத்தின் மேலாளராய் இருப்பவன் செய்ய வேண்டியதை மறந்து, சீட்டாடிக் கொண்டிருப்பது போன்றது அது. ஒரு காரியம் தொடங்கியவன் அதே நினைவாய் இருக்க வேண்டுமாம். அதுதான் இங்கு திருவள்ளுவர் சொல்ல வந்தது. உள்ளுதல்-நினைத்தல்; உள்ளுள் நினைத்துக்கொண்டே இருத்தல். தான் நினைத்ததை அடைதல் மிக எளிது, தஞ்சம் எளிது, மேலும் மேலும் தான் உள்ளியதையே விடாமல் நினைக்கப் பெற்றால்! அஃது இன்றேல் காரியம் முடிவுபெறாது.

திரும்பத் திரும்ப நினைக்க நினைக்க நாம் அதன் வயமாவோம். அதனால் அதற்கான கருவிகள், வழிகள், உத்திகள், திறன்கள் எல்லாம் தாமாக ஒன்றன்பின் ஒன்றாக வந்தமையக் காண்போம். போகப்போகச் சிற்றூரில்

ஒற்றையடிப் பாதை வழிதெரிவதுபோல் வழிவகை புலப்படும். முதலில் நின்றபடி நின்று வழி தெரியவில்லை என்று திரும்பிவிடவோ, நின்று விடவோ கூடாது.

திரும்பத் திரும்ப, மீண்டும் மீண்டும் நினைத்தல் - உள்ளுள் உள்ளுதல் - என்பது மந்திரம் செபித்தல் போன்றது; மறை ஓதுவது போன்றது; இறையருளை வேண்டுவது போன்றது!

## உயர்ந்த குறிக்கோள்களையே எண்ணுக!

எப்போதும் உயர்ந்த குறிக்கோள்களை அடையவே எண்ணுதல் வேண்டும். முதலிலேயே 'நான் ஒரு வேலைக்காரனாய் அடிமை வேலை பார்க்க வேண்டும்; பெட்டிக்கடை வைக்க வேண்டும்' என்றா எண்ணுவது? 'நான் ஒரு கணக்குத் தணிக்கையாளனாக வேண்டும்; பெரிய நூற்பாலை தொடங்க வேண்டும்' என்று கனவு கண்டால் தவறில்லை. அப்போதுதான், நினைத்ததை அவ்வாறே அடையாவிட்டாலும் ஒரு பல்பொருள் அங்காடியாவது வைக்குமளவு வளரலாம்; ஒரு பெரிய பட்டுத்துணி வணிக மாளிகையின் முதலாளியாகவேனும் ஆகலாம்!

**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து. (ஊக்கமுடைமை 596)**

வாழ்க்கை முன்னேற்றம் பற்றி ஒருவர் நினைப்பன யாவும் மிக உயர்ந்தனவாகவே இருக்கவேண்டும். திருவள்ளுவர் வளரும் இளையவரைப் பார்த்து "நீங்கள் நினைப்பன அனைத்தையும் மிக உயர்வானவையாகவே எண்ணுங்கள்!" என்று கட்டளையிடுகிறார். இளமையில் அடைய முடியாததை நினைக்கலாமா எனச் சொல்வது தவறு. விஞ்ஞானிகள் பலர் இளமையில் அடையவே முடியாது என்பனவற்றை எண்ணியே பிறகு அவற்றை அடைந்து காட்டியுள்ளார்கள். அதுவும் பல தடவை தோல்வியுற்று, இறுதியில் பெருவெற்றி கண்டுள்ளார்கள்.

தாமஸ் ஆல்வா எடிசன், ரைட் சகோதரர்கள் வரலாற்றைப் படித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

அவ்வுயரிய குறிக்கோள் அடையமாட்டாமையால் தள்ளினும் - தடைப்பட்டாலும், நிறைவேறாமற் போனாலும் நிறைவேறிய தன்மையுடையதாகும். முயற்சியின் சிறப்பு அழியாது. பலர் ஒன்றைத்தேடி அதற்கு இணையான பிறிதொன்றை அடைந்துள்ளார்கள்; சிலர் அதைவிட மேலானதை அடைந்துள்ளார்கள். தோற்றாலும் அது தோல்வியாகாது, ஏதேனும் ஒருவகையில் சிறப்புறவே செய்யும் என்ற இக்கருத்து காலத்தால் அழியாத உண்மையாகும்.

நல்லது, உகந்தது, சிறந்தது என ஒன்றைச் செய்ய நினைத்து விட்டால், அதைச் செய்து முடிக்க அயரவே கூடாது. ஏனெனில் எடுத்துக்கொண்டது பெரிய குறிக்கோளாயிருந்தால், முயற்சியும் கூடுதலாகவே தேவைப்படும். தடைகளும் பெரிதாகவே வரும், அவற்றை எதிர்பார்த்து, இடைவிடாது முயன்று, நினைத்ததை அடைந்தவர்களே இன்று வரலாற்றில் பேசப் படுகின்றனர்.

அருமை உடைத்தென்று) அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். (ஆள்வினை உடைமை 611)

இச்செயல் அரிதாயிற்றே என்று தளர்ச்சி அடையாதீர்! அதை அடைதற்காம் பெருமையை-வலிமையை முயற்சி தரும்.

பொறியின்மை பழியன்று

கண் தெரியாது, காது கேளாது, வாய் பேசாது என நம் ஐம்பொறிகளில் ஒன்றிரண்டு குறைவுபட்டால், அதற்காக வாழ்வு பாழ்பட்டுப் போகாது. ஹெலன் கெல்லர் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் இத்தகைய குறையுடன் பிறந்தவர்களுக்குக் கற்பிக்க, முன்னேற்ற, வாழவைக்க எடுத்த

முயற்சிகள் , வகுத்த பயிற்சிகள் உலகப் புகழ்பெற்றவை. அவர் பிறக்கும்பொழுது இக்குறை களின்றியே பிறந்தாலும் ஒன்றரை அகவையில் திடீரென ஏற்பட்ட நோயினால் ஊமையாய்ச் செவிடாய்க் குருடாகிப் போனார்! அவர் பார்வையற்றோர் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். இடையறாத முயற்சியால் பேசும் ஆற்றலைப் பெற்றார்! ஆயினும் பார்வையும் கேள்வியும் பெறாமலே, அவர் இறுதிவரை போராடி, தமக்கிருந்த அதே குறையுடன் பிறந்தவர்களின் வாழ்வு சிறப்பதற்கு வழிவகை கண்டு வெற்றிபெற்றார்!

பொறிஇன்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி. (ஆள்வினையுடைமை 618)

ஆள்வினை-செயலுடைமை, முயற்சி. மெய் வாய் கண் மூக்கு செவி என்பன ஐம்பொறிகள். இவற்றில் குறையுடைமை பழியாகாது. அறிய வேண்டியனவற்றை அறிந்து, செயல் செய்து முயன்று வாழாமையே பழியாகும். தமக்கு ஏற்பட்ட குறையைத் தூக்கி எறிந்து, அக்குறையில்லாரைவிட மேலான வெற்றி பெற்ற ஹெலன் கெல்லரின் ஆள்வினையை-செயல் ஆள் திறனை நாம் அறியும்போதுதான் இக்குறளின் பொருள் முற்றும் விளங்குகிறது.

## செல்வமும் செல்வாக்கும் தேடி வரும்

சிலர் சோம்பி இருந்து, 'செல்வமும் செல்வாக்கும்' எப்போது வருமென எதிர்பார்த்தபடி இருப்பர். அவர்களைக் கண்டு, இவை ஓடுமே தவிர நாடி வாரா. யார் ஒருவர் சற்றும் மன அசைவேயின்றி, உறுதியுடன் ஊக்கங்கொண்டு உழைத்தபடி இருக்கிறாரோ, அவர் இருக் குமிடம் தேடி ஆக்கம் (ஆக்கமாயின எல்லாம், செல்வமும் செல்வாக்கும்), முகவரி விசாரித்துக்கொண்டு, வழிபார்த்துப் போய்ச் சேரும்! அவர் இவ் ஆக்கத்தை எதிர்பார்த்திரார்; 'உழைப்பே செல்வம்' என்று அதுவே கண்ணும்

கருத்துமாயிருப்பார்! ஆக்கம் அனைத்தும்-தாமே அவரைத் தேடிக்கொண்டு செல்லும்.

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை. (ஊக்கமுடைமை 594)

இதிலுள்ள நுட்பமான செய்தியை மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டும். செல்வத்தில் ஆசைவைத்து, அது இருக்கும் இடத்தைத் தேடுபவர்களைச் செல்வம் எளிதில் சென்றடைவதில்லை. மாறாக, அது பற்றிய நினைப்புக்கூட இன்றி, 'உழைப்பே செல்வம்' என்று கடமையே கண்ணாக இருந்தால், அவர்களைத் தேடிக்கொண்டு செல்வம் சென்றடையும்!

பகவத் கீதை சொல்வதுபோல் பற்றின்றியே செயலில் ஈடுபடுதல், ஆசையின்றியே காரியமாற்றுதல், பயனைக் கருதாமலே உழைப்பில் தோய்தலை இக்குறள் உணர்த்துகிறது.

## ஊழையும் வெல்லலாம்

'ஊழ்' என்பது என்ன? 'முறை, நெறி, விதி' என்று பொருள். அது ஒரு சுழற்சி. சில போது நாம் அச்சுழற்சியில் அகப்பட்டுக்கொள்கிறோம்; சிலசமயம் நாமே அச்சுழற்சியை மாற்றி எதிர்திசையில் சுழலலைக்கும் வலிமையும் பெறுகிறோம்.

நாற்சந்தி ஒன்றை மனக்கண்முன் நிறுத்திப் பாருங்கள். ஆயிரம் வண்டிகள், பல நூறு மக்கள் போய்வரும் சுழற்சி இது. ஒரு முறையில் இயங்குவதால் இவை மோதிக்கொள்வதில்லை. முறை மாறின் விபத்துக்களும் நேர்கின்றன.

உலக மக்களுடைய செயல்கள், நம் செயல்கள், முன் செய்தவை, இன்று செய்பவை - எல்லாம் 'வினை'ச்

சுழற்சிகளே. இச் சுழற்சியில் சில போது மேலே தூக்கப்படுகிறோம்; சில சமயம் கீழே தள்ளப்படுகிறோம்.

இதில் பெரும்பகுதி நம் வினைப் பயன்களே, நம் செயல்களின் விளைவுகளே நம்மைப் பாதிக்கின்றன. மற்றவர்தம் வினைப்பயனுடன் நாம் குறுக்கிடாமற் போதலும் இயலாது. நாம் ஒழுங்காகப் போனாலும் எதிரே வரும் வண்டி நம் மீது மோதிவிடுவதில்லையா?

நம் வினை-செயலின் பயனையே-அது திரும்ப முறைப்படி-நம்மை வந்தடைவதையே 'ஊழ்' என்றனர். அதை வெல்ல முடியாது. வினைப்பயன் விளைந்தே தீரும். உண்மைதான்!

அதை வெல்ல வழியுண்டா? உண்டு. எவ்வாறு?

ஊழ், விதி என்பன வினைப்பயன்தானே. வினைப்பயன் என்பது நாம் முன்செய்த வினையின் பயன்தானே? இப்போதும் நாம் வினை-செயல் செய்ய வாய்ப்புளதன்றோ? இப்போது அப்பழைய நம் செயலின் பயனையும் வெல்லுமளவு புதிய முயற்சிகளை மேற்கொண்டால், இச் செயலின் நற்பயன்கள் முன்னையவற்றுடன் மோதட்டுமே! இன்றைய முயற்சி - வினை - செயல் - உழைப்புக் கூடுமேயானால், மேலேழுமேயானால், பழைய வினைப் பயன் தாழும்தானே! நம் செயலாலேயே நம் செயலை வெல்வது இது! நம் தீவினை ஒன்றை நம் நல்வினை ஒன்றால் நாமே வென்றால் ஆகாதா? நம் தீயூழ் தாழுமளவு, நம் நல்லூழை மேலெழ வைக்கும் முயற்சி நம் கையில்தானே இருக்கிறது. ஒரு குறிப்பு என்னவென்றால், பழைய ஆகாஊழுக்கு மேற்பட்டு நம் ஆகும்ஊழ் வலிமைப்பட, நாம் அந்த அளவு கடும் முயற்சியை - செயலை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

**ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**

**தாழாது உஞற்று பவர்.** **(ஆள்வினையுடைமை 620)**

உப்பக்கம் காணுதல் - புறமுதுகு காட்டி ஓடச்செய்தல். ஊழை வென்று ஓட்டுதல் இது. போர்க்களச் சொல் இது. எதிரியைத் தோற்று முதுகைக்காட்டி ஓட வைப்பது. பகையைத் தாழ்வு படுத்தி, வலி இழக்க வைப்பது.

ஊழ் என்பது ஒரு சுழற்சி, காற்றடிப்பது போல. அதை முற்றும் அழிப்பது ஒழிப்பதென்பது இல்லை. அது வரும்; போகும். சுழன்று சிலபோது தாக்க ஓடிவரும். நாம் எதிர்த்து முயன்றால் விலகிப்போகும். அச்சுழற்சியை நாம் பயன்படுத்திக்கொள்வது, 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வது' போலச் சிலசமயம் பயன்படும். சில சமயம் அச் சுழலில் சிக்கிக்கொண்டு நாம் தள்ளாடுவதும் உண்டு. அது நம் வலிமையையும் வலிமையின்மையையும் பொறுத்தது. 'உலைவின்றித் தாழாது உஞற்றுதல்' என்றால், எவ்வளவு துன்பம் - இடர் வந்தாலும் மனம் உலையாது, அவ்வூழுக்குத் தான் தாழாது, தனக்கு அவ் ஊழ் தாழுமாறு கடும் முயற்சி செய்வதாகும்! உஞற்றுதல் - கடுமையான உழைப்பு.

## மான உணர்வைத் தூண்டுதல்

இளைஞர்கள் திருக்குறள் முழுவதையும் படிக்கவேண்டும். அது இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரையும் முன்னேற்றுவதற்காகத் தோன்றிய நூல். ஒருவர் எந்த நிலையிலிருந்தாலும் எவ்வளவு கீழ்ப் படியிலிருந்தாலும் அவரை முன்னேற்ற வழிசொல்பவர் திருவள்ளுவர். எவ்வாறேனும் முன்னேற்றவேண்டுமென எண்ணுவதால், அவர் சாம பேத தான தண்டம் முதலாய பல வழிகளைக் கையாள்கிறார். இதமாகச் சொல்கிறார்; பிறரினும் வேறுபாடு காட்டுகிறார்; இன்ன நன்மை உண்டு என்று தூண்டுகிறார்; கடைசியாகத் 'தண்டம்' என்று மிகக் கடிந்தும் கூறுகிறார்.

மான உணர்வைத் தூண்டுமாறு, கடுமையாய்ச் சொன்னால் தான் சிலர் எழுந்து வேலை செய்யத்

தொடங்குவர். முந்தையோர் செல்வத்தை வைத்து உண்டு வாழ்பவனையும், பிறர் சொத்தைக் கவர்ந்துண்டு வாழ்பவனையும் குறிப்பால் கடிந்து, அவன் மான உணர்ச்சியைத் தூண்டிச் செயற்பட வைக்கின்றார்.

தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினிய(து) இல். (இரவச்சம் 1065)

அடுபுற்கை - அரிசிச் சோறு, அடப்பட்ட - சமைக்கப்பட்ட புல்லிய அரிசிச் சோறு. தெண்ணீர் - அதை வடித்த 'கஞ்சித் தண்ணீர்' - தெளிந்த 'நீராகாரம்'. தன் முயற்சியே 'தாள்' எனப்படும். தாள் தந்தது - தன் முயற்சியால் கிடைத்தது, இத் தெளிந்த சோற்றுத் தண்ணீர் மட்டுமேயாயினும் அதை உண்டு வாழ்வதை விட இனியது வேறொன்றும் இல்லை. பிறரிடம் யாசித்தும் கடன்பெற்றும் பல்சுவை உணவை உண்பதைவிட, தன் முயற்சியால் கிடைத்த கூழும் இனிதாகும். 'உன் முயற்சியால் கிடைத்ததை உண்டு மகிழ்ந்து வாழப் பழகிக்கொள்! பிறரிடம் இரந்து வாழ்வது பெரிதன்று!' என்பது இதன் கருத்து.

'எனக்கு வறுமை வந்துவிட்டது; என்னிடம் எதுவுமில்லை' என்று ஏங்கி நிற்பதை, இரந்து வாழ்வதை வள்ளுவர் விரும்பவில்லை. 'இந்த நிலமில்லையா, அதில் உழைத்து வாழக் கூடாதா? நீ முயன்ற வழிகளில் வருமானம் வராவிட்டாலென்ன? வருமானம் வரும் வழிகளைக் கண்டு நீ அதற்கு மாறிக்கொள்ள வேண்டியதுதானே? ஒன்றுமில்லை என்றா சொல்லுகிறாய்; அவ்வாறானால் துறவி ஆகிவிட வேண்டியதுதானே? பிறருடைய சோறு வடித்த காடி நீருக்கும் உப்புக்கும் எமனாக நீ உயிர் வாழ வேண்டுமா?' - இவ்வாறெல்லாம் இடித்துப் பேசி, மான உணர்வைத் தூண்டுவதற்குக் காரணம், எவ்வாறேனும் மனிதனைத் தன் முயற்சியால் வாழவைக்க வேண்டும் என்பதற்காகவேயாம்.

## தெய்வமும் முன் வந்து உதவும்

எடுத்த முயற்சிக்குப் பயனுண்டு; செய்த செயலுக்கு விளைவுண்டு. இது இயற்கையின் நியதி; தெய்வ விதி. ஒரு வேளை ஊழ்வினையால் தாழ நேரிட்டாலும், தெய்வமே துணையாகாமற் போனாலும், முயலும் உன் 'வினைக்குப்' பயனுண்டு; மெய் வருந்தி உழைப்பதற்குக் கூலியுண்டு. அதை விதிவகுத்த தெய்வமும் மறுக்க முடியாது. உனக்குக் கூடுதலான நன்மை கிடைக்காவிட்டாலும், உழைத்ததன் பயனை உறுதியாக இறைவன் தந்துதானே தீர வேண்டும்!

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (ஆள்வினையுடைமை 619)

கூலி - இங்கு பயன். மெய்யை வருத்தி உழைத்ததற்குக் கூலியாவது உண்டல்லவா? ஒருவரை ஊக்கப் படுத்துவதன் உச்சத்தை இதில் காண்கிறோம்.

அது மட்டுமா?

குடிசெயவல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும். (குடிசெயல்வகை 1023)

'என் குடியை உயர்த்துவேன்' என அதற்குரிய முயற்சிகளில் ஒருவன் இறங்கினால் தெய்வம் வேட்டியைத் தாறுபாய்ச்சித் சுற்றி இறுகக் கட்டிக்கொண்டு, வேலை செய்வதற்கு வாய்ப்பாக, ஏவிய வேலையைக் கேட்க, அவன் முன்னே வந்து நிற்குமாம்.

முயற்சி என்றும் பாழ்படாது என உறுதி கூறுகிறது இக்குறள்.

## தடைகளைக் கடத்தல்

முயற்சி, ஒரு செயல் என்றால் தடைகள் சில வரவே செய்யும். சிலர் அத் தடைகளையே முன்னேற உதவும் படிகளாக மாற்றிக்கொண்டு, மேற்செல்வர்; மற்றும் சிலர்

சிறுதுன்பம் வந்தாலும் அயர்ந்து செயலைக் கைவிட்டுவிடுவர்.

முயற்சித் துன்பம் வேறு, இடையூறாய் வரும் எதிர்பாராத் துன்பம் வேறு. ஒரு கடை வைத்தால் கூட, அதில் ஊதியம் ஈட்டும் நிலை வர ஆறுமாதம் ஆகலாம். முயற்சிகள் பெரிதாகப் பெரிதாகத் தடைகளும் இடர்ப்பாடுகளும் பெரிதாகவும், கூடுதலாகவும் வரத்தான் செய்யும். அவற்றை முன்கூட்டி அறிந்தும், அவற்றைத் தாங்கிக்கொள்ள ஆயத்தமாகியுமே முயற்சிகளில் இறங்கவேண்டும்.

துன்பம் நம்மை அழிப்பதற்கு மட்டுமே வருவதாகக் கருதக்கூடாது. நம்மை ஆக்குவதற்கு வரும் துன்பங்களும் உள. சில நம்மைத் தூய்மைப்படுத்த வரக்கூடும்; சில நம் குற்றங்களை நீக்க வரக்கூடும்; சில நமக்கு உந்துதல் தர-ஊக்கப்படுத்த உதவக்கூடும். துன்பம், இன்பம் இரண்டிற்கும் முதல் எழுத்து மட்டுமே வேற்றுமை. அந்த ஒரெழுத்தை மாற்றினால் துன்பம் இன்பமாகிவிடும். தமிழ் எவ்வளவு அழகிய நுட்பமான மொழி என எண்ணிப் பாருங்கள்!

தங்கம் சுடச்சுட அதிலுள்ள செம்பும் தும்பு தூசும் நீங்கி ஒளிவிடும். தங்கம் போன்றவர்களையும் துன்பம் சுடச்சுட, அவர்கள் சுடர்விட்டு ஒளிவீசுமாறு சிறந்து விளங்குவர்.

சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (குவம் 267)

நோற்றல் - தாங்கிக்கொள்ளுதல், தவம் செய்தல். நோற்கிற்பவர்க்கு - துன்பத்தைத் தாங்கிக் கொள் பவர்களுக்கு. தன் முயற்சியே இவ்வுலகத் தவம் என்பது வள்ளுவர் கருத்து. ஒரு தொழிலைத் தொடங்கியவன், அதைத் தவம் போலக் கருதி அதே நினைவாய் - ஓர்மையுடன் - வரும் தொல்லைகளையெல்லாம்

தாங்கிக்கொண்டு வாழ்வானேயானால், வெற்றியின் உச்சிக்குச் செல்வது நிச்சயம்.

வெற்றி காலங்கடந்து வரும்; பெரிய வெற்றி மிகக் காலங்கடந்தும் வரும். அதுவரை பொறுத்திருக்க வேண்டும்; காத்திருக்க வேண்டும்; இழப்பை - இடரை - இன்னலை - தடையைத் தாங்கிக்கொள்ளவும் வேண்டும். அதற்குத்தான் 'முயற்சித் தவம்' என்று பெயர்.

ஒரு புராணக் கதை; கேள்விப்பட்டிருப்பீர்கள்!

தேவர்கள் சாகாநிலை வேண்டும் என்று கருதினார்கள். அதற்காகச் சாவாமருந்தெனப்படும் அமிழ்தத்தை வேண்டினார்கள். இதில் அசுரர்களும் பங்கு கேட்டார்கள். சிவபெருமான் 'விந்திய மலையை மத்தாகவும் வாசுகியை நாண்கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடையுங்கள்; அமிழ்தம் கிடைக்கும்' என்றார். முதலில் சூடு தாங்காமல் ஆலகாலமெனப்படும் கொடிய விடம் வெளிப்பட்டது. எல்லோரும் அஞ்சி இறைவனிடம் ஓடினார்கள். அவர் அபயம் அளித்து, நஞ்சை உண்டு. தன் கண்டத்தில் அடக்கிக்கொண்டார். பிறகு மீண்டும் கடைந்த பொழுதுதான் அமிழ்தமும் திருமகள் முதலாய அரிய பொருள்களும் வெளிப் பட்டன என்பது கதை.

இதிலுள்ள உண்மை என்ன? புராணங்கள் உண்மையை மறைமுகமாகக் கூறுவதுண்டு என்பர். இது அவ்வகைப்பட்டது.

எந்தப் பெரிய முயற்சியிலும் கொடிய விடமனைய துன்பங்கள் முதலில் வெளிப்படும். அதை உண்டு, கண்டத்தில் அடக்குவது போல் அடக்கிக்கொள்ள வேண்டும். தளர்ந்து கைவிடாது, தாங்கிக்கொண்டு தொடர்வதை இஃது உணர்த்துகிறது. அங்ஙனம் தொடர்ந்தால் 'அமிழ்தத்தைப்' பெறுவது உறுதி. பெரிய

தொழிலதிபர்களும் விஞ்ஞானிகளும் இங்ஙனம் இறுதியில் 'அமிழ்தத்தை'க் கண்டவர்களே!

## செல்வராவதற்கும் இதுவே சிறந்தவழி

அறிவுலகில் மட்டுமல்லாமல், செல்வராவதற்கும் இதுவே சிறந்தவழி என்பார், திருவள்ளுவர்.

இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். (துவம் 270)

துன்பத்தைத் தாங்கிக் கொள்வதாகிய இந்நோன்பை மேற்கொள்ளாதவர் - நோலாதவர் பலராக இருப்பதாலே தான், இல்லாத பேர்களும் பலராகவுள்ளனர். அவ்வாறு நோற்பார் சிலர் செல்வராகவுள்ளனர். உலகில் வறுமை தாண்டவமாடக் காரணம், இடைவிடா முயற்சி இன்மையே. யாராயினும் 'ஐயோ, என் தலைவிதி' ஏழையாகிவிட்டேன்; உண்ண உணவில்லை; அது இல்லை' இது இல்லை' என்றால் அவர் கூற்றைத் திருவள்ளுவர் ஏற்பதில்லை. முயற்சி இல்லாமைதான் காரணம் என்பது அவர்தம் முடிந்தமுடிபு. சாக்குப்போக்குக்கு அவர் உடன்படுவதே இல்லை. "அப்படி இரந்து வாழும்படி அந்த இறைவன் படைத்திருப்பானேல், அவனும் இவ்வுலகில் உன்னைப் போல் அலைந்து கெடுவானாக" என்று கடுமையாய்க் கூறுவார் அவர் *(1062)*. அவ்வாறு படைக்கவில்லை என்பது துணிபு.

## துன்பம் துன்பப்படும்

துன்பத்தை வெல்வதென்பது எவ்வாறு?

துன்பம் வந்தால் ஏற்படும் நிலைமை என்ன? மனம் பதறுகிறது; உள்ள அறிவும் இருளடைகிறது; கலக்கத்தால் தடுமாற்றமேற்படுகிறது; எல்லாம் குழம்பி மலைச்சரிவில் விழுந்தவன் கதைபோல் பாதாளத்தில் வீழ்ந்து விடுகின்றனர்.

மனவலிமை, துணிவுதான் துன்பத்தை வெல்லும். அவ் வலிமையைப் பெருக்கிக்கொண்டால் முன் சுட்டிய

கலக்கங்கள் ஏற்படா; மாறாக எதிர்த்து வெல்ல வல்ல திட்டங்கள், சிந்தனைகள் மனத்தில் உருவாகும்.

பெரும் பாறாங்கல்லும் சிறிது நகற்றிவிட்டால், பிறகு சாய்ப்பது எளிதாகிவிடுவதுபோல, மலைபோலத் தோற்றிய துன்பங்கள் பனிபோல விலகக் காணலாம்.

அத்தகைய அசையாத ஊக்கமுடையவனைக் கண்டால் துன்பம் விலகிப் போகுமாம்; அவனை அடைந்த துன்பம் 'ஐயோ, இவனிடம் சென்றோமே; நம் பாய்ச்சல் பலிக்கவில்லையே! நம்மைக் கண்டால் நடுங்குவோர் பலரிருக்க, இவனிடமா மாட்டவேண்டும்", என்று அது துன்பப்படுமாம்.

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும். (இடுக்கணழியாமை 625)**

துன்பம் தனியே வராது; ஒன்றுடன் ஒன்று சேர்ந்து வரும்; அடுக்கிவரும். சளி தலைவலியைக் கூட்டிவரும்; தலைவலி சுரத்துடன் சேர்ந்து வரும். அரிசி இல்லையே என்று தேடும்பொழுது, பால்காரன் பாக்கி கேட்க வந்து நிற்பான்; குழந்தை புத்தகம் வாங்கப் பணம் கேட்கும். இது உலக இயல்பு. ஆனால் 'அடுக்கி வரினும்' - மனம் அழியாதவனை, ஊக்கம் குலையாதவனை அடைந்த துன்பம் தான் துன்பப்படும் என்று கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகை.

அது மட்டுமா? நம் செந்நாப் போதார் துன்பத்தை எதிர்க்க ஒரு வரையறைத் திட்டம் (Formula) கூறுகிறார். அது சுருக்கமான கணக்குச் சூத்திரம் போலவுளது. "துன்பம் துன்பப்படுத்த வேண்டும் என்று வருகிறது. அது சமயம் நீ மன வலிமையுடன் துன்பப்படாமல் இருக்க முயற்சிசெய். அப்போது தன்பம் தன் முயற்சி பலிக்காததால் உன்னைப் பற்ற வந்ததற்காகத் தான் துன்பப்படும்".

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர். (இடுக்கணழியாமை 623)**

உளவியல் முறையில், ஒரு நண்பனைப் போலச் சொல்லப்படும் இந்த அறிவுரை, தெய்வப் புலவரின் மனிதநேயத்தைக் காட்டுகிறது.

## உச்சத்தைத் தொடுதல்

வாழ்க்கை என்பது என்ன?

உயிரோடு இருக்கிறோம் என்பதற்கும் வாழ்கிறோம் என்பதற்கும் என்ன வேறுபாடு? பிற உயிரினங்கள் உயிரோடுள்ளன; வாழ்வதில்லை. மனிதனை மட்டுமே 'வாழும் உயிர்' *(392)* என்று வேறுபடுத்திச் சிறப்பித்துச் சொல்வார் நம் பெருநாவலர். வாழ்பவருள்ளும் 'செயற்கரிய செய்பவரே பெரியர்' என்பது அவர் கருத்து *(26)*. நாம் வாழ்வாங்கு வாழ்வதெனில், நாம் எடுத்துக்கொண்ட துறையில் உச்சத்தைத் தொட வேண்டும். எந்தத் துறையை எடுத்துக்கொண்டோமோ, அந்தத் துறையையும் விளங்கச்செய்து, நாமும் விளங்கித் திகழ வேண்டும். விளையாட்டுத் துறையாயினும் அதில் உலகம் வியக்கும் நிலையை அடைபவர்களை இன்று காண்கின்றோம். இளங்கோவும் கம்பரும் திருவள்ளுவரும் பற்றி நாளும் புதுப்புது ஆய்வுகள் வெளிவருகின்றன. ஏன்? அவர்கள் தாம்தாம் எடுத்துக்கொண்ட எழுத்துத்துறைகளில் உச்சத்தைத் தொட்டுள்ளார்கள். உலகமே வியக்குமாறு எழுத்தைப் படைத்துள்ளார்கள்.

அவ்வாறல்லாமல் வெறுமனே பகட்டுவது; உள்ளீடின்றி வெளிச்சம் போடுவது; கெட்ட பெயரெடுப்பது எல்லாம் கூடா. தோன்றினால் புகழுடன் விளங்கித் தோன்ற வேண்டும்; இன்றேல் வெளிப்படாமல் இருப்பதே மேல்.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று. (புகழ் 236)

இகழொடு விளங்குதல் தவறு. இன்றும் நம் அரசியல் தலைவர்கள் பலர் ஊழலுக்காகக் கைது செய்யப் படுகிறார்கள்; விசாரிக்கப்படுகிறார்கள்; நீதி மன்றத்துக்குக் கொண்டுசெல்லப் படுகிறார்கள். அங்ஙனம் போகும் போதும் தலைநிமிர்ந்து நடக்கிறார்கள். இதை விடக் கேவலம் வேறில்லை. பொதுவாழ்விலோ, ஆய்விலோ, கலையிலோ எதிலாயினும் பலரறியத் தோன்றுவார் புகழொடு வெளிப்படலே போற்றத்தக்கது. அஃதில்லார் அங்ஙனம் பலரறியத் தோன்றாதிருந்து மறைதலே நல்லது.

இதைப் புறநானூற்றில் வரும் ஔவையின் வாக்கால் இன்னும் தெளிவாக விளங்கிக் கொள்ளலாம். அதியமான் நெடுமான் அஞ்சியின் மறச்சிறப்பை உவமை ஒன்றில் வைத்து, ஔவையார் கற்பனை நயம்படப் பாராட்டு கின்றார்.

அக்காலத்தில், தீக்கடைகோல்கள் மூலம்தான் நெருப்பை உண்டாக்குவர். இரண்டு மூங்கில் குழாய்களைச் சுழற்றி, அதிலிருந்து நெருப்புப் பொறி பறக்கச்செய்து தீ பற்றவைப்பர். அந்த மூங்கிலுக்கு 'ஞெலிகோல்' என்று பெயர். அதை வீட்டின் முன் தாழ்ந்திருக்கும் 'இறவாரம்' எனப்படும் இறப்பில் செருகிவைத்திருப்பர். அப்போது அது எவ்வித அசைவுமின்றி அமைதியாய் இருக்கும். அதனையே வெளியே எடுத்துச் சுழற்றினால், அதிலிருந்து கனன்று ஓசையிட்டுக்கொண்டு நெருப்பு வெளிப்படும். அப்போது அதன் ஆற்றல் வெளிப்பட்டு, முன்பு அடங்கியிருந்தது இதுதான் என்று வியக்கவைக்கும்.

அஞ்சியும் இறப்பில் செருகிய 'ஞெலிகோல்' போலத் 'தோன்றாது' அடங்கியிருப்பான். ஆனால் போர்க்களத்தில் தோன்ற வேண்டிய சமயம் நேர்ந்துவிட்டால், அத் தீக்கடைகோலிலிருந்து கனன்று எரியும் நெருப்பு வெளிப்படுவதுபோலப் பேராற்றலோடு தோன்றுவான்! இதுவே அவனது வீரத்தின் சிறப்பு.

நெடுமான் அஞ்சி
இல்லிறைச் செரீஇய ஞெலிகோல் போலத்
தோன்றா திருக்கவும் வல்லன். மற்றதன்
கான்றுபடு கனைஎரி போலத்
தோன்றவும் வல்லன்தான் தோன்றுங் காலே (புறம். 315)

(இறை-இறவாரம், இறப்பு. கான்றுபடுகனை எரி-கக்கப்பட்டு வெளிப்படுகிற சினத்தோடு கூவி எரிகிற காட்டுத்தீ)

தோன்றாதிருக்கவும் வேண்டும்; தோன்ற வேண்டிய அவசியம் வந்தால் சிறப்போடுதான் தோன்றவேண்டும்!

அவையில் பேசாது இருக்கவேண்டும்; பேச வேண்டிய கட்டாயம் வந்து பேச எழுந்தால், அவையோர் விழையும்படி சிறப்பாகப் பேச வேண்டும்! இயலாது போலிருப்பின், பேசாதிருந்து விடுதலே சிறப்பு.

ஒரு காரியத்தைத் தொடங்கக் கூடாது; தொடங்கினால் வெற்றியாகத்தான் முடிக்கவேண்டும்!

இவ்வாறு எத்தனையோ சொல்லலாம்.

நாம் சில இயல்புகளுடனும் பண்புகளுடனும் திறமைகளுடனும் இவ்வுலகில் படைக்கப் பெற்றிருக் கிறோம். அவை நம் பிறப்பில் அமைந்த உயிர்ப்பண்புகள். அவற்றை நாம் முழுமையாக வளர்த்துக் கொள்ள வேண்டும். அங்ஙனம் வளர்த்துக் கொண்டவர்களை உலகமே பாராட்டும்; போற்றும்; புகழும்!

தன்னுயிர் தான்அறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும். (தவம் 268)

(அறப் பெறுதல் - முழுமையாகப் பெறுதல். தன் உயிரை முழுமையாகப் பெறுதல் என்பது, தன் உயிர்ப் பண்புகளை வளர்த்து, முழுமை அடைதல். அங்ஙனம் "நீ உன்

'முழுமையை' அடைந்தால் உன்னை உலகம் போற்றும்'' என்பது வாழ்க்கையில் தத்தம் துறைகளில் உச்சத்தைத் தொட்டவர்களை உலகெலாம் வணங்கிப் போற்றிப் பாராட்டும் என்பதாம்.

இசைத் திறனோடு பிறந்தவர் இசையில் ஈடும் எடுப்புமின்றி வளர்ந்தால், உலகம் அவரைப் பாராட்டக் காண்கிறோமல்லவா? அவர் திறனை அவர் வளர்த்துக் கொண்டால் அவருக்குத்தானே நல்லது; உலகு ஏன கொண்டாடவேண்டும்? உலகில் ஓர் உயிர் சிறப்புறுவது, உலக உயிர்களுக்குச் சிறப்பன்றோ!

வள்ளுவ நடையை நோக்குக! "ஒருவர் தன் உயிரைத் தான் முழுதும் பெற்றால், அதை ஏனைய மன்னுயிரெல்லாம் தொழுதுபோற்றும்!'' வாழ்க்கை உடன்பாட்டுச் சிந்தனையுடைய வள்ளுவர், இங்ஙனம் தவம் என்பது தன் உயிர்ப் பண்புகளைத் தான் முழுவதும் பெறுதலே - உச்சத்தைத் தொடுதலே என விளக்கியுள்ளமை அறிந்தின்புறத்தக்க செய்தியாகும்.

# 5

# ஆளுமை மேம்பாடு

வையத் தலைமைகொள்' என்றார் பாரதியார். அதற்கேற்ற தோற்றம், உடை, மிடுக்கு, பெருமிதம் யாவும் அமையவேண்டும். ஆனால் அவை மட்டும் போதா.

ஒருவரைப் பார்த்ததும் இவர் ஒரு சிந்தனையாளர் என்றோ, இவர் ஒரு கவிஞர் என்றோ நம்மால் உணர முடிகிறது. அங்கு உடை, நடை, அழகை விடத் தோற்றமே அக அழகைக் காட்டுகிறது.

ஒருவரைப் பார்த்ததும் மகிழ்ச்சியாக இருக்கிறது; அவருடன் பழகுவது இனிமையாக இருக்கிறது.

சிலரைப் பார்த்தால் நமக்குத் துக்கம் வருமபோல இருக்கிறது; சிலபோது தூக்கம் வரும் போல இருக்கிறது. ஊக்கம் இருப்பதும் போய்விடும் போல இருக்கிறது.

முதலில் முகமலர்ச்சி வேண்டும்; இன்சொல் பேசவேண்டும். சிலரது குரலிலேயே ஆளுமை தென்படும். அவர் பேசும் விதத்தால் பலரும் கட்டுண்டு அடங்கிப்போவர். முக ஆளுமை, குரல் ஆளுமை, தோற்ற ஆளுமை, கல்வி ஆளுமை, நுண்ணறிவு ஆளுமை, பண்பு ஆளுமை எனப் பலவாறு ஒருவரிடம் ஆளுமை அமைகிறது. ஒன்றிரண்டமைவதே கூடச் சிறப்புத்தரும்.

அமெரிக்காவில் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பேசிப்பார்த்து ஆட்களை வேலைக்குத் தேர்வு

செய்கிறார்கள். குரலிலும் பேச்சுமுறையிலும் திறமை அறிவொடு கூடிய ஆளுமையைக் கண்டுகொள்கிறார்கள்!

'அருஞ்செல்வி, இன்னா முகத்தான்' *(565)* என்றார் வள்ளுவர். பார்க்கவே முடியாது; பார்க்கும்போதும் முகங்கொடுத்துப் பேசக்கூடிய நிலையில் இருக்கமாட்டார்; பேசினும் முகமோ கடுகடு என்று இருக்கும். அவர் பெரிய ஆலை அதிபராக இருக்கலாம். மிகப்பெரிய கோடீசுவரராக இருக்கலாம். இருப்பினும் உலகம் அவரை விரும்பாது. அவரைப் பார்க்க நேர்ந்ததால் பார்த்தவருக்குப் பேய் அறைந்ததுபோல் ஆகிவிடுமாம், வள்ளுவர் சொல்கிறார்.

ஆளுமை என்பது இனிமை கலந்தது. 'முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி' *(92)* என்பது வள்ளுவம். முகம் அடிக்கடி பார்க்கவேண்டும் என்பது போன்ற விருப்பத்தை ஏற்படுத்த வேண்டும். இனிதாகப் பார்ப்பதிலேயே, ஒரு வணிகப் பேரத்தைத் தமக்குச் சாதகமாகச் சிலர் முடித்துவிடுவர்.

'ஆளுமை' இதுதான் என்று கூறமுடியாது. புற அழகு இல்லாதவரும், 'கல்வி அழகே அழகு' என்பதற்கு இசைய, கல்வி முதிர்ச்சியால், ஆளுமைத் தோற்றம் பெற்றிருப்பர். ஒருவருக்குக் கண்டிப்பான அல்லது மிடுக்கான அல்லது கவர்ச்சியான தோற்றத்தால் ஆளுமை அமையலாம். ஒருவருக்குக் கண்பார்வையால், ஒருவருக்குக் குரலால், ஒருவருக்கு நடை உடை பாவனையால் ஆளுமை கூடுதலாக அமையலாம்.

கல்வி, சிந்தனை, திறமை எதுவுமின்றிப் புறஅழகு மட்டுமே அமைந்தால், அது ஆளுமை ஆகாது. அவர்களைவிடப் பதுமைகள் அழகானவை!

**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்**
**மண்மாண் புனைபாவை அற்று. (கல்லாமை 407)**

நுண்ணிய மாட்சிமைப்பட்ட அறிவும் நூல்களை நுழைந்து கற்ற புலமை அறிவும் இல்லாதவனுடைய மிக அழகிய தோற்றம் எவ்வாறு இருக்கும்? மண்ணால் அழகாகச் செய்யப்பட்ட பொம்மைபோல இருக்குமாம். இன்று கடைகளில் 'பார்வைப் பொம்மைகளைப்' பார்க்கிறோமல்லவா?

## சங்ககாலத் தலைமகன்

நற்றிணையில் அந்தக் காலத் தலைமகனின் 'ஆளுமை' பற்றித் தோழிக்குத் தலைவி கூறுவதாகக் 'கபிலர்' பாடியுள்ள ஓர் அடி நினைவில் கொள்ளக்கூடியதாகும்.

நின்ற சொல்லர்; நீடுதோறு இனியர் (நற். 1)

சொன்ன சொல் மாறாதவர்தான் 'நிலையான சொல்லையுடையவர்' என்பது. நீடுதோறு என்றால் எவ்வளவு காலம் நினைத்துக் கொண்டேயிருந்தாலும் நெஞ்சிற்கு இனிமை தருவர் என்பதாகும். பழகுந் தோறும்-எவ்வளவு காலம் பழகினாலும் முன்பு ஒருவிதம் பின்பு ஒருவிதம் என்றில்லாமல் ஒரே மாதிரியான இனிமையுடையவர் என்றும் கூறலாம். இத்தகைய 'இனியவர்களே' தம் ஆளுமையால் உலகை வென்று வாழ்வார்கள்.

## இராமனின் வடிவ அழகு

கம்பர் இராமனை எல்லாவித ஆளுமையும் உடையவனாகப் படைத்துள்ளார். மேலை நாட்டார் ஆளுமை (Personality) என்பதற்குக் கூறியுள்ள அனைத்தும், அதற்கு மேலாகவும் இராமனிடம் அமைந்திருந்ததாகப் படைத்து, அச்சொல்லுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவே கம்பர் இராமனைப் படைத்துள்ளார். இராமன் ஆட்சியைக் கைவிட்டு, காட்டிற்குள் புகும் நேரம்; இலக்குவனும் சீதையும் உடன்செல்லுகின்றனர்; துன்பமான சூழ்நிலை. ஆனால் அந்த நிலையிலும், உளம் தளராது செம்மாந்து நடக்கும்

இராமனைக் கம்பர் காட்டுகின்றார். பாடலின் சந்தமும் இராமனது நடையுடன் போட்டி போடுகிறது.

> வெய்யோன்ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறைய
>
> பொய்யோஎனும் இடையாளொடும் இளையானொடும் போனான்

சூரிய ஒளி, தன் மேனியிலிருந்து விரியும் சோதியில் மறையுமாறு, இடை இல்லையோ என்றெண்ணும் படியான சீதையுடனும் இளையவன் இலக்குவனுடனும் காட்டிற்குள் சென்றான். அவன் யார்?

> மையோ மரகதமோமறி கடலோமழை முகிலோ
>
> ஐயோ இவன் வடிவென்பதுஓர் அழியா அழகுடையான்

கருவண்ணமோ, பச்சை இரத்தினமோ, அலைகடலோ, கருமுகிலோ- யாதென்றறியோம்! இவன் வடிவென்பதோர் அழியாத அழகுடையான். என்ன வியப்பு இது! 'அழியா அழகு' - 'மண் மாண் புனை பாவை' எனப்படும் பொம்மை அழகெல்லாம் அழியும் தன்மையன; அறிவாலும் திறமையாலும் பண்பாலும் கூடி அமைவதே அழியா அழகு.

ஒருவரது பணத்தைக் களவாடிவிடலாம். அவருடைய பிற உடைமைகள் பறி போகலாம். ஆனால் அவரது அறிவு யாராலும் கவர்ந்துகொள்ள இயலாதது. 'அற்றம்' எனப்படும் குறையோ, இடையூறோ, பாதிப்போ வந்தவிடத்து அதிலிருந்து உடனடியாக அவரைக் காக்கும் கருவி அவரது அறிவேயாகும். அதனை ஒருவரது உள் அரண் எனலாம். புறத்தார் தாக்கி அழிக்க முடியாத படி, உள்ளத்தினுள்ளே இருக்கும் பாதுகாப்புக் கோட்டை அது.

> அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
>
> உள்அழிக்க லாகா அரண். (அறிவுடைமை 421)

ஒருவரது ஆளுமைக்கும் இந்த 'உள் அரணே' அடிப்படையாகும். எனவே கல்வியால் ஒருவர் தம் தலைமையை வளர்த்துக்கொள்ள வேண்டும்; வளர்த்துக் கொள்ளாதவர் கடையராகிவிடுவர்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர். (கல்வி 395)

செல்வர்முன் வறியவர் ஆசையால் கைகட்டிப் பணிந்து நிற்பர். ஏக்கறுதல்-ஆசையால் தாழ்ந்து பணிந்து நிற்பது. அங்ஙனம் கல்விக்காகத் தாழ்ந்து, பணிந்து நின்றும் முயன்று கற்றுக்கொண்டவரே தலைமை பெறுவர். இவ்வாறு முயல்வதற்கு அஞ்சிக் கல்லாது போனவர் சமுதாயத்தால் கடையர் என ஒதுக்கப்படுவர்.

மேலும் கல்வியுடன், கேள்வியறிவும் வேண்டும். கேள்வியறிவு ஒருவருக்கு எளிதிற்கிடைக்கும் பழுத்த அனுபவ அறிவாகும். அதனால் அறிவுடைமை முழுமையடையும்.

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். (கேள்வி 416)

எந்த அளவென்பதில்லை. எந்த அளவு முடியுமோ, அந்த அளவு - அது சிறிதளவேயாயினும் நல்லவற்றைக் கேட்டுக்கேட்டு, நல்லறிவு பெறவேண்டும். அந்த அளவிற்கு ஒருவருக்குப் பெருமையுண்டாகும்.

## ஒளியும் புகழும்

திருவள்ளுவர் ஒளி என்ற கலைச்சொல்லை ஆள்கின்றார். ஒருவர் வாழ்கின்ற காலத்துப் புகழுடனும் செல்வம் செல்வாக்குடனும் திகழ்வதே ஒளி எனப்பட்டது. வாழ்கின்ற காலத்தும் பிறகும் நிலைபெறுவது புகழ் எனப்பட்டது. ஒளி - தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை என்பர் பரிமேலழகர்.

ஒளி ஒருவற்கு உள்ள வெறுக்கை; இளிஒருவற்கு
அஃதிறந்து வாழ்தும் எனல். (பெருமை 971)

உள்ள வெறுக்கை - ஊக்க மிகுதி. வெறுக்கை - மிகுதி. எதையும் முடிக்க முடியும் என்று வேகத்தோடு எழுகின்ற உள்ள எழுச்சி இது. இலங்கைக்குச் சீதையைத் தேடச் செல்ல

விரும்பிய அனுமனுக்கு, கடலைத் தாண்டி விடலாம் என எழுந்த உள்ளத்து எழுச்சியைச் சுட்டிக் காட்டலாம். பலர் கூடுதலான முதலீடு செய்ய வேண்டும் என்றதும் தயங்குவர்; சிலர் ஒரு கல்வி நிலையம் அமைக்க விரும்பி 'அடடே நிரம்பச் செலவாகும் போலிருக்கிறதே' எனத் தள்ளிப்போடுவர். செயற்கரியனவாயினும் அவற்றைச் செய்யும் ஊக்க மிகுதியுடையாரே அதைச் சாதிக் கவல்லராகின்றனர். அதுவே அவருக்கு 'ஒளி' உண்டாக்கும்.

இன்று அன்னை தெரசா வாழ்கின்ற காலத்திலேயே அனைத்துச் சிறப்புக்களையும் பெற்றதை இதற்குக் காட்டாகக் கூறலாம்.

எனவே ஒளி என்பது, ஒருவனுக்கு ஏற்படும் ஊக்க மிகுதி பற்றியதேயாகும். சிலர் 'இது நம்மாலாகாது' என மனம் சோர்வது 'இளி'யாகும். இளி-இளிவரல்; பிறரால் பழிக்கப்படுதல். அக் காரியத்தைக் கைவிட்டுவிட்டு, 'ஏதோ வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம்' என வாழநினைப்பது ஏளனத்திற்கு இடமாகும்.

நாணுடைமையும் பண்புடைமையும்

ஏனைய விலங்குகட்கு இல்லாது, மனிதருக்கு மட்டுமே உள்ள ஒரு சிறப்பு நாணம் உடைமை-வெட்கப்படுதல். மிக உயர்ந்தவர்களிடம் இவ்வியல்பைக் காணலாம். காந்தியடிகள் சிறுபிள்ளையாய்ப் பள்ளியிற் படிக்கும் போது, யார் கண்ணிலும் படாமல் ஓடிப்போய் ஓடிவருவாராம். அத்துணை வெட்கப்படுவாராம். சிலர் தவறான ஒரு காரியத்தைச் செய்ய வெட்கப்படுவர். தம்மிடம் ஒரு குற்றம் நேர்ந்துவிட்டதென்றால் வெட்கத்தால் கூனிக்குறுகிப் போவர். மேலான பண்பினர் சிலர் தாம் ஒரு நல்லது செய்துவிட்டு, அதற்காகப் பாராட்டப்பட்டால் வெட்கப் பட்டு ஒதுங்குவர்.

இன்று சிலர் தம்மை யாரும் புகழும்போது, இன்னும் கூடுதலாகப் புகழக் கூடாதா என்பதுபோல், தலைநிமிர்ந்து

பார்க்கின்றனர். குற்றம் செய்து, சிறைக்குப் போகும் போதும் செம்மாந்து செல்கின்றனர். வெட்கம் தம்மைக் கண்டு வெட்கப்படுமாறு நடந்து கொள்கின்றனர். இதனைக் 'கீழுமை' என்று, புதுப்பெயரால் அழைக்கலாமே தவிர இவை ஆளுமை ஆகா.

**ஊண்உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல**
**நாணுடைமை மாந்தர் சிறப்பு (நாணுடைமை)**

மக்கள் உயிர்க்கு உணவும் உடையும் இவையல்லாதன பலவும் வேறுவேறல்ல, பொதுவானவையே. நன்மாந்தர் எனப்படுவார்க்கு இவைகளின் வேறாகச் சிறப்பாக இருக்க வேண்டியது நாணுடைமையேயாகும். வெட்கவுணர்வு இல்லாத வர்க்கு ஏனைய உணவு, உடை, அலங்காரமெதுவும் பெருமை தரா என்பதாகும்.

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண்பு இல்லா தவர். (பண்புடைமை 997)**

அறிவுக் கூர்மை அமைந்தாலும் பண்பாடு இல்லையேல் அவர்கள் மரம் போல்வர். மரத்திற்கு உணர்வு இல்லை; நெகிழ்ச்சியும் இல்லை. ஆகையால் மனிதர்தம் ஆளுமை அழகு, அறிவுடைமைகளால் அமைவது எனினும், அவற்றை நிறைவு செய்வது நாணுடைமையோடு கூடிய பண்புடைமையாகும். ஏனைய இருந்தும் பண்பு இல்லையேல், அவர்கள் 'மரம்' எனவே மதிக்கப்படுவர்.

நுண்ணறிவில்லாதாரை மண்பொம்மை என்றவர், பண்பில்லாரை மரம் எனச் சுட்டிக்காட்டுதல் கருதத் தக்கது.

உலகில் மிகச்சிறந்த நிருவாகி, ஆள்வினைத்திறன் உடையவர், மனிதரை வேலை வாங்கி ஆள்பவர், காரியமாற்றும் திறமையுடையவர், தொழிலதிபர், மேலாண்மையர், வணிகர் என்பார் அனைவருக்கும் இவ் ஆளுமைத் தோற்றம் இன்றியமையாததாகும். ஓர்

ஆசிரியனுக்குரிய சிறப்புக்களில் மேலான சிறப்பு அவரது தோற்றப் பொலிவாகும்.

ஆளுமை புறத்தோற்றப் பொலிவால் உண்டாகிறதா? அக அழகால் ஏற்படுகிறதா?

இரண்டும் அவசியம் என்பதை மறத்தல் கூடாது. ஒரு மனிதனுக்குக் கை, கால், கண், காது என அடுக்கிக் கூறப்படும் உறுப்புக்களில் எது முக்கியம்? இவை அமையினும், உயிர் எத்துணை இன்றியமையாதது? அதுபோலவே, ஆளுமைக்குப் புற அழகுகளும் தூய்மையும் தோற்றமும் தேவை; அவற்றின் மேற்பட்டு அறிவும் திறமையும் பண்பாடும் இன்றியமையாதன.

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களையும் உலகப் பொதுப்பணியில் ஈடுபட்டுச் சமுதாயத் தொண்டு செய்து புகழ்பெற்றவர்களையும் ஏதேனும் ஒரு துறையில் ஈடும் எடுப்புமற்ற சிறப்புப் பெற்றவர்களையும் உலகத் தலைவர்களையும் இளையோர் தமக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளுதல் பயன்தரும். அவர்கள் வாழ்க்கை வரலாற்றை அறிவதும் அவர்களாற்றிய அருஞ்செயல்களைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொள்வதும் இளையவர்க்கு வழிகாட்டியாகும்.

# 6

# சொல்வன்மை

ஒருவரது வாழ்க்கை வெற்றிக்குச் சொல்வன்மை மிகமிக இன்றியமையாத ஒன்று. மனிதன் ஒருவனே பேசும் ஆற்றலுடையவன். சிந்திக்கும் ஆற்றலும் பேசும் ஆற்றலும் மாந்தரைப் பிற உயிரினங்களின்றும் வேறுபடுத்துகின்றன.

பேசும் மொழி மாந்தன் முதன்முதல் படைத்த அரிய கண்டுபிடிப்பு. மாந்தர்தம் அனைத்துப் புதுமைப் படைப்புகளுக்கும் இதுவே அடிப்படையாகும். மொழியில் செவ்விய தன்மையும் சீர்மையும் கூர்மையும், மனிதரது செம்மை-சீர்மை-கூர்மைகட்கு வழிவகுக்கின்றன.

இன்று ஆங்கிலமொழி சொல்திறமைக்கு ஈடு கொடுக்கும் அரிய மொழியாக வளர்ந்துவிட்டது. எத்தனை நெளிவு சுளிவுகள்; எத்தனை வெளிப்பாட்டு வகைப்பாடுகள்! ஆங்கிலம் உலகெங்கும் கற்றவரைக் கவர்கிறது; எந்தக் கருத்தையும் சொல்ல ஏற்றமொழி என்றாகிவிட்டது. ஆங்கிலேயரின் ஆட்சி முடிந்துவிட்ட இடத்தும் ஆங்கிலேயரை வெறுப்பார் மத்தியிலும் கூட ஆங்கிலம் நிலையாக அமர்ந்து ஆட்சி செய்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு வளர்ந்த ஆங்கிலம் இன்று உலகை ஆள்கிறது; உலகத் தொடர்பு மொழியாகிவிட்டது. உலகெங்கும் தத்தம் தாய்மொழியோடு. ஆங்கிலமும் தெரிந்திருக்க வேண்டுமென்ற கட்டாயம் உருவாகிவிட்டது. இவற்றுக்கு இன்று வளர்ந்துள்ள ஆங்கில மொழியின் சீரும்

சிறப்பும் செம்மையும் இனிமையும் நுட்பமும் திட்பமுமே காரணங்களாகும். ஆங்கிலேயர்கள் 'சூரியன் மறையாத அரசாட்சியை' உலகிற் பல நாடுகளில் பரப்பி, ஆண்டது அதற்கு அடிப்படையிட்டது. எனினும் இன்று யாரும் வற்புறுத்தாமலும் கட்டாயப்படுத்தாமலும் ஆங்கிலம் உலகை ஆள்கிறது.

சற்றேறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், அன்றையச் சூழலுக்கேற்பத் தமிழ்மொழி செம்மையும் சீர்மையும் கூர்மையும் பெற்ற மொழியாகத் திகழ்ந்துளது. உலக வணிகத்தில் தமிழர்கள் ஈடுபட்டு, கடல் கடந்த நாடுகளில் எல்லாம் பரவியமையால், அன்றைய அளவில் தமிழ் ஓர் உலகமொழியாகப் பரவி வழங்கியமையும் உய்த்துணரப்படுகிறது. அன்றிருந்த பலவற்றில் – நாட்டியம், இசை, கூத்து, நாடகம், ஓவியம் போன்ற கலைகளுக்கும், அரசியல், வணிகம், கடல் பயணம், பல்வேறு தொழில்கள் போன்றவற்றுக்கும், மெய்யியல், வாழ்க்கை, குடும்பம், அறநெறி போன்றவற்றுக்கும் எனத் தமிழில் எத்தனையோ கலைச்சொற்கள் உருவாகி வழங்கப் பெற்றமையைப் பழந்தமிழ் நூல்களால் அறியலாம். ஒரு கருத்தைச் சொல்வதற்கும், கவிதையாகப் பாடுவதற்கும் பின்பற்றப் பட்டுள்ள நூற்றுக்கணக்கான உத்தித் திறன்களைக் காண்கிறோம். ஒரே சொல் பல்வேறு நிழற்பொருள்களுடன் வழங்கிய செழுமையையும், எக்கருத்தையும் வலுவோடும் பொலிவோடும் சொல்லக் கிடைத்த தமிழ்மொழியினது சொல், தொடர், வாக்கியத் திறன்களையும் மதிப்பிடுங்கால், அன்று நம் தமிழ் மொழி வளர்ச்சியின் உச்சகட்டத்தைக் காட்டுகிறது.

எத்தனையோ நூற்றாண்டுகளாகக் காக்கப்பட்டுவந்த தமிழ் மொழியின் வளமையும் செழுமையும் நன்கு உணரப்படாமல் இன்று சீரழிக்கப்படுகின்றன. கடுமை என்றும் பண்டிதர் தமிழ் என்றும் கேலி பேசிப் பேசித் தமிழின் தரம் கீழே கொண்டு செல்லப்படுகிறது. எவ்வளவு கொச்சையாக – கலப்படமாக – சிதைவாக 'பிழையாக'

எழுதியும் பேசியும் கெடுக்க முடியுமோ, அத்தனை திருப்பணிகளையும் தமிழ் இதழ்களும் திரைப்படங்களும் தொலைக்காட்சிகளும் நாள்தோறும் செய்து வருகின்றன.

தமிழ் இருவழக்கு மொழி. பேசுவது போல் எழுதுவதில்லை; எழுதுவது போல் பேசுவதில்லை. எப்படிக் கொச்சையாகப் பேசினாலும் எழுதும்போது வடிவப் படுத்தியே எழுதுவோம்.

'நீ வர்றச்சே கொண்டுவாரியா? நா வந்து எடுத்துக்குனு வரட்டுமா? ரெண்டுல ஒண்ணு சொல்லு' என்று பேசும் நாம், கடிதமாக எழுத நேர்ந்தால், 'நீ வருகிற போது கொண்டு வருகிறாயா? அல்லது நான் வந்து எடுத்துக்கொண்டு வரட்டுமா? இரண்டிலொன்று சொல்', என்று தான் எழுதுவோம். ஆனால் இன்று சிலர் பேசும் கொச்சையையே எழுத்திலும் எழுதி, இதழ்களிலும் வெளியிட்டுப் பரப்பி வருகின்றனர். தமிழுக்கு 'உயிர்க்கொல்லி' நோயாக இது பரவி வருகிறது.

பேச்சுத் தமிழ் தமிழின் இருகண்களில் ஒன்று என மதிக்கலாம். பேச்சில் உள்ள வட்டார வழக்குகளில் இன்னும் ஏட்டில் ஏறாத அருந்தமிழ்ச் சொற்கள் ஆயிரக்கணக்கில் உள. 'அமர்க்களமா இருக்கு; கொட்டம் அடித்துக் கும்மாளம் போடுகிறார்கள்; இசைகேடு பண்ணலாமா; நைப்பாசை வைக்கின்றான்; நோட்டம் பார்க்கிறான்.' இவ்வாறு இன்றும் பேச்சிலுள்ள பல ஆயிரம் சொற்கள் அகராதியில் முழுவதுமாக இடம்பெற்றில.[1]

1. அமர்க்களம்–போர்க்களம். போர்க்களம் போல் வீட்டில் ஆர்ப்பாட்டமாயிருப்பது. ஆர்ப்பாட்டம் என்பதும் போரில் ஆரவாரித்து ஆடுவதேயாகும். கொட்டம், கும்மாளம் - கொட்டுக்கொட்டி, கும்மியடித்து ஆடுவது. அதுபோல் வீட்டில் ஒரே ஆட்டமாயிருப்பது. இசைகேடு-பண்ணை அல்லது இராகத்தைக் கெடுப்பது போல், ஒரு காரியத்தைக் கெடுப்பது. நைப்பு ஆசை - நச்சரிக்கும் சின்னச் சின்ன ஆசை. நோட்டம் பார்த்தல் - வைரம் தரம் பார்த்தல். அதுபோல் பகையாளியை உளவறிதல்.

ஆனால் கொச்சை வடிவாகப் பிழைபடப் பேசுவதை அவ்வாறே, எழுத்திலும் எழுதக்கூடாது. 'வந்திச்சு, வந்துச்சு, வந்திரிச்சு, வந்திட்டுது, வந்தூட்டுது' என்று வட்டார ஒலித்திரிபுகள் பலவாயினும் வந்தது, வந்துவிட்டது என்ற மூலச்சொல்லை மறவாமல் எழுத்தில் எழுதும் பொழுதுதான் இவை விளக்கும் சொற்களாயிருக்கும். அம் மூலச்சொல்லை எழுத்திலும் எழுதாமல், மறந்துவிட்டால் தமிழ் பொருள் விளங்கா மொழியாகிப் பல குறுங் குழுக்களின் மொழிகளாகப் பல்கிவிடும்.

பேச்சு நடை பொதுவாக எழுத்துநடையை நோக்கியே இருக்கவேண்டும். எழுத்து வடிவ மொழியே கட்டளை மொழி; பொதுமொழி ஆகும். சிலர் கட்டளை மொழியே இல்லாமலாக்கப் பார்க்கிறார்கள். அவர்களில் சிலர் உள்ளூரத்தமிழைச் சிதைக்க நினைப்பவர்கள். இதில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

தமிழ் மூவாயிரம் ஆண்டுகளாய் - ஒரே மாதிரி கன்னித்தமிழாய் இருப்பதற்கு இவ்விரண்டு வழக்குகளும் தனித்தனியே பேணப்பட்டு வருவதே அடிப்படையாகும். காலத்தால் முற்பட்ட நூல், தமிழ் முதல் நூல் தொல்காப்பியம். அந்நூலில் 'வழக்கும் செய்யுளும்' ஆயிரு முதனை - என்று இவ் இருவகை வழக்குகளுக்கும் சேர்த்தே இலக்கணம் கூறப்படுகிறது. கால்டுவெல் அறிஞர், தமிழ்மொழி தோன்றிய காலந்தொட்டே இரு வகை வழக்காக இருப்பதை விளக்கியுள்ளார். வீரமாமுனிவர் கொடுந்தமிழ் இலக்கணம், செந்தமிழ் இலக்கணம் என இரண்டற்கும் தனித்தனி இலக்கணம் எழுதியுள்ளார்.

பேசுவது பேச்சாகவே இருக்க வேண்டும். அதை எழுதும்பொழுது வடிவப்படுத்தியே எழுத வேண்டும்! ஒலித்திரிபுகள், வட்டார ஓசை ஒலி மாற்றங்கள், பேச்சுப் பிழைபாடுகள் - இவை வட்டார வழக்குகள் அல்ல. இவை வட்டார மொழி ஆகா. இவை வட்டாரத் திரிபுகள், ஒலித்திரிபுகள்!

காலணியை 'நடையன்' என்பார் சிலர்; சளி பிடித்திருப்பதைத் 'தடுமன்' என்பார். விலைமகளிர் வாழ்வைத் 'தொண்டு' செய்வதாகக் கூறுவது ஒரு வட்டார வழக்கு. 'உட்கார்' என்னாது 'குந்து' என்பது ஒரு வட்டார வழக்கு. ஓரேசொல் வட்டராந்தோறும் வெவ்வேறு பொருளில் வழங்கும்; பல புதுச்சொற்களும் காணப்படும்.

இன்று மாப்பிள்ளை என்பதை 'மாப்ளே' என்றும் பிறப்பு என்பதைப் 'பொறப்பு' என்றும் இதுபோல் திரைப்படத் தலைப்பாக்குவன தவறானவையாகும். பாரதியார், "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி, வாழிய வாழியவே", என வாழ்த்தியதை நினைவிற்கொண்டு, தமிழைப் போற்றிக் காப்பது தமிழர்க்கு நன்மை பயக்கும்.

மொழி திட்பமும், நுட்பமும் பெறப்பெறவே, அம்மொழி பேசுவோரும் அச்சிறப்பெல்லாம் பெறுவர். இங்கு 'இரட்டை மனம்' படைத்தோர் பலர், தமிழை 'எளிமைப் படுத்துவதாகவும்', 'மக்கள் தமிழை வளர்ப்ப தாகவும் கூறி, மொழியைப் பாழ்படுத்தி வருகின்றனர். பெரும்பான்மை யினர் அறியாமையாலேயே இத்தவற்றைச் செய்கின்றனர்.

ஆங்கிலத்தில் உரைநடை வகைகள் மிகப் பலதிறத்தன. பேரறிஞர் கிப்பன் எழுதிய 'உரோமப் பேரரசின் எழுச்சியும் வீழ்ச்சியும்' என்ற நூலிலும் பேராசிரியர் பாசுவெல் எழுதிய டாக்டர் ஜான்சனின் வாழ்க்கை வரலாற்று நூலிலும் காணும் உரைநடைகள் மிகச் செறிவானவை; கடின மானவை. அவற்றை அங்கு யாரும் இகழ்வதில்லை; 'பண்டித நடை' என்பதில்லை. மாறாகப் போற்றிப் புகழ்வர். நமது நாட்டில் மறைமலை அடிகளாரும் பரிதிமாற் கலைஞர் என அழைக்கப்பட்ட சூரிய நாராயண சாஸ்திரியாரும் எழுதியுள்ள உரைநடைகளைப் பழிப்பவர் கள், முற்சுட்டிய ஆங்கில உரைநடைகளைப் படித்துப் பார்க்க வேண்டும்.

தமிழில் திரு.வி.க., ரா.பி. சேதுப்பிள்ளை, கல்கி போல்வார் தனித்தன்மை வாய்ந்த உரைநடை எழுதியவர்

கள். கணக்காயர் ச.சோ. பாரதியார், க. வெள்ளை வாரணர், பெருஞ்சித்திரனார், வ.சுப. மாணிக்கனார் எழுதியவை திட்டமிட்டெழுதிய செறிவு மிக்கவை. சிறந்த உரைநடை எழுதும் திறன்பெற, முந்தையோர் எழுதிய சிறந்த தனித்தன்மை வாய்ந்த உரைநடைகளைப் படிக்கவேண்டும்; மனப்பாடம் செய்ய வேண்டுமென்பர்.

எழுதுந் திறனால் உலகை வெல்லலாம். நினைத்ததை அடையலாம். வாளின் வலிமையைவிடப் பேனாவின் கூர்மை ஆற்றமிக்கதென்பர்.

அதுபோலவே பேச்சுவன்மையும் ஒருவரது வெற்றிக்கு அடிப்படையாகும். அறிஞர் அண்ணா பேசத் தொடங்கினால் கருத்துமழை பொழிந்தது போல இருக்கும். அவர் சிறந்த படிப்பாளி. அதனால் எப்பொருளைப் பற்றியும் வரிசைப்படுத்தி, ஒன்றன்பின் ஒன்றாக 'நிரல்' எனப்படும் அடுக்கிக்கூறும் நடையில் பேசுவார். அதனால் தமிழகத்தில் சமூகச் சீர்த்திருத்தம், தமிழ் மொழிப்பற்று, மூடநம்பிக்கை ஒழிப்பு இவற்றைப் பரப்பினார். யாரும் கனவிலும் கருதாத அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஆட்சிமாற்றத்தைக் கொண்டு வந்தார்.

**விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்(து)இனிது**
**சொல்லுதல் வல்லார்ப் பெறின். (சொல்வன்மை 648)**

என்ற குறளுக்கு, அவர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினார். அவர் நிரந்து – வரிசைப்படுத்திப் பேசினார்; இனிதாக எடுத்துரைத்தார். பொதுமக்கள் அவரை 'அடுக்குச்சொல் அண்ணாத்துரை' என அழைத்தமைக்கு இதுவே காரணம். அவரது ஆணையை இத் தமிழுலகம் விரைந்து கேட்டு, அவர் சொல்வழி நடந்தது என்றே கூறவேண்டும். அவருக்கு உவமை சொல்வதானால், சுதந்திரச் சொற்பொழிவால் உலகப் புகழ்பெற்ற ஆபிரகாம் லிங்கனையும் பாராளுமன்றப் பொழிவுகளால் பாரெலாம் அறியப்பெற்ற ஆங்கிலநாட்டு பர்க்கு என்பாரையும் தான் சொல்லவேண்டும். விளைவை ஏற்படுத்தியதில், அறிஞர் அண்ணா யாவரினும் மேம்பட்டு நிற்கின்றார்.

சொல்வன்மையை வளர்த்துக்கொள்ள இளையவர்கள் நன்கு பயிற்சிபெற வேண்டும். உரையாடலில் கூட சாதுரியம், உடனுக்குடன் தக்க விடை கூறும் திறன், கருத்தைப் பிறர் ஏற்க வைக்கும் இனிமை முதலிய திறன்கள் அமைய வேண்டும். வேலை தேடும்பொழுது, நேர்காணலில் இதன் பயன்பாடு மிகுதி. இதழாசிரியர்கள் பேட்டி காணும்பொழுது, சிலர் காட்டும் திறமை நம்மை வியக்கவைக்கும். பகையாளிகளுடனும் பஞ்சாயத்திலும் பேசும்போது, சொல்லாடல் திறன் பயன்படும் விதம் தான் வெற்றி தோல்வியை முடிவுசெய்கிறது.

## நூற்படிப்பு

பலரோடு பழகுதலும் ஒரு பேரவையில் நின்று பலருக்கும் போய்ச் சேருமாறு பேசுதலும் எளிமையானவை என்று கருதி கண்டபடி பேசுகின்றனர்; தங்கள் சிறுமையைப் பறையறைவார் போல மேடை ஏறுகின்றனர். ஓர் ஆசிரியன் பல மாணவர் முன் நின்று, அவர்களைத் தன்வயப் படுத்துமாறு பேசுதற்கும், ஒரு கட்சித்தலைவன் - அல்லது ஒரு கூட்டத்துத் தலைவன் தனக்குக் கீழுள்ளவர்களைத் தன்வயப்படுத்துமாறு பேசுதற்கும், கற்றோர் அவைக்கண் ஒருவர் அவர்கள் மகிழுமாறு பேசுதற்கும் சிறந்த கல்வியறிவு - நூலறிவு - படிப்பறிவு வேண்டுமென்று கூறுகின்றார் திருவள்ளுவர்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (கல்லாமை 401)

கோட்டி கொளல் - அவையைத் தன்வயப்படுத்துதல். பல்வேறு நூல்களைக் கற்று, நிரம்பிய அறிவு பெறுதலையே ‘நிரம்பிய நூல்’ என்றார். வட்டாடுபவர் முதலில் ‘வட்டரங்கு’ எனப்படுவதைக் கோடுகிழித்து வைத்துக்கொள்ள வேண்டும்; பிறகு அதில் காய்களை நகர்த்தி ஆடலாம். அரங்கே இல்லையென்றால் ஆடுவதெப்படி? நூல்களைக் கற்கவில்லையென்றால், பெரியோர்ரவைக்கண் பேசுவதெப்படி?

அறிஞர் அண்ணா எப்போதும் படித்துக்கொண்டே இருப்பார்; விரைந்த படிப்பாளி. நோய்வாய்ப்பட்ட போதும் நூலொன்றைப் படித்துக் கொண்டிருந்தாராம். அறுவை மருத்துவத்திற்குச் சற்று நேரம் இருக்கும்போதும், படித்தபடி இருந்தாராம். அவரது நாவன்மைக்கும், மேடையேறிப் பலரும் வியக்குமாறு பேசியதற்கும் அந்நூலறிவே அடிப்படையாயின.

சட்டமன்றம், பாராளுமன்றம் போன்ற அவைகளிலும் பட்டிமன்றங்களிலும் எதிரி கேட்கும் கேள்விகட்கு உடனுக்குடன் விடை சொல்லவேண்டும். அங்ஙனம் விடைகூற முயலுங்கால், அச்சமேயின்றி ஆணித்தரமாகப் பேசவேண்டுமேல், அதற்கு வேண்டிய அளவு முறைப்படி கற்றிருக்க வேண்டுமாம்.

**ஆற்றின் அளவறிந்து கற்க; அவைஅஞ்சா**
**மாற்றம் கொடுத்தற் பொருட்டு.** (அவையஞ்சாமை 725)

சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்? ஒன்றைப் பற்றி நன்கு திட்டவட்டமாக அறிந்து வைத்திருந்தால், அவைக்கு அஞ்ச வேண்டியிராது. உடனுக்குடன் விடை சொல்லும்பொழுது, எதிரிதான் திணறிப் போவான்! முறைப்படி, கற்க வேண்டிய நூல்களை, தேவையானவற்றை எந்த அளவு தெரிந்துகொண்டால் நல்லதோ, அந்த அளவு நூல்களைக் கற்றுத் தெளிவு பெறுதல் வேண்டும். அவைக்கு அஞ்சாமல் மறுமொழி கொடுப்பதற்காக இவ்வாறு கற்க வேண்டுமென்பதால், அத்தகைய தகுதியில்லாதார் அவையை எதிர்நோக்க அஞ்சுவர் என்பது பெறப்படும்.

நம்மிலும் நம் துறையில் வல்லவர்கள் யாரெனக் கண்டு, அவர்களிடம் நாம் கற்றவற்றிற்கு மேற்பட்ட செய்திகளைக் கற்றுக்கொண்டாலும், அவைக்கு அஞ்ச வேண்டிய அவசியம் நேராது.

கற்றார்முன் கற்ற செலச்சொல்லி தாம்கற்ற
மிக்காருள் மிக்க கொளல். (அவையஞ்சாமை 724)

அவைக்கு அஞ்சாமை என்றால் மூர்க்கத்தனமாகக் கண்டபடி இரைதலாகுமா? மற்றவர்களை முட்டாள்களாக்கினால், நாம் அறிவாளி ஆகிவிட முடியுமா? நம்மைப் போல் கற்றவர் நடுவண் நாம் கற்றவற்றை அவர் மனம் ஏற்குமாறு சொல்ல வேண்டும். நாம் கற்றுள்ள துறையில் நம்மிலும் மேற்படக் கற்றாரிடம், நாம் பணிந்து அக்கூடுதல் பொருள்களை அவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்து கொள்ளவும் வேண்டும். அவை அஞ்சாமை என்பது, அஞ்சாமல் அனைவரிடமும் பேசுவது மட்டுமன்று; நம்மிலும் மிகுதியாகக் கற்றவர்களிடம் பணிவாகக் கேட்டுத் தெரிந்து கொள்ளுதலுமாம். 'மிக்காருள் மிக்க கொளல்'– 'நம்மை விடப் படித்தவர்களிடம் கூடுதலாக அவர்கள் படித்துள்ள வற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்' என்பதால், இதனாலும் ஒருவர் அவையஞ்சாதிருப்பதற்கு ஒரு வழி கூறியதாயிற்று.

'சொல்வன்மை'க்குச் சொற்செல்வமும் ஓர் அடிப்படையாகும். ஒருவர் திறமையாகப் பேசுவதே வலிமையாகும் என்றால் நாவன்மை, நாநலம் என்ற சொற்களே போதும். ஆனால் 'சொல்வன்மை' என எடுத்தாளக் காரணம், அந் நாவன்மை எடுத்தாளும் சொற்களிலிருக்கிறது என்பதாலேயாம். ஒருவர் தட்டுத் தடுமாறாமல் பேச, பேசும் மொழியிலும் அவர் மிகுதிறன் பெற்றிருக்கவேண்டும். அம் மொழியிலுள்ள மிகுதியான சொற்களை அறிந்தவராய், அவற்றை ஆளும் திறனுடையவராய்த் திகழ வேண்டும். இன்று பலர் மொழிப் புலமை இல்லாமலே, மொழி சார்ந்த படைப்புக் கலைகளில் ஈடுபடுகின்றனர். சிறுகதை எழுதுகின்றனர்; புதுக்கவிதை புனைகின்றனர்; கட்டுரை வரைகின்றனர்; புதினம் படைக்கின்றனர்; காப்பியம் படைக்கவும் முந்துகின்றனர். மொழிப் புலமையையும் கற்றும் கேட்டும் எழுதியும் பயிலவேண்டும். தத்தமக்குரிய துறைகளில் முன்னோடி களின் நூல்களைப் படித்துப் படித்தும், அதே துறையில்

எழுதி எழுதியும் பயின்றே இன்று பலர் முன்னுக்கு வருகின்றனர். அதுவும் நல்லதே. ஆனாலும் மொழி சார்ந்த இலக்கியப் படைப்புக் கலைக்கு வந்தவர்கள் "மொழியாவது கத்தரிக்காயாவது; நான் எழுதுவதுதான் மொழி; படித்தால் படி, இல்லாவிட்டால் போ" என்றெல்லாம் 'எகத்தாளம்' பேசுவது தவறு. அது தன் தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுக் கொள்வதாகும். நிலைத்த, பயனுள்ள இலக்கியம் படைக்க விழைபவன் அவ்வாறு பேசமாட்டான். தோன்றி மறையும் புற்றீசல் இலக்கியம் படைப்பவன் தான் இங்ஙனம் தூக்கி எறிந்து பேசுவான்.

சொற்பொழிவுக் கலைக்கும் மொழிப்புலமை தேவை; சொற்களைப் பற்றிய அறிவும் தேர்ச்சியும் முக்கியம். மேலை நாட்டார் ஒருவரது மொழிப் புலமையை அளந்தறிய அவர் இத்தனை சொற்களை அறிந்தவர் என ஒரு கணக்கிட்டுக் கூறுவர். பள்ளிப் படிப்பில் வகுப்புத்தோறும் இத்தனை புதுச்சொற்கள் அறிமுகமாகின்றன என, நூலின் இறுதியில் பட்டியலிட்டுக் காட்டுவர். தமிழிலும் இத்தகைய சொற்களஞ்சியப் புலமை தேவை என அன்றே வள்ளுவப் பெருமான் கூறியிருப்பது வியப்பைத் தருகிறது. நாம் தான் அவர் சொன்னவற்றை அறியாமல் முட்டாள்களாக இருந்துவிட்டோமோ - பின்பற்றாத பேதைகளாக வளர்ந்துவிட்டோமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். (அவையஞ்சாமை 721)

சொற்களின் தொகுதியை நன்கு அறிந்தவர்; சொற்களில் சிறப்புடையனவற்றை, நல்லனவற்றை, பண்பானவற்றையே ஆளுதலால் 'தூயவர்' என்று கூறுகிறார். இதே தொடரை இரண்டு இடங்களில் ஆளுதலால் வள்ளுவர் உள்ளம் அறியத்தகும்.

அவையறிந்து ஆராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகைஅறிந்த தூய்மை யவர். (அவையறிதல் 711)

சொற்களின் தொகுதியை, இயல்பை, திறனை அறிந்து ஆளவேண்டும். இன்று சொற்களை ஆளும்போது, ஆங்கிலத்தில் மிகக் கருத்தாக இருக்கும் பழக்கம் உளது. அம் மரபு பின்பற்றப் படாதபோது இழிக்கப்படுகிறது; பழிக்கப்படுகிறது. தமிழில் இவ்வாறு 'மரபு' வழி, கட்டுப்பாடாக எழுதும் ஒரு திட்டத்தை வற்புறுத்தினால் 'கடுந்தமிழ்', 'பண்டிதர்தமிழ்' என்று, செம்மையாக எழுதுபவர்களே இழிக்கப்படுகின்றனர்.

இத்தகைய சொற்கூட்டத் திறனறிந்தவர்கள், அதன் வகைமையை அறிந்து எடுத்தாள்வர். அதனால் வல்லவர் கூடிய பேரவையில், மறதியாலோ, அயர்ச்சியாலோ வாய்சோர்ந்து, பொருத்தமற்றவற்றைப் பேசிவிடமாட்டார். அதற்குக் காரணம் அவரிடமுள்ள சொற்களஞ்சியப் புலமையும் வகையறிந்து ஆளும் திறனுமேயாம்.

எனவே, "இச் சொற்செல்வம் உடையோரே! நீங்கள் உங்கள் முன்னுள்ள அவையினை ஆராய்ந்து, அவர்களுக்கு ஏற்ற வகையில் பேசுங்கள்" என்று அறிவுரை கூறுகிறார். வல்ல அவை, நல்ல அவை; அறிஞர் அவை, கலைஞர் அவை; பொதுமக்கள் அவை, புலவர் அவை; அறியார் அவை மூடர் அவை என அவைகள் பெரும்பான்மையினர் பற்றிப் பல வகைப்படும். அத்தகையன மட்டுமன்றி உணர்ச்சி, பழக்கம், சூழலால் வேறுபடும் அவைகளும் உள. இவ் வேறுபாடுகளை அறிந்து பேசும் திறன் சிறந்த பேச்சாளர்களுக்கே அமையும்.

### அவையறிந்து சொல்லுதல்

சொற்பொழிவைப் 'பருகுவது அன்ன ஆர்வத்தோடு' கேட்பவர்கள் இருக்கும் அவைக்கு மகிழ்ச்சியோடு பேசலாம். நம் அன்பர்கள் சிலர் ஒலிபெருக்கியைப் பற்றினால் விடமாட்டார்கள். கூட்டம் கலைந்தாலும் பேச்சை நீட்டிக்கொண்டே இருப்பார்கள். மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது, அவர்கள் ஆர்வத்துடன் கேட்டால் பாடம்

சொல்லும் ஆசிரியர்க்கு இன்னும் நன்கு சொல்லத் தோன்றும். ஆசிரியர் சொல்லும் விதமும் மாணவரைக் கேட்கத் தூண்டுவதாய், பயன்படுவதாய், சுவையுடன் கூடிய நல்லதாய் இருக்கவேண்டும்.

உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்
பாத்தியுள் நீர்சொரிந் தற்று. (அவையறிதல் 718)

வளர்கிற பயிர்கள், செடி கொடிகள் நிற்கிற பாத்தியில் நீரைச் சொரிந்தால், அது பயிரை மேலும் வளர்க்கும். இயல்பாகவே வளர்வதனை மேலும் வளர்க்கும். அது போல, உணர்ந்து பயனடைய வல்லார் அவைக்கண்-கொஞ்சமேனும் சுவைத்து ஏற்கும் இயல்புடையார் முன்பாகச் சொற்பொழிவது பயன்படும்.

இதனை மாணவர்களும் ஆசிரியர்களும் கூடிய அவைக்கு ஏற்ற குறள் என்று கூறலாம். பராமுகமாக இருக்கும் மாணவர்கள் - அலட்சியப் படுத்துபவர்கள் - வகுப்பைப் புறக்கணிப்பவர்கள் - வேண்டா வெறுப்பாகக் கட்டாயம் கருதி வகுப்பில் கட்டிப்போட்டதுபோல் இருந்து நெளிபவர்களுக்குப் பாடஞ்சொல்லிப் பயன் என்ன? மாணவச் செல்வங்கள் எவ்வாறு பாடங்கேட்க வேண்டுமென்பதை, நன்னூல் ஆசான் பவணந்தி முனிவர் கூறுவதைக் கவனியுங்கள்:

கோடல் மரபே கூறுங் காலைப்
பொழுதொடு சென்று, வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன் குறிப்பிற்சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லி
பருகுவன் அன்ன ஆர்வத்த னாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவிவா யாக, நெஞ்சு கள னாகக்
கேட்டவை கேட்டவை விடாதுஉளத்து அமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர்

பாடம் கேட்டல் எவ்வாறு? இது 'குருகுலம்' எனப்படும் பழங்காலப் படிப்புமுறை. இன்றும் இதில் பெரும்பான்மையன பொருந்தும். கோடல் - பாடம் கேட்டல். காலத்தோடு வகுப்புக்கு வரவேண்டுமாம்; ஆசிரியனை வணங்கி வழிபடக் கூச்சப்படக்கூடாது. ஆசான் குணத்திற்கு ஏற்பப் பழகி, அவன் குறிப்புப்படி நடந்துகொண்டு, இரு என இருந்தும் கேட்பவற்றுக்குப் பதில்சொல்லியும் பாடங்கேட்க வேண்டுமாம். தண்ணீர் வேட்கை மிக்கவன் அதை ஆர்வத்தோடு பருகுவது போலவும், பசித்தவன் உணவை வாரி உண்பது போலவும் ஆர்வத்தோடு பாடத்தைக் கவனிக்க வேண்டுமாம். இதுதான் 'உணர்வதுடையார் முன் சொல்லல்' எனப்படுகிறது, குறளில்! சித்திரப் பாவை போல் அமைதிகாத்து செவியே வாயாக ஆசிரியன் கூறுவனவற்றைப் பருகவேண்டுமாம். செவியே வாயாகப் பருகவேண்டும் என்பதால், வாய் பேசக்கூடாது, வாய்க்கு வேலை இல்லை என்பதும் பெறப்படுகிறது. கேட்ட பாடங்களை மனத்தில் பதியவைத்துக்கொண்டு, பாடம் முடிந்து ஆசிரியன் 'போகலாம்' எனச் சொன்ன பிறகுதான் புறப்படவேண்டுமாம். இடையில் போதல், இடையில் வருதல் எல்லாம் தவறு.

சொற்பொழியும் அவைக்கும் இவை ஒவ்வொன்றும் பொருந்தும். மாணவர் வளர்ச்சிக்கு உதவுதல் போல், அவையோர் அறிவு வளர்க்கும் பொழிவு அமையுமாதலின், 'வளர்வதன் பாத்தி' என்பது நல்லவைக்கும் முற்றும் பொருந்துவதாகும்.

தம்முடன் ஒத்த உணர்வுடையவர் அல்லாத அவையுடன் கூடியிருந்து, அங்கு பேசுதல் சாய்க்கடையில் அமிழ்தத்தைக் கொட்டியது போலாகும்.

அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்
அல்லார்முன் கோட்டி கொளல். (அவையறிதல் 720)

ஒன்றுக்கும் உதவாத சாய்க்கடையில் அமிழ்தத்தைக் கொட்டினால் (உக்க-கொட்டிய) அது அச்சாய்க்கடைக்கும் பயன்படாது; அமிழ்தும் அழியும். அதுபோல், தம்போலும் நல்லறிவுடையோர் அவையை நாடாது, புல்லறிவாளர் அவையில் கூடியிருந்து பேசுதல் தன் பெருமையையும் அழித்து, அவைக்கும் பயன்படாது போகும்.

### உரையாடும் திறம்

நாம் சொல்வதை அல்லது அவையில் பேசுவதை, எத்துணை அரிய செய்தியாயினும், அதனை மிக எளிமைப்படுத்திக் கேட்பவர்க்குச் சென்று சேருமாறு சொல்ல வேண்டும். அவர் சொல்வன எத்துணை அரிய நுண்பொருளாயினும் அதன் உட்கருத்தை வாங்கிக் கொள்வதே அறிவுடைமையாகும்.

**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்பது அறிவு. (அறிவுடைமை 424)**

இவை சொல்லும் பொருள் பற்றியன. அரிய பொருளையும் எளிதில் விளங்கும்படி சொல்ல வேண்டும்; பிறர் எளிய ஒன்றை அரிய பொருளாக்கிச் சொன்னாலும் அதன் நுண்பொருளைக் கண்டுகொள்ள வேண்டும். அத்தகைய ஆற்றலுடையதே ‘அறிவு’ என்று சிறப்பித்துக் கூறற்குரியதாகும்.

### சொல்தேர்வு

பேசும் நிலை யாதாயினும் ‘வாயிலிருக்கிறது வார்த்தை’ என்று கொட்டிவிடக் கூடாது. சொற்களை அளந்து பேச வேண்டும். நின்று, நிதானித்துத் தேர்ந்து பேச வேண்டும். இதனால் பேச்சுக் குறையும். பேச்சுக் குறையக் குறைய நல்லது. பேச்சுக் குறைவானால் செயல் கூடும். சொல்லை ஆராய்ந்து பேசவேண்டும் என்பதால் அந்த ஆராய்கிற முயற்சியில், வெல்லுஞ்சொல் தேடும் முயற்சியில் பேசுத் திறமை வளரும்.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து. (சொல்வன்மை 645)

இதைவிட வேறு சொல்லைப் பயன்படுத்தி இருக்கலாமே? இதை ஏன் பயன்படுத்தினோம்? என்றெல்லாம் திரும்ப எண்ணாதபடி, 'வெல்லுஞ்சொல்' எது எனத் தேடிச் சொல்லுக என்கிறது வள்ளுவம். சொல்வன்மையின் உச்சம் இது.

திருவள்ளுவர் தம் திருக்குறளில் வெல்லுஞ்சொல் பயன்படுத்தி உள்ளார். ஒரு குறளில் ஒரு சொல்லை மாற்றினாலும் அதன் பொருள் சிதையும் எண்ணும்படி குறள்நூல் யாக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம் போலும் நம் இலக்கண இலக்கியங்கட்கெல்லாம் இது பொருந்தும்.

அச்சுக்கலை வளர்ந்ததால் பக்கம் பக்கமாக, புத்தகம் புத்தகமாக எழுதிக் குவிக்கும் நாம் இதை எண்ணிப் பார்ப்பது நல்லது.

◪

# 7

# பகைமையை வெல்லுதல்

பகையை வெல்ல வேண்டும்; அதனிலும் மேலாகப் பகைமையை வெல்ல வேண்டும். 'பகைமையை' என்பது 'பகைமை உணர்வை'. சிலர் எப்போதும், எதற்கும் பகைமை பாராட்டிக் கொண்டிருப்பர். அதுவும் தவறன்றோ? நாம் பகைக்காவிடத்தும்-பகைமை பாராட்டாது பண்புடன் நடந்து கொண்டவிடத்தும், நம் மீது பகைப்பவரை என் செய்வது? அவ்ரை வெல்லாதுவிடின், அஞ்சும் பேடிபோல் ஆகிவிடும். எனவே அத்தகைய பகையை வெல்லும் முறைகளை வள்ளுவர் விரிவாகக் கூறியுள்ளார். அவற்றுள் ஊக்கந்தரும் உணர்ச்சியுரைகள் சிலவற்றைக் காண்பது, இளையோர் நல்வாழ்வுக்குப் பெரிதும் உதவும்.

கோபத்தை வெளிக்காட்டாது குறை களைய வேண்டும். வெளிப்பட ஆரவாரிப்பதைவிடக் காலம் பார்த்துப் பகையை வெல்ல வேண்டும். இது அரசுகளுக்கு மட்டுமன்றித் தனிப்பட்டவர்களுக்கும் பொருந்தும். சினத்தால் உடனே உடம்பெல்லாம் வியர்க்கும்படி நடந்து கொள்வதைவிடப் பகையை எப்போது, எவ்வாறு வெல்லலாம் என மனத்துள் வியர்ப்பதே - உள்ளே திட்டமிடுவதே அறிவுடையவர் செயலாகும். சிலர் புறத்தே 'டாம்டூம்' என ஆடிக் காரியத்தைக் கை விடுவர். அது பகைவரை எச்சரிக்கையாக இருக்க வழிகாட்டுவதாகும்.

பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர். (காலமறிதல் 487)

பகைவர் தம் பகைமையை வெளிப்படுத்தியவுடனே, தாமும் வெகுண்டு அதனால் உடல் புறத்தே வியர்த்துத் தம்மை வெளிப்படுத்த மாட்டார், அறிவுமிக்கவர்கள். வெல்லும் காலத்தை எதிர்பார்த்து, உள்ளத்துள்ளே வெகுண்டு காத்திருப்பர். காலம் வாய்ப்பாய் அமைந்ததும், பகைவர் முயன்று வெற்றிகொள்வர்.

பகைவர் செருக்கை அடக்கியாகவேண்டும். அதனை அடக்க மாட்டாதார் மூச்சுவிடுவதாலேயே, உயிருடனிருப்பதாகக் கொள்ளமுடியாது. எப்போது பகைவர் தருக்கையும் செருக்கையும் முறியடிக்க முடியவில்லையோ, அப்போது அவர் உறுதியாக இறந்தாராகவே கருதப்படுவர். பகைவரை வென்றே ஆகவேண்டுமென்னும் இது மன்னர்களுக்கு இன்றியமை யாததாகும். தனிப்பட்ட மக்கள் வாழ்விலும் இங்ஙனம் பகைவரது தலைமையை வீழ்த்தி, அவர் தருக்கை அடக்கவேண்டிய சூழல்கள் பலவுள்.

**உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்**
**செம்மல் சிதைக்கலா தார். (பகைத்திறம் தெரிதல் 850)**

ஒருவர் தம்மைச் 'செயிர்ப்பவர் செம்மலைச் சிதைக்க வேண்டும்' என்பது ஆணித்தரமாகக் கூறப்பட்டுள்ளது. மன்ற-உறுதியாக. செம்மல்-தலைமை. உயிர்ப்ப உளரல்லர்-உயிர்ப்பதால் (மூச்சு விடுவதால்) உயிருடனிப் பவரல்லர்; நடைப் பிணமாகவே கருதப் படுவர். பகையை வென்று வாழ்தல் வேண்டும் என்பதாம்.

## தான் வளரவளரப் பகை தேயும்

பகைவருடன் மோதுவதால், பகைவரைப் பழிப்பதால், அடிப்பதால், அழிப்பதால் வெற்றி கிடைக்குமெனப் பெரிதும், எண்ணுகின்றோம். அதனிலும் மேலாக, முதன்மையாக உள்ள ஒருவழி தன்னைப் பெரிதாக வளர்த்துக் கொள்வதிலும் தன்னைக் காத்துக் கொள்வதிலும் இருக்கிறது.

அரசர்கட்குச் சொல்லப்பட்டது இது. தன் படைபலம் பெருகினால், தனது நாட்டு எல்லைகளைக் காத்துக் கொண்டால், அதை அறிந்தே பகை கொண்டோர் வாலாட்ட அஞ்சுவர். ஒன்று அடங்கிப் போவர்; அல்லது நட்புக்கொள்ள ஓடிவருவர்.

**வகைஅறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்**
**பகைவர்கண் பட்ட செருக்கு. (பகைத்திறம் தெரிதல் 878)**

தன் வலிமையும் மாற்றான் வலிமையும் அறியவேண்டும். எந்த வகையில் செயலாற்றினால், அந்தப் பகையை வெல்லலாம் என்பதைக் கண்டு, அதன்படி செயற்படலே வகையறிதலாகும். தற்செய்தல் - தன்னைச் செய்தல். அதாவது தன் வலிமையைப் பெருக்கிக் கொள்ளுதல். இதில் ஒரு தருக்கமுறை - அளவை நூல் வழி உளது. எதிர் எதிரான இரண்டில் ஒன்று கூடின் மற்றது குறையும். ஒளியைக் கூட்டக் கூட்ட இருள் குறையுந்தானே? துப்புரவு, சுத்தம் பெருகப்பெருக நோய் நொடி குறையுமன்றோ? ஒருவருக்கொருவர் பகை ஏற்படும்போது, ஒருவர் வளரவளர, பிறரினும் மேம்பட மேம்பட மற்றவர் செருக்கும் பகையும் தானே குறையும்; மறையும்! இது உலகியல். 'தற்காப்ப' - தன்னை யாரும் எதுவும் செய்ய இயலாதவாறு 'தற்காப்பை'யும் பெருக்கிக் கொள்ளுதல். இவற்றால் பகைவரிடம் ஏற்பட்ட தருக்குத் தானே நீங்குமெனவே, எதிர்த்து நிற்றல் முளையிலேயே கிள்ளி எறியப்படும் என்பது பெறப்படுகிறது.

## தமது மெலிவைப் பகைவர்க்கு வெளிப்படுத்தக் கூடாது

தமது வலிமையைப் பகைவர் அறியச் செய்யலாமே தவிரத் தமது மெலிவையோ, துன்பத்தையோ பகைவர் அறியாத நிலையில், நாமாக அவரறியுமாறு வெளிப்படுத்தல் கூடாது.

நோவற்க நொந்தது அறியார்க்கு; மேவற்க

மென்மை பகைவர் அகத்து. (பகைத்திறம் தெரிதல் 877)

தாம் துன்புற்றதை அறியாத பகைவர்க்கு, தாமாக அதனை வெளிப்படுத்த வேண்டாம். நோவற்க - துன்பத்தைச் சொல்லவேண்டாம். தமது மெலிவையும் பகைவரிடம் வெளிப்படுத்த வேண்டாம். அரசர்க்கேயன்றித் தனிப்பட்ட வாழ்விலும் இவ்வுத்திகள் கடைப்பிடிக்கற் பாலன.

## சார்புத் துணை வேண்டும்

உலகியல் அறிந்தவர் திருவள்ளுவர். அரசர்களுக்கும் தம்மைத் தாங்கும்படியான துணைவேண்டும்; தனிப்பட்ட வாழ்க்கையிலும் தன் முயற்சி அறுபது எழுபது விழுக்காடு அமையினும், தூக்கிவிட வல்ல பெரியோர் துணையு மிருந்தால் எளிதில் முன்னேறலாம். தன் முயற்சியை மிக வலியுறுத்திய திருவள்ளுவர், இத்தகைய துணையுமிருந்தால் தான் நிலைபெற முடியும்- நிலையினும் மேன்மேல் உயர முடியும் என்பதைக் கூறுவது கருதத்தக்கது.

முதல்இலார்க்கு ஊதியம் இல்லை மதலையாம்

சார்பிலார்க்கு இல்லை நிலை. (பெரியாரைத் துணைக்கோடல், 449)

வணிகத்தில் சொந்த முதல் போடாதார்க்கு அதனால் வரும் இலாபமில்லை. அது போலத் தாங்குவதாகிய சார்புத்துணை இல்லாதவர்க்கு வாழ்வில் நிலைபெறுதலும் இல்லை. நம்மிலும் வலியாரும் பெரியோரும் செல்வரும் செல்வாக்குள்ளோரும் என இவர்களில் யாரேனும் ஒருவர் இருவர் துணையிருந்தால், பற்றிக்கொண்ட நிலையை உறுதிப்படுத்திக் கொள்ளலாம். தகுதியை வளர்த்துக் கொண்ட ஒருவன் இத் துணையுமிருந்தால் எளிதில் வேலைவாய்ப்புப் பெறுகிறான்; பதவி உயர்வு பெறுகிறான்; பல வகையிலும் வெற்றி பெறுகிறான்.

மதலை - கட்டிடக் கலைச்சொல். மேலே உள்ள உத்தரத்தைத் தாங்கும் தூண். அது பாரத்தைத் தாங்குவதால், மேல் தளம் - கூரை நிலையாய் நிற்கிறது. அதுபோல் தடை வந்தவிடத்துத் தாங்கும் துணை இருந்தால், தடையேதுமின்றி வாழ்வு எளிதாகும். மன்னர்கள் அரசியலில், தக்க பெரியோர் துணை தேடிக் கொள்ள வேண்டும். அதே போலத் தனிப்பட்டவர்களும் தங்களைக் காக்கவல்ல துணையைத் தேடிக் கொள்ள வேண்டும். இங்ஙனம் திருவள்ளுவர் அரசர்க்குக் கூறியன பல, அரசர்க்குச் சிறப்பாகவும் மக்கள் அனைவருக்கும் பொதுவாகவும் பயன்படுமாறுள்ளன.

### பகையை முளையிலேயே கிள்ளி எறிக

பகையை அது தோன்றுங் காலத்திலேயே, அறவே அகற்றி விடவேண்டும். அதை முற்றவிட்டு, நாம் திண்டாடக் கூடாது.

இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து. (பகைத்திறம் தெரிதல் 879)

அழிக்கவேண்டிய பகையை, அப்பகைவர் வலியராவதன் முன்னே, முற்றிலுமாய் ஒழித்துவிடுதல் வேண்டும். இன்றேல் அப்பகையால் நாம் அழிக்கப்படுவோம்.

இதைப் 'பிறிது மொழில் அணி' நயம்படச் சொல்லாமல் சொல்கிறார் திருவள்ளுவர்

முள்மரமாய்த் துன்பம் தருமெனக் காணப்படுவதை அது சிறு கன்றாக இருக்கும்போதே வேரோடு தோண்டி எறியவேண்டும். இன்றேல், முள்ளுடன் வளர்ந்த நிலையில், அதை நீக்க நினைத்தால், அங்ஙனம் நீக்குபவர் கையை அது வருத்திவிடும். கொல்க - வேரொடும் தூரொடும் கல்லி எறிக

என்பதாம். பகை பதுங்கியிருந்து, மீண்டும் தலை தூக்காதவாறு அழித்தலைக் குறிக்கிறது.

இதுவும் அரசர்க்கு மட்டுமன்றித் தனிமனித வாழ்விலும் பகையை வெல்லும் திறமாகக் கைக்கொள்ளப் பட வேண்டியதாகும்.

## பகையை வெல்லப் புதிய வழிகள்

பகையை வெல்லப் புதிய நெறிமுறைகளையும் வள்ளுவப் பேராசான் கூறுகிறார். அவை பகையை அழிப்பது என்பதைவிடப் 'பகைமை உணர்வை' அழிப்பனவாகும். மனித நேயம் மிக்கவராதலின் இத்தகைய வழிமுறைகளையும் கூறுகின்றார்.

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (இன்னாசெய்யாமை 314)

'தமக்கு இன்னாதவற்றைச் செய்தவரைத் தண்டித்ததற்கு, அவர் வெட்கப்படுமாறு நல்ல உதவிகளைச் செய்து, அந்நிகழ்வுகளை மறந்துவிடுக. அவரை வெல்லும் வழி இதுவாகும்.' சில சூழல்களில், இவ்வாறு நடந்து மனித நேயத்தைக் காப்பாற்றினால் அது உலகிற்கு நல்லது. 'செய்க' என்னாமல் 'செய்து விடல்' என்றது, இது அஞ்சிச் செய்வதன்று - பெருமிதத்துடன் அவரினும் மேம்பட்டு நன்மையைச் செய்து, தீமையை மறப்பது என்பதற்காகும். இது தண்டிப்பதற்காகச் செய்து காட்டுவதாகலின், 'நல்நயம்' (நல்ல உதவி, நன்மை) ஒன்றைச் செய்து, அதனுடன் மறந்து விலகிவிடுதலால், அவர் தாமே வருந்தும் நிலைமை ஏற்படும். பகைத்து அழித்து வெல்வதினும் பண்பால் 'நற்புத்தி புகட்டி' வெல்வது இது!

சில சமயங்களில் பகையையும் நட்பாக மாற்றிக் கொள்ளக் கூடிய சூழல்கள் ஏற்படும். பகையை வெறுத்து, மோதி, அழித்துக் கொள்வதும் வெற்றிதான்! அவ்வாறன்றி

பகைவர்தம் பகையுணர்வை மாற்றிக் கொள்ளுமாறு நடந்து, அவரைத் தம் நட்பாக மாற்றிக் கொள்ளுதலும் அவரை வெல்வதேயாம். இது சிறப்பாக அரசர்களுக்குக் கூறப்படுகிறது.

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்(று) உலகு. (பகைத்திறம் தெரிதல் 874)

பண்புடையாளன் என்பதால், தன்னிடம் வலிமையிருந்தும் பகையையும் நட்பாக மாற்றிக்கொள்ளும் பெருமித முடைமையை இது குறிக்கிறது. 'அவனது பெருமையில் இவ்வுலகு அடங்கிற்று' என்பது, இவ்வுலகம் அவனது ஆட்சியில் நிலைபெறும் என்றும் அவனது பெருமையைப் போற்றும் என்றும் கொள்ள இடம் தருகிறது.

ஒரு கோடு வரைந்து, அதை அழிக்காமல் சிறிய கோடு ஆக்க முடியுமா? என்று கேட்பர். முடியும் என்று கூறிவிட்டு, அதன் மேலே ஒரு பெரியகோட்டை இழுத்து எழுதிக்காட்டுவர். இப்போது, முதற்கோடு அழிக்கப் படாமலே சிறிய கோடாகி விடுகிறது.

பகையை வெல்வதிலும் இவ்'அளவை' நெறி பயன்படும். ஒருவர் தம் தகுதியை வளர்த்துக் கொண்டால், பகைவரினும் மேம்பட்டு அவரைத் தோற்கடிக்கலாம்.

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல். (பொறையுடைமை 158)

சிலர் தம் செல்வம் செல்வாக்கு மிகுதியால், மிகையாக நடந்து கொள்வர்; மனச்செருக்கால் தீயவற்றைச் செய்வர். அவரைத் தம் தகுதியுடைமையால் - அவரினும் மேம்பட்ட தன்மையினால், பொறுமை காட்டி வெல்லுதல் கூடும். தகுதி மேம்பாட்டால் வெல்லுவது இது. இங்குக் காட்டப்படும் பொறுமை, தாம் பகைவரினும் மேன்மையும் பெருமிதமும் உடைமையால் வருவது.

தகுதியைப் பெருக்கிக் கொண்டு, மிகுதியை வெல்' என்ற சொல்நயம் கருதற்பாலது. மிகுதி-மிகை. செருக்கினால் செய்யும் சிறுமை, தீங்கு. தகுதி-தன் மேம்பாடு. அம்மிகை செய்தாரினும் மேம்பட்ட பண்புடைமை. இங்கும் நாம் நம் தகுதியை வளர்த்துக் கொள்ளுதலே, பகைவரை நம்மினும் கீழாக்கி வெல்லும் வழி என்ற குறிப்பு உளது.

மிகுதிக்கு மிகுதி செய்தலை விடத் தகுதிசெய்து மிகுதியை வெல்லலாம் என்பதை, நம்மில் ஒவ்வொருவரும் உணர்ந்துபார்த்து நடந்தால் வாழ்க்கையில் அது இரட்டிப்பு வெற்றியாய் மகிழ்ச்சி தரும்.

# 8

# ஆள்வினைத் திறன்

ஒரு காரியத்தை எடுத்துச் செய்வது ஆள்வினை எனப்படும். வினையை - செயலை ஆள்வது அது. இன்று பொது நிருவாகம், ஒரு தொழிலை நடத்துதல், மனிதர்களைக் கொண்டு ஆட்சி நடத்துதல், அரசு அதிகாரிகளாய் - ஆட்சித் தலைவர்களாய்ச் செயலாற்றுதல், ஒரு கல்லூரியை, நிறுவனத்தை நடத்துதல் என இது பலவகைப்படும்.

பத்து வேலையாட்களை வைத்து ஒரு தொழிலை - நிறுவனத்தை நடத்துவதுகூடக் கடினமாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்களையும் பல படிநிலை அலுவலர்களையும் வைத்து ஓர் ஆலையை நடத்தத் தனித்திறன் தேவைப்படுகிறது. ஒரு கல்லூரி முதல்வர் மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்டு செலுத்தப் பெரும்பாடுபட வேண்டியுள்ளது. ஒரு குடும்பத்தை நிருவகிப்பதில் கூட எத்தனை சிக்கல்கள், இடையூறுகள்?

மேலாண்மை செய்வதற்குத் தக்க ஆளுமை வேண்டும்; பொறுமை வேண்டும்; ஆளும் திறமை அடிப்படையாய் வேண்டும். இவை பற்றித் திருவள்ளுவர் பல அதிகாரங்களில் விளக்கியுள்ளார்.

## அதிகாரம் செய்வது பற்றிய அதிகாரங்கள்

அதிகாரிகளாக வருவோர் தம்மிடம் எக்குற்றமும் இல்லாமல் இருக்கவேண்டுமாம். ஆளும் திறனை

விளக்குமுன், முதன்முதலாகக் கூறப்படுவது இது. ஏன்? 'அரசன் எவ்வழி, குடிகள் அவ்வழி' - என்பது பழமொழி. இன்று 'ஆள்வோர் எவ்வழி, வாழ்வோர் அவ்வழி' என்று கூறலாம் தானே? ஆள்வோர் குற்றம் செய்தால், நாடு முழுதும் குற்றம் செய்து அழியும் என்பதை இன்று கண்கூடாகக் காண்கின்றோம்.

இந்தியாவின் இன்றையச் சிக்கலே அதுதானே! நிருவாகத் தலைமை ஏற்போர், ஆட்சிசெய்ய வருவோர், நிருவகிப்போர் குற்றங்களைக் கடிந்து நீக்க வேண்டும். 'குற்றங்கடிதல்' (44) என்ற அதிகாரம் இதையே கூறுகிறது.

பெரியாரைத் துணைக் கோடலும், சிற்றினம் சேராமையும் ஆட்சிசெய்வார்க்கு இன்றியமையாதன. நிருவகிப்போன் கீழ்-மக்கள் தொடர்பு கொண்டால் நிறுவனம் அழிந்துபோகும்.

'தெரிந்து செயல் வகை' - திட்டமிடல், ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்தல், ஆராய்ந்து ஒரு காரியத்தை மேற்கொள்ளுதல்.

'வலி', 'காலம்', 'இடன் அறிதல்' மூன்றும் நிருவாக நடைமுறைகளுக்கு மிக இன்றியமையாதன.

'தெரிந்து தெளிதல்', 'தெரிந்து வினையாடல்' என்று இரு அதிகாரங்கள் உள. இவை மனிதரை ஆளும் திறம் கூறுவன. தக்கார் இவரென ஒரு பணிக்கு ஆளைத் தெரிவு செய்தல் தெரிந்து தெளிதல்; அவர்களைப் பணியில் அமர்த்தி வேலை வாங்குதல் தெரிந்து வினையாடல்.

'சுற்றந்தழால்' அதிகாரிகளை, பணியிலுள்ளவர்களைத் தழுவிக் கொள்ளுதல். 'பொச்சாமை' கடமை மறவாமை. 'வெருவந்த செய்யாமை' ஆட்சியில் தனக்குக் கீழ்

உள்ளவர்கள்பால் அவர்கள் அஞ்சி வெருவும் படியானவற்றைச் செய்யாதிருத்தல். 'கண்ணோட்டம்', அதிகாரிக்கும் ஆள்பவனுக்கும் கண்டிப்புத் தேவை; கண்ணோட்டமும் வேண்டும் என்பது.

'மடியின்மை', 'ஆள்வினையுடைமை', 'இடுக்கண் அழியாமை' போல்வன பலவும் பொதுவாக முயற்சியுடையார்க்கும் சிறப்பாக ஆளும் நிருவாகிகட்கும் வேண்டியன.

'வினைத்தூய்மை', 'வினைத்திட்பம்', 'வினைசெயல் வகை' என்ற மூன்று அதிகாரங்களும் நேரடியாக நிருவகித்து ஆட்சிசெய்யும் செயலாளர்க்கு வேண்டியன. இவற்றுள் முதலில் உள்ள 'வினைத்தூய்மை', இம் மேலாண்மைக்கு வருவோர் குற்றமற்ற, ஊழலற்ற தூயவராய் இருக்கவேண்டுமென வற்புறுத்துகிறது. இன்றையப் பாரதநாட்டில் வினைத்திட்பமும் வினை செயல்வகையும் இருந்தும் வினைத்தூய்மை இன்மை யாலேயே முன்னேறமாட்டாமல் தடுமாறுகிறோம். இதை அன்றே உணர்ந்து, 'வினை' செய்ய வருவார் (Administrator) தூயவராய் இருக்க வேண்டுமென முதன்மை தந்து வலியுறுத்தியுள்ளமை அறிதற்பாலது.

இங்ஙனம் திருக்குறள் பொருட்பால் அதிகாரங்கள் பல இந்த 'ஆள்வினை' எனும் நிருவாகம் பற்றியே நேர்முகமாகவும் மறைமுகமாகவும் அமைந்துள்ளன. இவை நன்கு வரன்முறைப்படுத்தி, இளங்கலை, முதுகலை நிருவாகவியல் அல்லது ஆள்வினைத்துறைக் கல்விக்கு (B.B.A., M.B.A.,) பாடமாக வைக்க வேண்டியனவாம். இதை நம் உயர் கல்வியாளர் உணரவேண்டும். மேலைநாட்டை மட்டுமே எதிர்நோக்கும் இவர்கள், நம் பக்கம் திரும்புவர் என்பது ஐயமே. காலப்போக்கில் இவற்றின் சிறப்புக்களை

மேலைநாட்டார் யாரேனும் கண்டு கூறுவர்; அதன் பிறகு இவை இங்கு எடுபடும் என நம்பலாம்.

இங்கு இவ் 'ஆள்வினைத்' திறனின் அடிப்படைகள் சிலவற்றை மட்டும் எண்ணிப் பார்ப்போம்.

## வினைத்திட்பம் என்பது மனத்திட்பம்

நிருவாக நடைமுறை பன்முகம் உடையது. ஆள்வினைஞன், எடுத்து நடத்துபவன் மனத்தில் அவை பற்றிய அனைத்து நிகழ்வுகளும் முதலிலிருந்து முடிவு வரை வரைபடம் போல் பதிந்திருக்க வேண்டும். படிந்திருந்தால் நிருவாகம் சீராக நடைபெறும்.

'திட்பநுட்பம்' என்று தமிழில் ஒரு தொடர் உண்டு. ஒரு தொழிலகம் தொடங்கி நடத்துதல் அல்லது ஒரு மாநாடு நடத்துதல் என்று எடுத்துக்கொள்வோம். அவற்றுக்கான அனைத்து நிகழ்வுகள் - வரும் இடையூறுகள் - தாங்கும் திறன்கள் - வேண்டிய பொருள்கள் - ஒன்றன் பின் ஒன்றாய் நிகழ வேண்டியன அனைத்தும், ஒரு கட்டிட வரைபடம் போல், காரியமாற்றுவோன் மனத்தில் பதிந்திருக்க வேண்டும். அதுவே மனத்திட்பம். அவை அசைவின்றி, பிழையின்றிப் பதிந்திருத்தலை இது சுட்டுகிறது.

ஒரு மாநாடு நடக்கும் பொழுது, 'ஐயோ அது விடுபட்டதே; இது மறந்து விட்டதே; இது முன்பே செய்திருக்க வேண்டுமே; ஒரே குழப்பமாகி விட்டதே' எனத் தடுமாறுவதைப் பார்த்தால், அது 'மனத்திட்பம்' இல்லாதார் தொடங்கி நடத்துவது எனத் தெரிந்து கொள்ளலாம். எந்த நிருவாகத்திற்கும் முதலிலிருந்து முடிவுவரையிலான மனத்திட்பம் வேண்டும்.

**வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றைய எல்லாம் பிற. (வினைத்திட்பம் 661)**

மனத்திட்பம் இருந்தால், பிற வசதிக் குறைவுகளையும் சமாளித்து விடலாம். இன்றேல் எத்துணை வசதிவாய்ப்புப் பெருக்கமிருந்தாலும், ஒரு காரியம் சரிவர நிறைவேறாது.

## குற்றமற்ற நிருவாகம்

திருக்குறளில் 'குற்றங்கடிதல்' என்றும் 'வினைத் தூய்மை' என்றும் இரண்டு அதிகாரங்கள் உள. இரண்டுமே ஆட்சிக்கு வருவோர், மேலாண்மை செய்வோர், ஆள்வினைஞராம் அதிகாரிகள் யாவரும் முதலில் தாம் சிறு குற்றங்குறைகட்கும் ஆட்பட்டு விடக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றன. ஆள்வோர் தூயவராய் இருந்தாற்றான், கீழே வேலை பார்ப்போர் தவறு செய்ய அஞ்சுவர். மேலேயுள்ளவர்கள் எல்லாவித ஊழல்களையும் செய்துகொண்டு, கீழே இருப்பவர்களை அதட்டி மிரட்டுவதாலோ, உருட்டிப் புரட்டுவதாலோ நிருவாகம் சீர்படாது. இதைப் பலர் எண்ணுவதே இல்லை. இன்று நம் இந்திய நாட்டிலுள்ள பெருங்குறை இதுவே.

மேலே ஆள வருபவர் அப்பழுக்கற்ற தூயவராய் நடந்து வழிகாட்ட வேண்டும்; பேசிக்காட்டிப் பயனில்லை.

**ஒஓதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை**
**ஆஅதும் என்னு மவர். (வினைத்தூய்மை 653)**

ஒளி - தாம் உள காலத்து எல்லாரானும் நன்கு மதிக்கப்படுதல். ஒருவர் எல்லோரும் பாராட்ட, புகழ, மதிக்க நிகழ்காலத்தில் வாழ்வதே ஒளியுடன் வாழ்வதாகும். மேன்மேலும் வளர்வோம், செல்வம் பெருக்குவோம், எடுத்த தொழில் முதலாம் யாவும் சீர்பெறச் செய்வோம் என எண்ணுபவரே ஆதும் - ஆவோம் - உயர்வோம் என எண்ணுபவராவர்.

அவர் 'ஒளி அழியும் படியான செயல்களை நீக்குதல் வேண்டும்'. ஓஓதல் - ஓவுதல், நீக்குதல். தம் மதிப்பைக் கெடுக்கும் எத்தீச் செயலிலும் ஈடுபடக்கூடாது.

## சிந்தித்து முடிவு செய்தல்

எக் காரியத்தையும் தொடங்கும்முன் நன்கு சிந்தித்து, முடிவு செய்து கொண்டு இறங்க வேண்டும். சிலர் ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாமல் தடுமாறுவர். அங்ஙனம் ஒன்றைத் துணிந்து முடிவெடுக்காமல் இறங்கிவிட்டு, அத்திட்டத்தை எதிர்பார்த்தால் எப்படி? பலபோது பலரது நிலை இதுதான்!

முடிவெடுப்பதும், உடனே அதைச் செய்யத் தொடங்குவதும் 'செயல் வெற்றியின்' அடிப்படை.

**சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு**

**தாழ்ச்சியுள் தங்குதல் தீது. (வினைசெயல் வகை 671)**

சிந்தித்து வலுவான முடிவெடுத்தல் (Effective decision making) என்று இன்று இதைக் குறிப்பிடுகின்றனர். சூழ்ச்சி - சிந்தித்தல், ஆராய்தல். சூழுதல் - சூழ்ச்சி - சூழ்வோர் என்பன முன்பு நல்ல பொருளில் வழங்கின. சூழ்வோர்- அமைச்சர்கள். காலப்போக்கில் சூழ்வோராம் சிந்திப்போர் பிறர்க்குத் தீங்கு செய்யவே சிந்தித்ததால், சூழ்ச்சியின் பொருளும் கெடுதல் செய்வதென ஆனது!

சிந்தனையின் முடிவு ஒன்றைத் துணிதலேயாம். அங்ஙனம் முடிவு செய்தபின், அதைச் செயற்படுத்தாது காலந்தாழ்த்துவது தீது. பிறர் முந்திக் கொள்ளலாம்; சூழல் மாறலாம்; வாய்ப்புத் தவறிவிடலாம். பிறகு மீண்டும் புதிய சூழலுக்கேற்ப நடக்கவேண்டி வரும்.

## வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்க

வாய்ப்புள்ள சமயத்தைப் பயன்படுத்திக் கொள்க; வாய்ப்புள்ள வழியிலெல்லாம் முயல்க - செயற்படுக! அது தவறினால், சூழலுக்கேற்ற வாய்ப்புக்கு மாறிக்கொள்க!

'நீ உன்னால் இயலுமிடத்திலெல்லாம் முயன்று செயலாற்றுதல் நல்லது; அவ்விடங்களில் இயலாமற் போனால், அக்காரியம் வேறு எவ்வழியில் முயன்றால் முடியுமோ அவ்வழிக்கு நீ மாறிக்கொள்க! முயற்சி வெற்றியே முக்கியம்.'

**ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்**
**செல்லும்வாய் நோக்கிச் செயல். (வினைசெயல் வகை 673)**

ஜப்பானியர்கள் கார் உற்பத்தித் தொழிலில் உலகை வெற்றிகொண்டனர். உலக நாடுகள், அமெரிக்கா உட்பட, போட்டியிட முடியாமல் ஜப்பான் கார்களைத் தங்கள் நாட்டில் தடைசெய்ய எண்ணினர். உடனே ஜப்பானியர்கள் கூட்டாக அந்தந்த உள்நாட்டுக் குழுமங்களோடு சேர்ந்து தொழில் செய்வதாகச் சொல்லி, உலகெங்கும் தங்கள் கார்கள் ஓடும்படி செய்கின்றனர்.

இது ஒரு நுட்பமான குறள்.

'நீ உன்னால் இயன்ற வழிகளில் எல்லாம் செயலாற்ற முனைக. அது நல்லதே. முடியாவிட்டால், நீ கண்ட வழிகளைத் தவிர்த்து, வேறு எந்த வழியில் அது நிறைவேறும் சூழலுளது எனப் பார்த்து, நீ அதற்கு மாறிக்கொள்.'

ஒருவர் தோல் வாங்கி தோல்படு பொருள்களை உருவாக்கி வந்தார். பெண்கள் கைப்பை, பணப்பை, மெய்ப்பை, பள்ளிப்பை, எனப் பலவற்றைச் செய்து விற்று வந்தார். எல்லாவற்றிலும் இழப்பே ஏற்பட்டது. இது சம்பந்தமாகத் தோல் வாங்கிய இடங்களில் பணம் குவிவதைக் கண்டார். உடனே தாமும் தோல் வாங்கி விற்கும் தொழிலுக்கு மாற்றிக்கொண்டார். இன்று பெருஞ்செல்வராக விளங்குகிறார். ஒல்லாக்கால் -

முடியாவிட்டால். செல்லும்வாய் - அது முடியும்படியான வழி; தன் வழியல்லாது அதன் வழி. காரிய வெற்றிக்குக் காட்டிய வழி இது.

அன்றே செய்க!

சூழல் ஒத்துவராது, வாய்ப்புச் சுருங்குங் காலத்துக் கொக்கைப் போல், பார்த்திருக்க வேண்டுமாம். ஓடுமீன் ஓட உறுமீன் (பெரிய மீன்) வருமளவும் அது காத்திருக்கும். உறுமீன் வரப் பார்த்ததும் குத்திவிடும்; இன்றேல் அது தப்பிப் போய்விடும்.

**கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்தொக்க சீர்த்த விடத்து. (காலமறிதல் 490)**

காலமும் இடமும் நமக்குச் சார்பாக இருக்கும்போது, காரியத்தை முடித்துக்கொண்டு விட வேண்டும். தக்க சமயம் வரும்போது, அக்கணமே செயற்பட வேண்டும். சிலவற்றை உரிய காலத்தில் செய்யவில்லையென்றால், பிறகு ஒரு யுகம் கடந்தாலும் அது நடவாது. வீடு கட்ட நினைக்கிறீர்களா? பெண்ணுக்குத் திருமணம் முடிக்க முயல்கிறீர்களா? ஒரு கடை வைக்கும் எண்ணமா? - சூழல் பார்த்து, வாய்ப்பான நேரமென்றால், எவ்வாறேனும் அதை நிறைவேற்றிவிட வேண்டும். பிறகு மிகநீண்ட காலம் காத்திருக்கவோ, முயற்சியைக் கைவிடவோ நேரலாம்.

ஆறப்போட்டுச் செய்க

ஆட்சியின் போது ஏதேனும் ஒன்றைச் சிறிது காலம் கழித்துச் செய்யவேண்டி வரும். அதில் விரைவுபடக் கூடாது. அலுவலகத்தில் பல கோப்புகள் வரும். அவற்றை விரைவில் செய்ய வேண்டியவை - அடுத்துச் செய்யத் தக்கவை - ஆறப்போட வேண்டியவை என மூன்றாகப் பகுக்க வேண்டும். உடனே முடிக்க வேண்டியவற்றை மட்டுமே, ஒப்பமிட்டு உடனுக்குடன் கவனிக்க ஏற்பாடு

செய்யவேண்டும். வாந்தி பேதி பரவுவதைத் தடுக்கவும் சாலை வசதி போடவும் என இரண்டு கோப்புகள் வந்தால், மாநகராட்சி ஆணையர் முதலில் எதில் ஒப்பமிட்டு அனுப்புவார்? இது எளிதாகப் பகுத்தறியக் கூடியது. சிலபோது சிந்தித்து முடிவு செய்ய வேண்டியவை வரும். அங்கேதான் திறமை பயன்படும்.

**தூங்குக தூங்கிச் செயற்பால; தூங்கற்க**
**தூங்காது செய்யும் வினை. (வினைசெயல் வகை 672)**

காலந்தாழ்த்துதலே 'தூங்குதல்'. இன்று அலுவலங்களில் கோப்புகளை அடிக்கடி தூங்கப்போட்டு விடுவர். கையூட்டுப் பெற்றதும், கோப்பு நகரும். தூங்குக-காலந்தாழ்த்துக. தூங்குதல் - தொங்குதல். படத்தைத் தூக்கு என்பர். தூக்கில் போடு என்பர். ஒரே இடத்தில் தொங்கப் போடுவது. 'என்ன இப்படி நம்மைத் தொங்கலில் விட்டுட்டீங்க' என்று பேச்சு வழக்கில் வருத்தப்படுவர். தூங்காது - கிடப்பில் போட்டுவிடாது. விரைந்து செய்ய வேண்டியவற்றை உடனே செய்க என்பதாம். கிடப்பில் போடுதல் என்பதும் தூங்க வைத்தல்தானே!

## வேண்டாத வேளையில் பெருமுயற்சி தேவையா?

சிலர் 'நான் கடுமையாக முயன்றேன்; நாள்தோறும் உழைத்தேன்; படாத பாடுபட்டேன்' என்பார்கள். 'ஐயகோ, இவ்வளவு முயன்றும் பலருடைய ஆதரவைப் பெற்றிருந்தும் வெற்றி கிட்டவில்லையே' என்று, அயர்ச்சியடைவார்கள். செய்ய வேண்டிய முறைப்படி செய்யாமல் இவ்வாறு வருந்துவார்கள். எதையும், முதலில் எவ்வாறு செய்ய வேண்டுமென நெறிமுறைகளை ஆரராய்ந்து அறிந்துகொண்டு அதன்படி முயலவேண்டும். ஒரு மரத்தின் வேண்டாத கிளையை வெட்டுவதாயினும், தக்க கருவிகொண்டு பக்கவாட்டைப் பார்த்து வெட்டிமுறிக்க வேண்டும். விவரம் தெரியாமல் கையைக் காயப்படுத்திக் கொள்ளக்கூடாது.

ஒரு தொழிலிலும் இதுபோலத்தான், நெறி முறையறிந்து செயற்பட வேண்டும்.

ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும். (தெரிந்து செயல் வகை 468)

ஆறு-வழி, நெறி, முடிக்கும் உத்தி. ஒரு செயலைத் தொடங்கும்போது, அதை முடித்ததற்கான நெறியை அறிந்து அதன்படி முடிக்கவேண்டும். அல்லாமல் நெறியல்லா நெறிச்சென்று, பலரது துணையோடு மிக முயன்று போற்றிச் செய்தாலும், அக்காரியம் கெட்டுப்போகும்.

ஒரு தொழிலைத் தொடங்குவதிலும் முன்திட்டம் மிகமிகத் தேவை. சுற்றுச் சார்பு, சூழல், வாய்ப்பு, உதவி எல்லாம் ஆராய்ந்து, ஒன்றில் இறங்கவேண்டும். பொருந்தாத இடத்தில் கடைவைத்துவிட்டு, இரவும் பகலும் விழித்திருந்து கடையைக் கவனித்தாலும் செலவுக்குக் கூடக் கட்டாதுபோகும். அதே கடையை, பொருத்தமான இடம் பார்த்து வைத்தவன், குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் உழைத்துப் பணத்தை அள்ளிக் குவிப்பான். அமெரிக்க அதிபராக இருந்த ஐசன் ஓவர் அணு அணுவாக ஆராய்ந்து, திட்டம் வகுத்துப் பிறகே செயலில் இறங்குவாராம். அதனால் மாபெரும் வெற்றிபெற்றார். "இறுதி விவரம் வரையில், அணுஅணுவாகச் சிந்தித்து, திட்டம் வகுத்துக் காலத்தைத் தவறவிடாது, ஒரேஅடியாக முயற்சியில் இறங்கி முடிக்கவேண்டும்", என்ற அவர் கூற்றுத் திருக்குறளுடன் பொருந்தி வருவதை ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.

## தொடங்குவதில் தெளிவான அறிவு வேண்டும்

ஒன்றைப் பற்றித் தனக்குத் தெளிவான அறிவு இருந்தால் அதைத் தொடங்கலாம். அல்லது நன்கு ஆராய்ந்து அறிந்து ஒரு முடிவான தெளிவுக்கு வந்தபின் அதைத் தொடங்க

வேண்டும். இன்றேல் அதனால் பாதகம் ஏற்பட்டுப் பிறரால் தூற்றப்படும் நிலைமை உண்டாகும்.

தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்
ஏதப்பா(டு) அஞ்சு பவர். (தெரிந்து செயல் வகை 464)

ஒரு தொழிலைத் தொடங்கும்போது அது பற்றிய முன்னறிவு, பட்டறிவு, பயிற்சி யாவும் முதலில் தேவை. முதலில் தமக்கு அது பற்றிய தெளிவான அறிவும் திட்டமும் இருந்தாலல்லவா, அதைச் செம்மையாய் நடத்திப்போக இயலும்; வேலைக்காரர்களை வேலை வாங்க இயலும்.

தமக்குத் தெளிவில்லாத ஒன்றை, பிறரால் இழிக்கப் படுதலென்ற குற்றத்துக்கு ஆளாக அஞ்சுபவர்கள் தொடங்க மாட்டார்கள்.

சிலர் வேலைக்காரரை நம்பித் தொடங்குவார்கள். தமக்கு அது பற்றி எதுவும் தெரியாமல், தமக்குக் கீழே வேலைக்கு அமர்த்துபவர்களை அது பற்றித் தெரிந்தவர்களாய் அமர்த்தி, நடத்திப்போக நினைப்பது இடையிலோ, இறுதியிலோ பேராபத்திலும் பேரிழப்பிலும் முடியும்.

வசதி கருதி ஒரு கார் வைத்துக் கொள்பவர் கூட, அது பற்றி நன்கு தெரிந்திருக்க வேண்டும். தாமும் ஓட்டத் தெரிந்தவராய் இருப்பது சாலச் சிறந்தது. அதன் உள்ளுறுப்புக்கள், ஓடும் போதே அதன் நிலையறிதல், சிறிது பழுதென்றாலும் முன்கூட்டிக் கண்டுகொள்ளுதல், அதை எளிதில் செலவு சிக்கனமாகத் தீர்க்கும் விதம், எண்ணெய்ச் செலவு பற்றிய விவரம் எனப் பலவும் தெரியாமல், ஓட்டுநரை நம்பியே கார்வைப்பவர், பல இடர்ப்பாடுகட்கு ஆளாவர். அதனால்தான் நம் வழிகாட்டி ‘தெளிவிலதனைத் தொடங்காதே’ என்று எச்சரிக்கிறது.

## தமக்கும் தெரிந்து தெரிந்தவர் உதவியும் வேண்டும்

ஒரு பெரிய ஆலையைக் கூட நிறுவி ஆளலாம்; ஒரு நாட்டையும் திறமையுடன் ஆட்சிசெய்யலாம். எடுத்துக்கொண்ட காரியத்தை நன்கு அறிந்தவர் என்று, தாம் தெளிந்து சேர்த்துக்கொண்ட அலுவலர், மேலாளர், பொறியாளர் அனைய இனத்துடன், தாமும் ஆராய்ந்து எண்ணிச் செய்ய வல்லவர்க்கு அரிய செயலென்று எதுவுமில்லை.

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். (தெரிந்துசெயல் வகை 462)

ஒரு பெரிய நிறுவனத்தை நடத்தப் பலரது கூட்டு முயற்சி தேவை. அது பற்றிய அறிவுடையாரைத் துணையாகக் கூட்டிக்கொண்டு, தாமும் கூட இருந்து, சிந்தித்துச் செயற்பட்டால் வெற்றியடையலாம். தாம் விவரம் தெரிந்தவராய் இருப்பதோடு, கூடச் சேர்த்துக் கொள்ளப்படுபவரும் அவ்வாறு தெளிவுடையவராய் இருக்க வேண்டுமாம்.

## நுட்பத் திறனறிந்தவர்களிடம் நுட்பங்களைக் கற்றுக் கொள்க

சிலர் நாம் தொடங்கும் தொழிலை முன்பே தொடங்கி அனுபவப்பட்டிருப்பர். அதன் நுட்பத் திறன்கள், பல ஆண்டுப் பழக்கத்தால், கைவரப் பெற்றிருப்பர். அவரைத் தொடர்புகொண்டு, அன்னாரது பட்டறிவைக் கேட்டறிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல். (வினைசெயல் வகை 677)

ஒரு செயலை மேற்கொள்பவன் அதைத் தொடங்கிச் செய்யும் முறை, அச்செயலை முன்னதாகச் செய்து, அதில் பழகி, அதன் உள்ளடங்கிய நுட்பங்களை அறிந்தவனது கருத்தை - ஆலோசனையைத் தம் உள்ளங் கொள்ளுமாறு நன்கு அறிந்து கொள்வதாகும். செயல்முறை - செய்யத் தொடங்கும் முறை. உள்ளறிவான் - உள்ளே பொதிந்துள்ள நுட்பத் திறன்களையெல்லாம், முன்னரே செய்து போந்தமையால், நன்கு அறிந்திருப்பவன். அப்பட்டறிவு நமக்குப் பயன்படும். உள்ளங்கொளல் - நன்கு கேட்டு, மனத்தில் பதியவைத்துக் கொள்க என்பது. தாம் அவ் அனுபவப்பட்டதுபோல் கற்றுக்கொள்ள வேண்டுமாம்.

## ஒரு கல்லில் இரு மாங்காய்

நிருவாகத்தில் ஒரு திறன் யாதெனில் ஒரு கல்லில் இருமாங்காய் அடிப்பது போல், பயன்படுத்திக் கொள்வது. ஓர் ஊரில் ஒரு பொருளை விற்கச் செல்பவன், அவ்வூரில் கிடைக்கும் மலிவான பொருளைத் தன்னூருக்கு வாங்கி வந்து விற்றுப் பயனடைவது. புகையிலை, மதுவுக்கு வரியைக் கூட்டிக்கூட்டி, அவற்றைப் பயன்படுத்துவோர் தொகையைக் குறைப்பதால் நாட்டில் தொல்லைகளை நீக் குவது.

அரசர்கள் தமக்கு ஒரு பகை தோன்றினால், அவர்க்குப் பகையாயினாரை, அவர்மேல் தூண்டி விடுவர். இதனால் அவர்கள் இருவரும் போர் நிகழ்த்திக் கொண்டு உழல்வராதலின், இவர்க்கு அது நன்மையாய் முடியும்.

அமெரிக்காவில் உயர்கல்வி கற்கும் மாணவர்கள் தாமே வேலைபார்த்துப் பொருள் தேடிப் படிக்கின்றனர். பள்ளி இறுதிப் படிப்புவரை தான் பெற்றோர் கவனிப்பர். எவ்வளவு வாய்ப்பு இருப்பினும், உயர்கல்வி தன்முயற்சிக்கே பெரும்பாலும் விடப்படுகிறது. இதனால் விடுமுறை

நாளெல்லாம் உழைத்துப் பொருளீட்டிப் படிக்கின்றனர். இது உழைக்கும் பழக்கத்தையும், பட்டறிவையும் கல்வியோடு உடன்பெறுவதால் இரட்டிப்பு நன்மை விளைகிறது. அரசும் தனியாரும் தாராளமாகக் கடனுதவி வழங்குகின்றனரே யன்றி, யாரும் 'இலவசம்' கேட்பதுமில்லை; தருவதுமில்லை.

**வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று. (வினைசெயல் வகை 678)**

யானை, மான் முதலான விலங்குகளை ஒன்றைக் காட்டி மற்றதைப் பிடிப்பர். 'பார்வை விலங்கு' என்பது பெயர். அதைப் பார்த்து, அதற்கு இனமான இணை ஒன்று பக்கத்தில் வரும்போது பிடிக்கப்படும். நனைகவுள் - மதம் ஒழுகும் கன்னம். மதம் பொருந்திய யானையைப் பிடிப்பது கடினம். அதையும் பார்வை யானையால் பிடித்துவிடுவர் அதுபோல் ஒரு வினையை-தொழிலை-செயலைக் கொண்டு அது போன்ற பிறிதொன்றையும் முடித்துக் கொள்வது ஆள்வினைத் திறமாகும். சிறந்த நிருவாகத் திறனுடையவர் இவ்வாறு செயற்பட்டு, இரட்டிப்புப் பயனுக்கு வழிவகுப்பர்.

## மனிதர்களை ஆளும் திறமை

ஒரு நிறுவனம், தொழிலில் பிற கருவிகள் பலவற்றை ஆள்வது ஒரு திறமை; மனிதர்களைக் கொண்டு நடத்துவது பிறிதொரு திறமை.

ஒரு நூற்பாலை நிறுவுவோர், அனைத்து நிருவாக நடைமுறைகளையும் தாமே கவனிக்க இயலாது. பல துறைகள், பல பிரிவுகள் - பல மேலாளர்கள், துணை யாளர்கள், பணியாளர்கள் அனைவரையும் தேர்ந்தெடுக்க வேண்டும்; வேலை வாங்க வேண்டும்; எங்கும் யார் மனமும் கோணாமல் கொண்டு செலுத்த வேண்டும்.

மனிதரை ஆள்வது மிகக் கடினமான ஒன்றுதான். இதனை மனங்கொண்ட வள்ளுவப்பேராசான் எத்தகையவர்களைத் தேர்ந்து, தெளிந்து வேலைக்கு அமர்த்த வேண்டும் என்பதற்கு ஓர் அதிகாரம் - 'தெரிந்து தெளிதல்' என எழுதியுள்ளார். அங்ஙனம் தெரிவு செய்தவர்களை எங்ஙனம் வேலை வாங்க வேண்டும் என்பதற்கு ஓர் அதிகாரம் - 'தெரிந்து வினையாடல்' வகுத்துள்ளார்.

ஒரு செயலை யாரைக் கொண்டு நடத்துவது; அதில் அவர்க்குப் பழக்கம் உண்டா; அவனால் செய்து முடிக்க இயலுமா என இன்னபிற காரணங்களை முன்கூட்டி எண்ணி ஆராய்ந்து, அவ்வவ் வேலையை அவ்வவற்றிக்குப் பொருத்தமானவர்களிடம் விடவேண்டும்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
அதனை அவன்கண் விடல். (தெரிந்து வினையாடல் 517)

ஒரு காரியத்தைச் செய்யவிடுவானுக்கு, அதற்குரிய பொருத்தம் அவன் அதில் கொண்ட திறமை, பழக்கத்தைப் பொறுத்திருக்கிறது. அவனிடம் 'விடல்' என்பது, அவனைச் செய்யவிடுதல் என்பது மட்டுமன்றி, அதில் பிறகு தான் தலையிடாமையும் வேண்டுமென்ற குறிப்புளது.

இதனை மற்றொரு குறளிலும் வற்புறுத்துகிறார்.

வினைக்குரிமை நாடிய பின்றை அவனை
அதற்குரிய னாகச் செயல். (தெரிந்துவினையாடல் 578)

ஒருவரிடம் ஒரு செயலை - அதிகாரத்தை ஒப்படைப்பதுதான் 'வினைக்கு உரிமை நாடுதல்'. அங்ஙனம் ஒப்படைத்த பிறகு, அவரை அதற்கு முழுவதும் உரியராக்கி, அதில் அவர் மேன்மேல் உயருமாறு செய்யவேண்டும். அதுவே 'அதற்கு உரியனாகச் செய்தல்'. பிறர் தலையீடு

கூடாது என்ற குறிப்பும் உளது. அன்பு, பற்று, பாசம் காரணமாக, ஒன்றைப் பற்றி எதுவுமே அறியாதவரை அமர்த்துவதும் *(507)* , ஒருவர் பிறவாறு சிறந்தவர் என்பதற்காக அவரால் செய்ய முடியாத ஒரு துறையில் அவரை அமர்த்துவதும் *(515)* கூடா. அவை எடுத்த காரியத்தை அழிப்பதுடன், முழுவதும் பேதைமையாய்ப் போக வழிசெய்துவிடும்.

## சில நேர்முக நிருவாக நடைமுறைகள்

கண்டித்தலும், தண்டித்தலும் இன்றேல் நிருவாகம் சீர்படாது. ஆயினும் அவை அளவாக அமையவேண்டுமாம். குற்றங்கண்டவிடத்து, குற்றம் செய்தார் அஞ்சி நடுங்கும்படி மிகக் கடுமையாக - அளவுகடந்து தண்டிப்பார் போலத் தொடங்க வேண்டும். அங்ஙனம் அச்சத்தை விளைவித்துப் பிறகு அதைச் செயற்படுத்துங்கால் அளவான முறையில், சிறிது மென்மைப்படுத்தித் தண்டிக்க வேண்டுமாம்.

**கடிதோச்சி மெல்ல எறிக; நெடிதாக்கம்**
**நீங்காமை வேண்டு பவர். (வெருவந்த செய்யாமை 562)**

அதிகாரம் செலுத்துதலை-தண்டித்தலை ‘ஓங்கி அடிப்பது’ என்ற குறியீட்டில் வைத்து விளக்குகிறார். மிகக் கடிதாக ஓங்கு; ஆனால் அடிவிழும்போது சற்றே மென்மையாக அடி! இவ்வாறான ஆட்சித்திறன், நீண்ட நாள் தமது ஆட்சி நீங்காது நிலைக்க` விரும்புவார்க்குத் தேவை என்பது வள்ளுவம்.

‘கண்ணோட்டம்’ வேண்டும். கருணை, தயை, அருள், அன்பு இன்றேல் ஆட்சி, அருவருக்கத் தக்கதாய், அஞ்ச வேண்டியதாய் ஆகும். ஆயினும் கண்ணோட்டம் என்று மிக நெகிழவிட்டால், நிருவாகம் சீர்குலையும். குற்றங்குறை கூடும். ஊழல் மலிந்துவிடும்.

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை உடைத்திவ் வுலகு. (கண்ணோட்டம் 578)

காரியம் சிதையாத அளவுக்குக் கண்ணோட்டம் இருக்கலாம். கண்ணோட்டம் முக்கியமா? காரியம் முக்கியமா? காரியம் நடைபெற வேண்டுமேல் கண்ணோட்டம் கூடாது தான். கண்டிப்பு இல்லையென்றால், தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன் ஆகி விடுவான். பழங்காலத்தில் 'தண்டல்காரன்' அரசுக்காக வரி வசூலிப்பவன். தண்டுதல் - வசூலித்தல். அரசு அதிகாரி மட்டுமன்றி, தடி எடுத்தவனெல்லாம் வரி கேட்டால் மக்கள் என்னாவார்கள்? கண்ணோட்டமே கூடாது என்றாலும் அறவே ஒழிப்பதென்றாகிவிடும். குற்றம் செய்தவரைத் திருத்துவதென்பதே முதல் முயற்சியாதல் வேண்டும். அதிலும் திருந்தாதவரைக் கடுமையாய்த் தண்டிக்கலாம். அதனால் கருமம் சிதையாத அளவுக்குள் பார்த்துக் கண்ணோட்டமும் உடையரானால், அவர்க்குக் காரியம்-தொழில்-வணிகம்-நிருவாகம் யாதாயினும் உரிமையுடைதாய் நிலைக்கும். உலகமே உரித்தாகுமெனில் கேட்க வேண்டுமா?

## கீழதிகாரிகளை பணியாளர்களை வசப்படுத்தி ஆளுதல்

அரசு வினைஞர்களாம் அதிகாரிகளை ஆள்வது; அவர்கள் தங்கள் கீழ் உள்ளவர்களை; அவர்கள் அவர்கட்குக் கீழ் வேலை செய்பவர்களை, பணியாளர்களை ஆள்வது ஆகியவற்றிலுள்ள அடிப்படை நெறி "கொடுப்பதும் இன்சொலும்" ஆகும். இனிய பேச்சால் பலர் வசப்படுவர்; அடங்கி நன்றியோடு வேலை பார்ப்பர். மலர்ந்த முகமும் இனிய சொல்லும் மனிதரை ஆள்வதில் மிகவும் இன்றியமையாதன. அதனுடன் அவரவர்க்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றுவதிலும் அக்கறை வேண்டும். அவரவர் நல்வாழ்வு, வளர்ச்சிக்கு வேண்டியவற்றை அறிந்து

கொடுப்பீர்களாயின், அவர்கள் பெறும் மகிழ்ச்சிக்கு அளவில்லை.

> கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய
> சுற்றத்தால் சுற்றப் படும். (சுற்றந்தழால் 525)

சுற்றம் - சுற்றியுள்ள அமைச்சர்களை முன்பு குறித்தது. இன்று அரசைச் சுற்றியுள்ள அதிகாரிகள் - அவர்களுக்கு அடுத்து, அடுத்துப் பணிசெய்பவர்களை எல்லாம், 'அடுக்கிய சுற்றம்' எனலாம். இவர்கள் அனைவரும் சுற்றமாய்ச் சுற்றியிருந்து பணிசெய்ய, அவர்களை நீங்கள் கவனிக்கின்றீர்கள்; அவர்கள் குடும்ப வளர்ச்சியில் - நலத்தில் உங்களுக்கு அக்கறை உளது என்று காட்டவேண்டும். அதுவே 'கொடுத்தல்'. இன்சொல், பாராட்டுமொழி, அன்புமொழி அவர்களை ஈர்க்கும். 'அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும்' என்பது எல்லோரும் மகிழ்ச்சியாய், நன்றியறிதலுடன் பணிசெய்வர் என்பதையே குறிக்கிறது.

## பண்பறிந்து செய்க

ஆயினும் அங்ஙனம் தொழிலாளர்களை, பணியாளர்களை, ஆளும் வினைஞராம் அதிகாரிகளை அரவணைத்துச் செல்வதிலும் ஒரு விழிப்புணர்வு தேவை.

திருவள்ளுவர் மிக நுணுக்கமாக, ஆள்வினைத் திறத்தை-நிருவாக நடைமுறையைக் கற்றுத் தருகிறார்.

சிலரைப் பாராட்டினால், அப்பாராட்டே அவர்களைத் தருக்கும் செருக்கும் கொள்ளச் செய்து, பாராட்டியவர் தலைமீது ஏறவைக்கும்.

ஓரதிகாரிக்கு ஒன்றைப் பலரறியப் பாராட்டிக் கொடுப்பது, மற்றவர்களிடம் எரிச்சலை ஏற்படுத்தி,

அதனால் பலர் 'நிறுவன'த்துடன் ஒத்துழையாது போகக்கூடும். நல்லது செய்யப்போய், தொழிலுக்கும் நிறுவனத்துக்கும் பெருந்தீமையாகிவிடும்.

ஒருவருக்குத் தொடர்ந்து கண்ணை மூடிக்கொண்டு பதவியுயர்வு கொடுக்கவே, அவர் தலைக்கு மிஞ்சிப்போய், உரிமையாளரையே ஓட்டிவிடும் நிலைமை ஏற்படலாம். சிலர் முதலில் நல்லவர்கள் போலிருந்து, பதவி பெற்றதும் மாறிவிடுவார்கள்.

நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந்(து) ஆற்றாக் கடை. (தெரிந்துசெயல் வகை 469)

நல்லது என்று கருதிச் செய்வதையும், செய்யப் படுபவரது பண்பு-குணம்-இயல்பை அறியாது செய்துவிட்டால், அதனால் தவறு நேரும். நல்லதுதானே செய்தோம் என்று எண்ணலாகாது. அது செய்தவர் தலைக்கே ஊறாய் முடியும். எத்துணை இன்றியமையாத எச்சரிக்கை இது என எண்ணிப் பார்க்கவேண்டும்!

## காரியக் கேடு வராமல் காப்பாற்றுக!

சிலர் காரியம் வெற்றியாய் ஆவது போல் தோன்றியதும் மகிழ்ச்சியில் மிதப்பர். கடையில் இலாபம் பெருகுவது போல், வரவு கூடியதும் அலட்சியமாய் அக்கறையை இழப்பர். ஆட்சிக்கு வந்ததும், மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி, உறுதி கூறிய கடமைகளை மறந்துபோவர். இன்று அரசியல்வாதிகள் பலரது நிலைமை இது. தேர்தலில் கூறிய உறுதிமொழிகளை, ஆட்சியைப் பிடித்ததும், அறவே மறந்துபோவர்!

இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக; தாம்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து. (பொச்சாமை 539)

பொச்சாத்தல் - கடமையை மறத்தல். தமக்கு மகிழ்ச்சி வந்தவிடத்து, அதில் மயங்கிப் போகின்றவர்கள், அவ்வாறு மயங்கிக் கடமையை அலட்சியப்படுத்தி முன்பு கெட்டழிந்தவர்கள் பலரென்பதை நினைத்துப் பார்க்க வேண்டுமாம். நினைத்துப் பார்த்தால் இவர்கள் அவ்வாறு கடமையை மறந்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கிவிட மாட்டார்கள். இவ்வாறு திருவள்ளுவப் பெருமான் ஆட்சித் திறன் பற்றிக் கூறியுள்ளவை, இன்னும் பலவுள. அவை இளைஞர் வளர வழிகாட்டும் வள்ளுவங்களாகும்.

# 9

# பழகும் மனிதப் பண்பாடு

மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் பழகுவதே உலகிய லாகவுளது. திருவள்ளுவர் இதுபற்றிப் பல்வேறு இடங்களில் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் கூறியுள்ளார். ஆள்பவரும் மக்களும், பெரியோரும் அவரைச் சார்வோரும், நண்பர்களாக ஒருவருக்கொருவரும், அதிகாரிகளும் அவர்களை அணுகு வோரும் பழக வேண்டியுளது. மனவேற்றுமையுடையாரும், பகையாளிகளும், காதலர்களும், உறவினர்களும் என உலக மானுடர் பழகுங்கலை கற்க வேண்டிய இடங்களும் நிலைகளும் மிகப் பலவாகும். அதனால் குறள் நூலில் இதுபற்றிய நெறிமுறைகள் விரவிக் கிடப்பதில் வியப்பின்று.

இளையோர் இதுபற்றிய செய்திகளை - நெறிகளை அறிந்து கொள்வது, அவர்களது நீண்ட நெடிய வாழ்வில், பல நிலைகளில் பயனுண்டயதாகும். ஒவ்வொரு கருத்தும் முத்துப்போல் கருத்துத் தெளிவுடன் கூறப் பெற்றிருப்பதால், உலக மக்களுக்கே இவை வழிகாட்டும். ஆங்கில நூல்களில், மேலை நாட்டார் கூறியுள்ள இது போன்ற கருத்துரை களுடன் இவற்றை ஒப்பிட்டுக் கற்பார் வியப்பிலாழ்வர். அவற்றுள் தேர்ந்தெடுத்த சில பழகும் பண்பாடுகளை இங்குக் கண்டுகொள்வோம்.

## உள்ளன்பு

*உள்ளன்புடன் நட்புப்பூண்டு பழகவேண்டும். மனமும் மனமும் ஒன்றி மகிழ்ப் பழகவேண்டும். முகமும் முகமும்*

மட்டுமே மலரச் சிலர் பேசி உறவாடுவர்; அகம் வேறு எண்ணம் கொண்டிருக்கும். மனிதத் தன்மை சிறந்து, மானுடம் வெல்ல, பழகும் முறையில் பண்பாடுகளைப் போற்ற வேண்டும்.

முகநக நட்பது நட்பன்று; நெஞ்சத்(து)
அகநக நட்பது நட்பு (நட்பு 786)

முகநக நட்பது, அகநக நட்பது என இருவகைப் படுத்துகிறார் தெய்வப்புலவர். முகம் மட்டுமே நக-மலர, புன்னகை தவழ நட்புக்கொள்வது நட்பாகாது. அகம் நகும் நட்பில் முகம் மலரும். அகமும் முகமும் மகிழ நட்புப் பூணுவதே நட்பாகும். உலகில் வெளியே நடிப்பது போன்ற நட்பே மிகுதி. உண்மையான நட்புக்கு அது இலக்கணம் ஆகாது. உள்ளுள் மகிழ்வது உண்மைக்குச் சான்று; முகம் மலர்ந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது அதன் வெளிப்பாடு. மனிதனால் அகம் மலராமல், முகத்தால் மட்டும் மலர்வதுபோல் காட்டி நடிக்க முடியும். அதனைப் பகைவரிடம் மட்டும் பயன்படுத்துக என்பார் வள்ளுப் பேராசான்.

பகைநட்பாங் காலம் வருங்கால் முகம்நட்டு
அகநட்பு ஒரீஇ விடல். (கூடாநட்பு 830)

உலகியலில் சில சமயம் பகைவரும் நண்பர் போலப் பழக முயல்வர். அக்காலத்தில் நாம் பகைமை பாராட்ட இயலாதிருக்கும். அவருடன் பகை என்பது வெளிப்பட ஏற்படும் வரை, நாமும் வெளியே சிரித்துப் பேசி, உள்ளத்தால் ஒன்றாது முற்றிலும் தவிர்த்தல் வேண்டும். இன்றேல் ஏமாற்றமாகும். அதாவது பகைவர் நட்புக்கொண்டார் போல் நம்முடன் பழகும் சூழல் ஒன்று ஏற்பட்டால், அக்காலம் மட்டும் முகத்தால் நட்புக் கொண்டவர்போல் பழகி, உள்ளத்தால் நட்பதை அறவே நீக்கிவிடுதல் வேண்டும். 'ஒரீஇ விடல்'-நீக்கி விடுக.

அளபெடை தரும் அழுத்ததால், அக்காலம் முடியும் வரை நண்பர் போல் பழகி, பிறகு அதனையும் வரவரக் குறைத்து அறவே நீக்கிவிட வேண்டும் என்பது குறிப்பு.

## அன்பே ஆணிவேர்

நட்புக்கு அன்பே ஆணிவேராகும்; அதிலிருந்து தழைத்துச் செழிப்பதுதான் நட்பு, பழக்கம் என்ற ஆலமரம். உள்ளன்பே ஒருவரை நட்புக்கொள்ள உந்துகிறது. பார்வை, பேச்சு எல்லாம் ஒருவரை ஒருவர் பருகுவார் போல, வேட்கையுடனும் ஆர்வத்துடனும் பழகுமாறு அமைந் திருக்கும்.

**அன்(பு)ஈனும் ஆர்வ முடைமை அதுஈனும்**
**நண்பென்னும் நாடாச் சிறப்பு. (அன்புடைமை 74)**

அன்புடையார்மாட்டுப் பலருக்கும் பழகும்படியான ஆர்வமுடைமை தோன்றும். அவரை யாவரும் விருப்பத்தோடு அணுகுவர். அதனால் நட்பு எனப்படுகிற அளவற்ற பெருஞ்சிறப்பு வாய்க்கும். நட்பை முறிக்க வேண்டுமேல் அன்பைக் கைவிட்டால் போதும். அன்பு என்பது ஈரமுடைமை. ஈரமுள்ள இடத்தில் பயிர் தழைப்பதுபோல், அன்புள்ள இடத்திலேயே நட்புப் பயிர் தழைக்கும். இந்த அன்பு, பகைவரிடத்தும் பழகவேண்டு மென்ற விருப்பமுடைமையைத் தோற்றுவிக்க வல்லதாகும்.

## முகமலர்ச்சியும் இன்சொல்லும்

அன்பு வெளிப்படவேண்டுமெனில் முகமலர்ச்சியும் இன்சொல்லும் இயல்பாக அமையவேண்டும். பழக வேண்டுமென்ற உந்துதலை உண்டாக்குவது முக மலர்ச்சி யேயாகும்.

உலகில் சிலரைப் பார்த்ததும் அவர் முகமே வெறுப்பை உண்டாக்கும். அந்த அளவு முகத்தைத் தொங்கப் போட்டுக்

கொண்டிருப்பர். முகமலர்ச்சி, முறுவல், புன்னகை, இனியபேச்சு உடையாரிடம் யாவரும் நெருங்கிப் பேச விழைவர். இவை இயல்பாக அமையவேண்டும்.

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். (இனியவை கூறல் 93)

முகத்தினால் மலர்ந்து விருப்பத்துடன் இனிமையாகப் பார்த்து, உள்ளத்திலிருந்து வரும் இன்சொற்களைப் பேசுவதே அறநெறியாகும். அறநெறியே வெற்றி தரும் நெறி. இனிய நலவாழ்விற்கு வழிவகுப்பதே இவ் அறநெறியாகும்.

பலர் அறநெறி வீட்டுலகிற்கு வழிகாட்டுவதற்கே என எண்ணுவது, திருவள்ளுவருக்கு உடன்பாடில்லை. இவ்வுலக நலவாழ்வே அதன் முதலாவதும் முடிவானதுமான பயனாகும். இதில் வெற்றி பெற்றவரே 'எழுமை எழுபிறப்பும் சிறப்புறுவர்' என்று கூறி, மீண்டும் இப் பிறவியின் சிறப்பிற்கே மனித குலத்தை அழைத்துச் செல்வது வள்ளுவர் வழியாகும்.

## அறிஞர் பழகும் முறை

அறிஞர்கள் பல நூல்களைக் கற்ற புலமையுடையார். அவர்கள் ஒருவர் ஒருவரைத் தலைக் கூடுதலென்பது, சந்திப்பது. பலரும் ஒருங்குகூடுங்கால் மனமகிழ்ச்சி உண்டாகக் கூடுவார்களாம்; பிரியும்போது மீண்டும் எப்போது இதுபோல் கூடுவோம் என நினையுமாறு பிரிவார்களாம். இவற்றை நாம் அறநெறிக் தலைச்சொற்கள் போல் கருதவேண்டும்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில். (கல்வி 394)

கல்வியின் பயன் அதுவேயாகும். இன்றேல் படித்தும் பதரானார் என்றே கருதவேண்டும். அன்றாடம் சந்திக்கும்போதும் பிரியும்போதும் 'உவப்பத் தலைக்கூடல்' வேண்டும்; 'உள்ளப் பிரிதல் வேண்டும்'. புலமையுடன்

கூடும்போது பூசல் தொடங்கும்; பிரியும்போது புகைச்சல் தொடரும். இப்பழக்கம் மானுடத்தைச் சிறுமைப் படுத்திவிடும்.

## ஒரு தீச்சொல் கூடப் பழக்கத்தை முறித்துவிடும்

நண்பர்களுடன் பழகும்போது, வாய்ப்பேச்சில் கருத்தாக இருக்க வேண்டும். உரிமை பற்றி, வெளிப்படவும் பேசிவிடக் கூடும்; வேண்டாத ஒன்றையும் சொல்லிவிடக் கூடும். நண்பர் கால் முடமாயிருக்கலாம்; கண் பார்வை குறைவாயிருக்கலாம்; திக்கு வாயராயிருக்கலாம்; வழுக்கை தலையாய்க் காணப் படலாம். எக்குறையையும் இழிவு தோன்றச் சுட்டிச் சொல்லிவிடக் கூடாது. அவருக்குத் தீங்குதரும் ஒன்றைச் சொல்வதும் தவறு. எல்லாம் நல்லனவாகத்தானே பேசினோம்; இந்த ஒன்றைச் சொன்னதால் என்னவாம் எனக் கேட்கக் கூடாது. அந்த ஒன்றுதான் 'வடுப்போல' உள்ளத்துள் கிடந்து, ஒருநாள் 'வன்மமாய்' மாறித் தீராப் பகையை விளைத்துவிடும். அதுமட்டுமன்றி, மனிதர்கள் தம்முள் பழகும் பண்பாடு என்பது, ஒரு தவறான சொல்கூட வாயில் வராமல் காப்பதில்தான் இருக்கிறது.

**ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்**
**நன்றாகா தாகி விடும்.** (அடக்கமுடைமை 128)

ஒருவர் நல்லனவாக்வே பேசி வருவனவற்றுள், இடையே ஒரு சொல் தீயதாய் அமைந்துவிடுமேல்-தீய சொல்லின் பொருளைப் பயந்து அதனால் வரும் துன்பத்தை விளைவித்துவிடுமேல், அவன் கூறிய-பழகிய அனைத்துமே நன்றாகாது தீதாகிப்போகும். அந்த ஒன்றால், பிற நல்லனவும் கெடுமாம்.

## பயனில பேசாமை

சிலர் பயனற்றவற்றைப் பேசுவதையே வழக்கமாகக் கொண்டிருப்பர். வேண்டாத ஊர்க் கதை பேசுதல், தமக்குத்

தொடர்பில்லாதவற்றில் தலையிட்டுப் பேசுதல், வேலை செய்பவர்களைச் செய்யவிடாமல் பேச்சை அளந்த படியிருத்தல், தாமும் கெட்டுப் பிறரும் கெடுமாறு பேசிப்பேசியே வெறுப்பை விளைவித்தல் - இவை சிலரது பிறவிக்குணம் போல விளங்கும். அவர்களைக் கண்டாலே பலர் அஞ்சி நடுங்குவர்; அருவருப்புக் கொள்வர்.

இது நல்லவர்களுடன் பழகுவதைக் கெடுக்கும்; நட்பை முறிக்கும்; பிறர் இகழ்ந்து பழிக்க நேரும்.

**பல்லார் முனியப் பயனில சொல்லுவான்**
**எல்லாரும் எள்ளப் படும். (பயனில சொல்லாமை 191)**

'பலரும் வெறுக்கும்படியாகப் பயனற்றவற்றைப் பேசுகிறவர், எல்லாராலும் எள்ளி நகையாடப் படுவார். அவரால் உலகிற்கு எவ்விதப் பயனுமில்லை.'

கல்வி கற்ற சிறப்புக்குரியவர்கள் பயனற்றவற்றைப் பேசினால் அவர்களது பெருமையும் சிறப்பும் அவரை விட்டு நீங்கிவிடும். பயனற்றவற்றைப் பேசுவதைப் பெருமை என்று கருதி, அதைக் கைக்கொள்பவரை மனிதர் என்பதை விட, மக்களுட் பிறந்துவிட்ட பதர் என்றே கூறவேண்டும்.

## தன்னை வியவற்க!

பிறரினும் தான் அறிவுடையவராக இருக்கலாம். ஆனால் அவர்களுடன் பழகும்போது தாம் மேலானவர், அறிவு மிக்கவர், திறமையாளர் என்று வியந்து பேசுதல் கூடாது. "நீ பிறரினும் மேலானவனாக இரு. ஆனால் மேலானவன் என்று சொல்லிக் கொள்ளாதே" என்பர். அது பலவிதத் தீங்குகளுக்கு வழிசெய்யும். சமமாகப் பழகுபவர் சிலரது மனத்தைப் புண்படுத்தலாம்; பொறாமையை விளைவிக்கலாம்; சமயம் பார்த்து வீழ்த்தும் எண்ணத்தை யாரிடத்தேனும் ஏற்படுத்தலாம். ஏன்? அங்ஙனம் தம்மை

வியந்துகொண்டவரே, செருக்கு மிகுந்து. தவறு செய்து பின்னடைதல் கூடும்.

வியவற்க எஞ்ஞான்றும் தன்னை; நயவற்க
நன்றி பயவா வினை. (குற்றங்கடிதல் 439)

எந்தச் சூழ்நிலையிலும் தன்னைத் தானே வியந்து பேசுதலைத் தவிர்க! அதுபோல் நன்மை தராத எச்செயலையும் விரும்புதல் தவிர்க!

தாசன் பிறரால் புகழப்படலாம்; தன்னைத்தானே புகழ்தல் கூடாது. தான் பிறரால் வியந்து பேசப்படலாம்; தன்னை வியந்து தானே பேசுதல் தவறு. தான் இயல்பாகப் பிறரால் மதிக்கப்படவேண்டும். தன்னைப் பிறர் மதிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தக் கூடாது. செயற்கை மதிப்பு, இருவர்க்கும் இழிவையே தரும்.

## அறிவிலாரோடு பழகும் முறை

கூரிய அவையுடையார் கூடிய அவைக்கண், தம் கூர்த்த மதி தோன்றப் பேசவேண்டும்; அறிவற்ற 'வெள்ளைகள்' முன், அவரினும் வெள்ளையாய் - மிக வெண்மையான சுண்ணாம்பு வெள்ளைபோல் - தம்மைக் காட்டிக்கொள்ள வேண்டும்.

ஒளியார்முன் ஒள்ளிய ராதல்; வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல். (அவையறிதல் 714)

ஒளியார் - ஒள்ளியவர், அறிவுக் கூர்மையுடையவர். வெள்ளை - அறிவில்லாதவர். வெளியார் - ஒளியார்க்கு எதிர்ச்சொல். வெள்ளைகள் - அறிவற்றர்கள். அவர்முன் 'வான்சுதை வண்ணம்' கொள்ளுதலென்றால், வான் வெண்மையான, சுதை - சுண்ணாம்பினது நிறங்

கொள்ளுதல். 'அவர் வெள்ளையாயின், நீ அவரினும் மிகுவெள்ளையாய் ஆகுக' என்று கூறுகிறார்.

ஓர் அவைக்கண் பேசுதற்கேயன்றி, ஒருவரோடு ஒருவர் பழகுதற்கும் இது பொருந்தும். ஒளியார்முன் தாமும் ஒள்ளியராய்ப் பழகுதலும், வெளியார்முன் அவரினும் வெளியராய்ப் பழகுதலுமே நல்லது. அறிவிலார் முன் அறிவுடையராய்ப் பழகினால், அறிவு பயன்படாதது மட்டுமன்றி, இழிக்கப்படவும் கூடும். ஆதலால் தாமும் அறிவிலார் போல் நடந்து காட்டிப் போனால், இடர்ப்பாடின்றி முடியும்.

## மூத்தோருடன் பழகுதல்

தம்மை விட அகவை மிக்கவர், அறிவு மிக்கவர் கூடிய அவைக்கண், தான் 'முந்திரிக் கொட்டை போல்' முந்திக் கொண்டு எதையும் பேசக்கூடாது. ஒருவருடன் பழகும்போதும், பலராக இருந்து உரையாடும்போதும், நம்மிலும் அகவை, கல்வி, புலமை, திறமைகளில் முதிர்ச்சியுள்ளவர்கள் இருக்கலாம். அத்தகைய சூழலில் அம் 'மூத்தோரைப்' பேசவிட்டுப் பிறகு நாம் பேசவேண்டுமே தவிர, நாம் முந்தக் கூடாது. அவ்வாறு முந்திப் பேசாத அடக்கமுடைமை, ஒருவருக்கு நன்றென்ற பலவற்றுள்ளும் சிறந்த நன்மையைப் பயக்கும்.

நன்றென்ற வற்றுள்ளும் நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு (அவையறிதல் 714)

முதுவர் - மூத்தோர். கல்வி கேள்விகளால் முதிர்ந்தவர்; வயதில் முதிர்ந்தவர். 'முதுமை' என்ற சொல் 'அறிவு முதிர்ச்சி'யையும் குறிக்கும். ஆக நம்மைவிட ஒருபடி மேலானவர் - முதிர்ந்தவர் இருக்குமிடத்தே அடக்க முடைமை பேணினால், அவராலும் அனைவராலும் நன்கு மதிக்கப்படுவர். இது ஒரு நல்ல பழகும் பண்பாடாகும்.

## மனவேற்றுமைப்பட்டாருடன் பழகுதல்

மனவேற்றுமை 'இகல்' எனப்படும். அது வளர்ந்து பகைமைக்கு வழிவகுக்கும். சிறு மனவேற்றுமையை வளர்ப்பது, சிறு தீப்பொறியை ஊர் சுடும் நெருப்பாகப் பெருக்குவதாகும். அங்கு விட்டுக்கொடுத்துப் போவது, அவரையும் நட்பாக்கிப் பல நன்மைகளை விளைவிக்கும். அல்லது பகையை வளர்த்துக் கொள்ளாது இருக்கவேனும் வழிகாட்டும்.

**இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை**
**மிகலூக்கின் ஊக்குமாம் கேடு. (இகல் 858)**

இகல் என்னும் மனவேற்றுமை வந்தவிடத்து, அதற்கு எதிராய்ச் சிறிது விட்டுக் கொடுத்துப் போதலே 'எதிர் சாய்தல்' ஆகும். எதிரே சிறிது முரணின்றி, இணங்கிப் போதல் அது. நேரே முட்டாமல் சிறிது சாய்தலென்பது, அவ்வேற்றுமையைப் பெரிதுபடுத்தாது, தான் முன்னதாக விட்டுக் கொடுப்பதேயாம். அதுவே ஆக்கம் தரும். அல்லாமல், சிறு 'இகலை', மிகப் பெரிதுபடுத்தி, முரணி நின்றால், அது கேட்டைத் தான் பெரிதாக விளைவிக்கும்.

அலுவலகத்தில், கல்விக்கூடத்தில், விளையாட்டுக் குழுவில், குடும்பத்தில் 'இகல்' ஏற்படும்; கருத்துவேற்றுமை முளைக்கும். அங்கெல்லாம் பெருந்தகைமையுடையவர்கள் சற்றே விட்டுக்கொடுத்து, 'எதிரே சாய்ந்து' போனால், சிறப்பும் சீர்மையும் பெருகும். இகலை மிகலூக்கினால் - மிகுதிப்படுத்தினால், கேடு தான் கூடுதலாகும்.

இதனை அன்று அரசர்கள் கடைப்பிடித்திருக்கலாம். இன்று குழுவாகப் பணிசெய்யும் ஓர் அலுவலகப் பழகும் பண்பாடாய்க் கொள்ளவும் இக்குறள் இடந்தருகிறது!

## பணிவையே காட்டுக! தோல்வியை ஏற்கவும் துணிக!

பலருடன் சமமாய்ப் பழக வேண்டிய மன்பதைக்கண் - சமுதாயத்தில், 'பணியுமாம் என்றும் பெருமை' என்று, தாம் கல்வி, செல்வத்தால் பிறரினும் மேம்பட்டவராக இருந்தாலும் எல்லோர்க்கும் பணிவுகாட்டி, அன்புடன் பழகினால் அதைப் பலரும் மதித்துப் போற்றுவர்.

சிலபோது நம்மினும் தாழ்ந்த நிலையிலுள்ளார், நம்மை வெல்ல வேண்டுமென்று துள்ளுவர்; துடிப்பர்.

அவர் நம்மை வென்று ஆகப்போவது ஒன்றுமில்லை என்பது தெரியும். நம்மிடம் அதனால் இழப்பேதும் பெரிதாக ஏற்பட்டுவிடாது என்பதும் தெளிவு. குழந்தை குட்டும்போது அதைக் குனிந்து வாங்கிக்கொண்டு சிரித்து மகிழும் தந்தைபோல நடப்பது சான்றாண்மைக்கு அடையாள மாகும்.

சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல். (சான்றாண்மை 986)

கட்டளைக்கல் - உரைகல். பொன்னை உரைத்து மாற்றுப் பார்க்கும் கல். சால்பு - பண்பு நிறைந்த சான்றாண்மை. துலை - துலாக்கோல்; தராசு. துலை யல்லார் - நிறையில் சமமில்லாதார், தம்மைவிடத் தாழ்ந்தவர். அவ்வாறு கீழ்நிலையில் உள்ளவரிடமும், தாம் வெல்லும் ஆற்றலுடையவராயிருந்தும், தோல்வியை ஏற்றுக் கொள்ளுதல், உயர்ந்த சால்புடைமைக்கு அளவுகோலாகும். சால்புக்கு உரைக்கல்லாகுமென்பது, அச் சால்பின் உயர்ந்த மாற்றைக் காட்டும் என்பதாம். ஒப்பாவார் மாட்டும் உயர்ந்தாரிடத்தும் தோல்வியை ஏற்பின், பெருமையாகாது. ஆனால் தம்மில் வலிமையாலும் பிறவற்றாலும் தாழ்ந்தாரிடத்துத் தம்மிடம் வெல்லும் திறனிருந்தும்

தோல்வியை ஏற்றால், அதைப் போன்ற பெருமை வேறொன்றுமில்லை.

அமெரிக்காவில் இரண்டு கார்க் கம்பெனிகள்; இரண்டும் போட்டி போட்டு இழப்பில் ஓடின. இரு குழுமங் களுமே கதவை மூடும் நிலை. அதில் மிகவும் கூடுதலான செல்வர், மற்றவரை ஒரு விடுதியில் விருந்துக்கு அழைத்தார். "நாம் இருவரும் இவ்வாறு போட்டியிட்டு இரு தரப்பிலும் இழப்பேற் படவேண்டாம். இரு குழுமங்களையும் இனி ஒன்றாக்குவோம். குழுமத்திற்கு உமது பெயரையே வைப்போம். என்ன சொல்கிறீர்?" என்று கேட்டார். உடனே அவர் மனம் மகிழ்ந்து போனது. முன்னவர் சொன்ன திட்டங்களுக்கெல்லாம் ஒத்துவந்தார். சில திங்கள்களில் இருவரும் மிகப்பெரிய செல்வர்களாயினர். தாம் வெல்லும் ஆற்றலுடையவராய் இருந்தும், தோல்வியை ஏற்றுப் பகையை ஒழித்த சான்றாண்மை இருவரையும் வாழவைத்தன்றோ?

## பிறர் குற்றம் தூற்றாதே!

பிறர் குற்றங்குறைகளையும் பிறர் படும் அவதிகளையும் பேசுவதில் தனி மகிழ்ச்சியடைவதைச் சிலரிடம் காணலாம். அவர்கள் தங்களைப் பற்றியும் மற்றவர்கள் இவ்வாறு பேசுவார்களே என்பதை நினைப்பதே இல்லை. இவற்றை எல்லாம் திருவள்ளுவர் சுட்டிக் காட்டுகின்றார். பிறர்பால் குறைகள், துன்பங்கள் காணப்பட்டாலும் அவற்றைப் பெரிதுபடுத்தாமலும், வெளியில் சொல்லித் தூற்றாமலும் இருப்பதே பெருமை-பெரியவர்கள் செயலாகும். சிறுபுத்தியுள்ளவர்கள் பிறர்பாலுள்ள குணங்களை மறைத்துக் குற்றங்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தூற்றுவதே தொழிலாகக் கொள்வர்.

அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும். (பெருமை 980)

அற்றம் - குறைபாடு, துன்பம். குற்றத்தையே தேடிப் பேசித் தூற்றிப் பழக்கப்பட்டுவிட்டால், பிறகு நன்மை கண்ணிற்படாது; பிறர் தீமைதான் கண்ணிற்படும். இஃதோர் உளவியல்; பழக்கத்தால் வரும் தொற்றுநோய்; பரவிக்கொண்டே இருக்கும். பெருமையுடையார் இதற்கு அடிப்படமாட்டார்; சிறியவர்களோ இதைக் கைவிட மாட்டார்கள்!

ஒருவரிடமிருக்கும் நல்ல பண்புகளைக் காண முயல்வதாலும், தீய பண்புகளைக் கண்டாலும் மறக்க முயல்வதாலும் மானுடம் பெருமை பெறும்.

பண்புடன் பழகுதல்

ஒருவர்க்குத் திக்குவாய் என்று வைத்துக் கொள்ளுங்கள். விளையாட்டாக, ஏதேனும் ஒருமுறை நாமும் அதுபோலத் திக்கிக்காட்டிக் கேலிப் பேசினால், அது அவர் மனத்தின் ஆழத்தே வடுவாய்க் கிடக்கும். அப்போதைக்கு அவரும் நம்மோடு சேர்ந்து சிரித்தாலும், அது உள்ளத்தின் ஆழத்தே பதிந்துகிடந்து, பல உருவங்களில் பிறகு வெளிப்படும். சொந்தப் பிள்ளைகளிடம் கூட, இதுபோன்ற கிண்டல் பெரும் பாதிப்பை விளைவிக்கும்.

நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி; பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. (பண்புடைமை 994)

நண்பர்களிடம் விளையாட்டாய்ப் பேசிச் சிரித்தற் கண்ணும் இகழ்ந்து பேசுதல் தீங்கையுண்டாக்கும். பகையுள்ளவிடத்தும், அவரவர் பாடறிந்து ஒழுகு வாரிடத்துப் பண்பாக நடக்கும் பழக்கமே உளதாகும். 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்' என்பது கலித்தொகை. அவரவர் பாடு-இயல்பு அறிந்து அவரவர்க்கு ஏற்ப நடத்தலே பண்பாடெனப்படும். பகைவரிடத்திலும் பண்புடையார், அவரவர் இயல்பறிந்து நடப்பர்.

நகையுள்ளும் இகழ்ச்சி கூடாது! பகையுள்ளும் பண்பு வேண்டும்; பண்பாக நடந்துகொள்ளக் கூடிய இடங்களும் உள என்பதாம்.

பகைவரிடத்திலும், பகைமையுள்ள அதே சமயம் பண்பாகவும் நடப்பதென்னும் இது, மனித நேயத்தின் உச்சத்தைக் காட்டுகிறது. வாலியை மறைந்துநின்று கொன்றபொழுது, 'பகையுள்ளும் பண்பு' என்று கூற முடியவில்லை. அதை 'இராசதந்திரம்' என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அதே இராமன் படைகளையும் படைக்கலன்களையும் இழந்து நின்ற இராவணனைப் பார்த்து, 'இன்று போய் நாளைவா' என்றது பகையாவாரிடத்திலும் பண்புடன் நடந்து கொள்ளக் கூடிய இடங்களுள என்று கருத்தை அரண் செய்கிறது.

தேனியல் கார்னல்கி என்ற அமெரிக்கப் பேராசிரியர் எழுதிய "நண்பர்களைக் கவர்வதும் மக்களை ஈர்ப்பதும் எவ்வாறு?" (How to win friends and influence people) என்ற நூலை நீண்ட காலத்திற்கு முன்னால் படிக்க நேர்ந்தபொழுது, அதில் காணப்பட்ட பல கருத்துக்கள் நம் திருக்குறளோடு ஒத்திருக்கக் கண்டு வியப்பேற்பட்டது. "விளையாட்டாகக் கூட, நண்பரிடம் உள்ள குறையைச் சுட்டிக்காட்டி நகையாடி விடாதே; அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். பழகுவார் பெயரை நன்றாக நினைவில் வைத்துக்கொள். சில நாள் இடைவெளிக்குப் பிறகு சந்திக்க நேர்ந்தபோது, பெயரைச் சொல்லி அழைத்துப் பேசினால், அவர் உம்பால் மிகுந்த ஈடுபாடு கொள்வார். ஒருவர் பெயரைச் சுட்டி அழைப்பது, அவரிடம் உள்ள ஒரு நல்ல திறனைச் சுட்டிக்காட்டுவது எல்லாம் அன்பை வளர்க்கும் உத்திகள்" என அவர் எழுதியிருந்தன பல குறிப்பிடற் பாலன. இன்று மேலைநாட்டரால் ஆயிரக் கணக்கில் தன்முன்னேற்ற நூல்கள், தன்முயற்சிப் புத்தகங்கள் எழுதப்பட்டு வருகின்றன; கோடிக் கணக்கான படிகள் விற்கப்படுகின்றன.

திருவள்ளுவர் உலகில் ஒவ்வொருவரும் முன்னேற வழிகாட்டுகிறார். பல படிநிலைகளில் உள்ளார்க்கு, அவ ரவர் தன்னம்பிக்கை கொள்ளுமாறு அறம் கூறி, அவர்களை ஊக்கப்படுத்துகிறார். தன்முயற்சி, தன்னம்பிக்கை, உழைப்பு, மக்கள் முன்னேற்றம், உலக நல்வாழ்வு - இவையே குறள் கூறும் வாழ்வு நெறிகள்! எம்மைக் கேட்டால், உலகில் தன்முன்னேற்றச் சிந்தனைநூல், தன்னம்பிக்கை நூல் ஒன்றை முதன்முதலாக எழுதிய பெருமை நம் தெய்வப் புலவருக்கே உண்டு.

## மேலதிகாரிகளுடனும் பெரியோர்களுடனும் பழகுதல்

வேந்தர்களுடன் பழகும் பொழுது, அவர்களை மிகவும் நெருங்குவதும் கூடாது; மிக விலகிப் போவதும் கூடாது என்று வள்ளுவம் கூறுகிறது.

குளிர் காலத்தில் நெருப்பு வ...த்து, குளிர் காய்பவர்கள் மிக நெருங்கினால் நெருப்புச் சுடும்; மிக விலகிப் போனால் குளிர் காயும் பயன் கிடைக்காது. வேந்தர்கள் சிறு பிழை கண்டாலும் பகைக்க முற்படும் குணம் உடையவர்கள். எனவே அவர்களை அணுகாது, அகலாது பழக வேண்டும்.

அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார். (மன்னரைச்
சேர்ந்தொழுகல் 691)

இன்று மேலதிகாரிகள், காவல் துறையினர் போல்வாருடன் மிக விலகிப் போகாமலும் மிக நெருங்காமலும் பழகுவதே நன்மை பயக்கும். பக்கத்து வீட்டாரிடம் கூட, இப்பழகும் முறையே பயன்படும். இன்று 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' அல்லவா? அதனால் அன்று வேந்தர்க்கு என்று சிறப்பித்துச் சொன்னது, இன்று பெரும்பான்மையோரிடத்தில் பொருந்தி வருகிறது. இதனால் ஓர் அலுவலத்திற் கூட, ஒருவர் மிகுந்த

பாதிப்புகட்கு ஆட்படாமல், பலருடன் பழகிக் காலத்தைக் கழிக்க முடிகிறது.

பழகும் நெறிமுறையில் 'அகலாது, அணுகாது' என்பது ஒரு பொது விதியாகிவிட்டது.

அரசர் அல்லது அதிகாரிகள், பெரியவர்கள் கூடியிருக்கு மிடத்தில் அவர் பார்க்க, ஒருவர் மற்றவரிடம் செவியினுள் ஏதேனும் மறைபொருள் போல் பேசுதலும் சிலராகக் கூடிச் சிரித்தலும் கூடவே கூடாவாம்.

செவிச்சொல்லும் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து. (மன்னரைச் சேர்ந்தொழுகல் 694)

மேன்மை பொருந்திய பெரியோருள்ள இடத்தில், 'செவிச்சொல்' – காதுக்குள் இரகசியம் பேசுதல் கூடாது; சேர்ந்த நகை – சிலராகச் சேர்ந்து, அவர் பார்க்கத் தம்முட் சிரித்துப் பேசுவதும் தவறு. இவை அவரை அவமதிப் பனவாம்; அப்பெரியவர்களைப் பெருமைப் படுத்துவ தாகாது. மேலும் அவர்கள் தம்மைப் பற்றி ஏளனமாகப் பேசுவதாக, சிரிப்பதாக எடுத்துக்கொள்ளவும் நேரும். பொதுவாக ஒருவர் காண, அவர்முன் இவ்வாறு நடந்து கொண்டாலே அவருக்கு ஐயமும் வருத்தமும் ஏற்படுவது உறுதி. இன்றைய கல்வியறிவில்லாத இளைஞர்களிடம், இதுபோன்ற சிறிய செயல்களை நிரம்பக் காணலாம். இவையாவும் பழகும் பண்பாடுகளல்ல; மனித உறவுக்கு உகந்தனவும் ஆகா.

ஒருவர் நம் கீழ் வேலை பார்த்திருக்கலாம்; நம்மிடம் பள்ளியில் படித்திருக்கலாம்; நமக்கு உறவாகவோ நம்மைவிடத் தாழ்ந்தநிலையில் நாம் காண வாழ்ந்தவ ராகவோ இருக்கலாம். இன்று அவர் ஒரு பெரும் பதவிக்கு வந்துவிட்டாரெனில் எவ்வாறு நடந்து கொள்வது? மாவட்ட

ஆட்சியராகிவிட்டார்; அமைச்சராகி விட்டார் என்றால், அவரது இன்றைய நிலை நம்மினும் சிறந்ததாகும். அந்நிலையில் நாம் அவருக்குரிய மதிப்பைக் கொடுத்தே நடந்துகொள்ள வேண்டும். பழமையை எண்ணிக் கொண்டிருக்கக் கூடாது.

இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோடு ஒழுகப் படும். (மன்னரைச் சேர்ந்தொழுகல் 698)

நின்ற ஒளியோடு, அவர் பெற்றிருக்கும் தலைமை, பதவி, சிறப்புக்குத் தக நடத்தல். வயதில் இளையவர், கீழே இருந்தவர் எனவும் இன்ன வகையால் உறவோ, தொடர்போ உடையவராயிருந்தவர் எனவும் எண்ணி அலட்சியப் படுத்துதல் கூடாது. அவர் வருங்கால் பலரும் எழுந்துநின்றால் நாமும் எழுந்து நிற்பதே முறை. அவருக்கு உரிய மரியாதை கொடுத்து அணுகுதலே தக்கது.

பழகும் முறையை, அன்றாட வாழ்க்கையில் வைத்துக் கற்பிக்கும் எவ்வளவு அருமையான குறள் இது என்று எண்ணிப் பார்க்கவேண்டும். இது போன்ற குறள்கள் பலவுள. இவை பின்பற்றி, நல்வாழ்வு பெற எழுதப்பட்டவை என்பதற்கு இதைப் போன்ற குறள்களே சான்றல்லவா?

## எல்லோருடனும் மகிழ்ந்து சிரித்துப் பழகுதல்

மாந்தர் பழகும் முறையிலேதான் பண்பாடு இருக்கிறது. பண்புடைமை என்பது என்ன? அது எப்போது, எவ்வாறு வெளிப்படும்? ஒருவர் ஒருவரைக் காணும்போது முகம் மலர்கிறோம்; வணக்கம் சொல்கிறோம்; நல்வாழ்த்துக் கூறுகிறோம். எதற்காக? விலங்குகள் அவ்வாறு செய்வ தில்லை. அவற்றுக்குப் பகுத்தறிவு இல்லை; பேசும் மொழியில்லை; நினையும் மனம் இல்லை. அவை ஒன்றை ஒன்று பார்க்கும்போது, நெருங்கும்போது உராய்ந்து சென்றாலும் உணர்ச்சி வெளிப்பாடிராது. மனிதர்களிலும் சிலர் அஃதே போல், எவ்வித உணர்வுமின்றிப் போவர்;

வருவர். அவர்கட்கும் அவைகட்கும் வேறுபாடில்லை; பாவம்! அதுகளாகப் பிறக்க வேண்டியவர். மானிடப் பிறப்புக்கேற்ற அச்சு, அடையாளமின்றி உலவுவர்.

நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள். (பண்புடைமை 999)

எவரோடும் கலந்து பழகி, உள்மகிழ்ந்து அதை வெளிப்படுத்தி வாழ மாட்டாதார்க்குப் பகலும் இருள் போன்றதேயாகும் என்பது கருத்து. மாஇரு ஞாலம் - பெரிய அகன்ற உலகம். இவ்வளவு பெரிய உலகத்தில் வாழ அறியவில்லை. பகலும் இருள் பால்பட்டன்று - பகலிலும் இவ்வுலகம் இருளின் பாற்பட்டதாகும். ஒளியுடனிருந்து என்ன பயன்? இவர்தாம் எவர் முகத்தையும் பார்ப்பதில்லையே; சிரிப்பதில் வணங்கலையே வாழ்த்த நினைப்பதில்லையே! இருளில் உலவுவார் போல் உலவுவதால், பகலும் அன்னார்க்கு இரவேயாகும் என்றார்.

இருள்சூழ்ந்த உலகில் வாழ்வது போலவே அவர்கள் உலவ நேரும். அன்னார்க்கு ஒளியுலகம் தோன்றவே தோன்றாது. பகலும் இருளாவதால், ஒளிக்கீற்று இல்லாத இருளிலேயே கிடந்துழலும் தன்மையராவர் என்பதாம்.

## பழகுதலின் உச்சம்

மாந்தர் ஒருவருடன் ஒருவர் பழகுவதன் உச்சத்தையும் நம் தெய்வப் புலவர் தொட்டுக் காட்டுகிறார்.

ஒன்றாகப் பழகியவர்கள், அப்பழக்கம் காரணமாக ஒருவர் மீது ஒருவர் உரிமை கொண்டாடுவார்கள். அவ்வுரிமை காரணமாகச் சிலபோது மிகையாக நடந்துகொள்வார்கள். அம் மிகையையும் - சற்று எல்லை கடந்து கூடுதலாக நடப்பதையும் பழைய நட்புக் காரணமாகப் பொறுப்பதை, பழைய நட்பை மறவாது என்றென்றும் போற்றுவதை நட்பிலே ஒரு வகையாக்கி,

'பழைமை' என்பார் திருவள்ளுவர். அது காரணமாக வரும் உரிமையைக் 'கெழுதகைமை' என்பார். நட்பார் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் உரிமை இது. இன்று 'கெழுதகைமை சான்ற நண்பர்களே' என விளிப்பது இது பற்றியேயாகும்.

இவ்வாறாகப் பழகும் முறை பற்றிப் பலகோணங்களில் பார்த்துப் பற்பல நெறிமுறைகளை நூற்றுக்கணக்கான வள்ளுவங்களாகத் தந்துள்ள திருக்குறள், அதன் உச்சமாகச் சொல்வதொன்றுண்டு. நண்பர்களாய்ப் பழகியவர்களால் ஏற்படும் சிறுசிறு தொந்தரவுகளைத் தாங்கிக்கொள்ள வேண்டும். அதன் மேலெல்லையாக, அவர்கள் நஞ்சினையே பெய்து முன் வைத்தாலும், அதனையும் உண்டு அமைதி கொள்வது, மனித நாகரிகத்தின் உச்சமன்றோ?

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர். (கண்ணோட்டம் 580)

நன்றாகப் பழகியவர் தமக்கு முன்னே, தம்மைக் கொல்ல என நஞ்சினைப் பெய்து வைக்கக் கண்டும் - நன்கு தெரிந்தும் - அதனை, பழக்கம், நட்புக் காரணமாக உண்டு, அமைதி கொள்வர்; யாரெனில் உலகமே விரும்பத் தக்க மனித நாகரிகத்தைக் காக்க விழைபவர் என்பதாம்.

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர். (355)

என்பது நற்றிணை. இதனால் இது தமிழர்தம் பண்பாட்டுச் சிந்தனை என அறியலாம். பாற்கடல் கடைந்தபோது, முதலில் வெளிப்பட்ட நஞ்சினைத் தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கச் சிவபெருமான் எடுத்துண்டதாக வரும். புராணக் கதையிலும் இந் 'நாகரிகம்' காணப்படுகிறது. பிறர் பொருட்டுத் தாம் துயருறுவார்

யாவரும் இத்தகைய நாகரிகம் காப்பவரே. குழந்தைக்காக மருந்துண்ணும் தாய்; தங்கையைத் திருமணம் செய்து வைப்பதற்காகத் தன் திருமணத்தைத் தள்ளிப்போடும் தமையன்; நாட்டு விடுதலை, மொழி விடுதலைக்காகத் தடியடிபட்டுச் சிறையில் வாடும் தொண்டர் எல்லோரும் இவ்வாறான 'நனி நாகரிகம்' உடையவர்களோயன்றோ?

கிரேக்கப் பேரறிஞன் சாக்கிரட்டீசு தன்னால் அறிவு கொளுத்தப்பட்டவர்களாலும் அருகிருந்து பழகியவர் களாலுமே கொல்லத் திட்டமிடப்பட்டான். அவர்கள் கோப்பையில் நஞ்சைப் பெய்து, எதிரே வைத்தபோது, கண்ணோட்டமிக்க அம் மனிதநேய மாமேதை, அதை எடுத்துண்டு மீளா அமைதி காக்கவில்லை? அவ் வரலாற்றை அறிந்துதான் நம் வள்ளுவப்பேராசான் இக் குறளை யாத்தாரோ? அல்லது தன்னியல்பாக இக்குறள் அவர் முடிவுக்கு முற்றிலும் பொருந்தி வருகிறதோ? யாமறியோம்.

உலகப் பேரறிஞர் இருவர்தம் கருத்தும் வாழ்வும் முற்றிலும் ஒத்துப்போவதுதான் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது!

மனித நாகரிகத்தைச் சிதைக்கும் சூழல்களே, எங்கெங்கும் காணப்படும் இக்காலத்தில், மேலும் மேலும் மனித நேயம் – மனிதப் பண்பாடு – மனித நாகரிகம் ஆகியவற்றின் உச்சத்திற்கு, ஏறுமுகமாக அழைத்துச் செல்ல வல்லது நம் வள்ளுவமேயாம்.

◪